பக்கங்கள்: பதினெட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2034 கார்த்திகை 29 திங்கட்கிழமை (15-12-2003) UTHAYAN - A Lively National Tamil Daily

# சதாம் கைது!

நியூயோர்க் டிசெம்பர் 15

ஈராக்கின் பதவி கவிழ்க்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார். தமது சொந்த ஊரான திக்ரித்திலிருந்து 15 கிலோமீற்றர் தொலைவிலுள்ள அத்வார் என்ற நகரில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

செய்தியாளர் மாநாடு ஒன்றைக் கூட்டிய ஈராக்குக்கான அமெரிக்க நிர்வாகி போல் பிறமர் "We got him" (அவர் எம்மிடம் மாட்டிக் கொண்டார்) - என்று கூறி, சதாம் கைதுசெய்யப்பட்ட செய்தியை உறுதி செய்தார்.

சதாம் கைதுசெய்யப்பட்ட பின்னர், அவர் வைத்திய சோதனைக்கு உட்படுத்தப்படுவதை உலகெங்கிலுமுள்ள தொலைக்காட்சிகள் காண்பித்தன. அந்தப் படங்களில் அழுக்கான ஆடைகளுடன் தளர்ந்து, சோர்வுற்றுக் களைத்த ஒரு வயோதிபர் போல நீண்ட நரைத்த தாடியுடன் அவர் காணப்பட்டார்.

குர்திஷ் படைகளால் வழங்கப்பட்ட புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் திக்ரித்தில் அவரது வீட்டுக்கு அண்மையில் உள்ள கிராமத்தில் பாதாள அறையில் வைத்து அமெரிக்கப் படைகளால் சதாம் கைது செய்யப்பட்டார். ஈராக் நேரப்படி இரவு 8.30 மணியளவில் (இலங்கை நேரப்படி சனிக்கிழமை இரவு 11.30 மணி) இக்கைது இடம்பெற்றது.

கைது செய்யப்பட்டவர் சதாம் தான் என்பது மரபணுச் சோதனை மூலம் உறுதி செய்யப்பட்டதாக அமெரிக்கா அறிவித்தது.

எந்தவிதமான துப்பாக்கி வேட்டுகளும் தீர்க்கப்படாமல் எந்த வித எதிர்ப்புமின்றி அவர் கைதுசெய்யப்பட்டார் என்றும் -

சதாம் தம்முடன் நன்றாகக் கதைக்கிறார்; தம்முடன் நன்றாக ஒத்துழைக்

(18ஆம் பக்கம் பார்க்க)

## குண்டு வெடிப்பில் முஷாரப் தப்பினார்!

இஸ்லாமாபாத் டிசெ.15

பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வெஸ் முஷாரப்பை குறிவைத்து நேற்று இரவு 8 மணியளவில் குண்டுத் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது எனினும், அவர் அதிர்ஷ்டவசமாக பாதிப்பின்றி உயிர் தப்பினார்.

தலைநகர் இஸ்லாமாபாத்திலிருந்து தனது மாளிகைக்கு அவர் திரும்பிக்

(18ஆம் பக்கம் பார்க்க)



முகச்சவரம் செய்யப்பட்ட பிறகு சதாம் ஹுசைன்

முகச்சவரம் செய்யப்படுவதற்கு முன்னர் சதாமின் தோற்றம்.



சதாம் ஹுசைன் மருத்துவச் சோதனை செய்யப்பட்ட காட்சி.

## சதாம் கைதானது எவ்வாறு?

அமெரிக்கத் தளபதி ஜேம்ஸ் கெக்கி தலைமையிலான 600 படையினர் கொண்ட அணியே சதாமைக் கைது செய்தது.

சதாமின் சொந்த இடமான திக்ரித்திலிருந்து சுமார் 15 கிலோமீற்றர் தொலைவிலுள்ள அத்வார் என்ற கிராமத்தை சனியன்று மாலை 6 மணியளவில் அமெரிக்கப் படையினர் நெருங்கினர். அங்கு சதாம் பதுங்கியிருக்கின்ற இடங்கள் எனக் கருதப்படும் இரு பண்ணை வீடுகளை குர்திஷ் படைகள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் - இரவு 8 மணியளவில் அமெரிக்கப் படைகள் சுற்றிவளைத்தன. முதல் இடத்தில் நடத்தப்பட்ட தேடுதல் பலன் தரவில்லை.

இரண்டாவது இடம் சுற்றி

(18ஆம் பக்கம் பார்க்க)

## வேளாண் உள்ளீடுகள், மீன்பிடி உபகரணங்கள், புத்தகங்களுக்கு தீர்வை நீக்கம்

# புலிகளின் வரி விதிப்பு முறையில் பெரும் மாற்றங்கள் அறிவிப்பு

## உழவு, கடற்றொழில், கால்நடை வளர்ப்பு தொழில்களை ஊக்குவிக்க நடவடிக்கை

புனளரி,டிசெம்பர்15

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் ஊடாகப் பொருள்களை எடுத்துச்செல்வதற்கு விதிக்கப்பட்டிருக்கும் தீர்வை (வரி) முறையில் பெரிய மாற்றங்களைப் புலிகள் செய்திருக்கின்றார்கள்.

உழவுத் தொழில், கடற்றொழில் ஆகியவற்றிலும் கால்நடை வளர்ப்பிலும் ஈடுபட்டுள்ள பல்லாயிரக்கணக்கான மக்களின் நலன் கருதி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது என தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறைப் பொறுப்பாளர் செ.தமிழேந்தி அறிவித்திருக்கிறார்.

நேற்று விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பளையில் செய்தியாளர்களுடன் நடந்த சந்திப்பில் இந்த அறிவிப்பை அவர் விடுத்தார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது மக்களின் முக்கிய தொழில்களாக விளங்கும் உழவுத் தொழில், கடற்றொழில் ஆகியவற்றிலும் கால்நடை வளர்ப்பிலும் பல்லாயிரக் கணக்கான நடுத்தர, ஏழை மக்கள் ஈடுபடுவதால் அவர்களின் பொருளாதார மேம்பாட்டையும், எமது உணவுத் தேவை

(18ஆம் பக்கம் பார்க்க)



## அமெரிக்க ஆயுத உதவி; சமாதான முயற்சி முடக்கம்:

# வடக்கு மக்களின் அச்சங்கள் குறித்து அமெரிக்க உயரதிகாரியிடம் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.15

சமாதான முயற்சிகள் முடங்கியுள்ள நிலையிலும் இலங்கைக்கு ஆயுத உதவிகளை அமெரிக்கா வழங்குவதாக வெளிவந்துள்ள செய்திகள் மக்கள் மத்தியில் அச்சத்தை விளைவித்திருப்பது குறித்தும், சமாதான முயற்சிகள் முடங்கியிருப்பதால் மக்கள் மனதில் தோன்றியுள்ள அச்சம் குறித்தும் யாழ்.செயலக அதிகாரிகள் அமெரிக்க உயர் அதிகாரிகளிடம் நேற்று எடுத்துக்கூறினர்.

அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான பணியகத்தின் பிரதிப் பணிப்பாளரான நிக்கலஸ் ஜேமஸ் என்னும் இந்த உயர் அதிகாரி நேற்றுக்காலை யாழ்ப்பாணம் வந்தார். அவருடன் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் பிரிவு ஆலோசகர் கிறிஸ்லோவ் வும் வந்திருந்தார்.

காலை 9.30 மணியளவில் விமானம் மூலம் பலாலியை வந்தடைந்த இவர்கள், யாழ். செயலகம் சென்றனர். அங்கு யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல், திட்டமிடல் பணிப்பாளர் பு. சுந்தரம்பிள்ளை, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் நா. சிவபாதம், நிவாரணம் மற்றும் புனரமைப்புக்கான அபிவிருத்தி அலுவலர் ஸ்யோகநாதன் ஆகியோருடன் அமெரிக்க அதிகாரிகள் கலந்துரையாடினர்.

தெற்கில் நிலவும் அரசியல் நெருக்கடிகளால் குடாநாட்டில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் குறித்து அமெரிக்க அதிகாரிகள் கேட்டறிந்து கொண்டனர் எனக் கூறப்படுகின்றது.

சமாதான முயற்சிகள் முடங்கியுள்ளநிலையிலும் இலங்கைக்கு ஆயுத உதவிகளை அமெரிக்கா வழங்குவதாக வெளிவந்த செய்திகள மக்கள் மத்தியில் அச்சத்தை விளைவித்துள்ளன என்றும் -

உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக மீள் குடியமர்வு செயற்பாடுகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் புனர்வாழ்வு, புனரமைப்பு பணிகளில் ஏற்படும் பிரச்சினைகள், சமாதான முயற்சிகள், முடங்கியுள்ளதால் மக்கள் மனதில் தோன்றியுள்ள அச்சம் என்பன குறித்தும் யாழ்.செயலக அதிகாரிகள் கலந்துரையாடலில் எடுத்துக் கூறினார் என்று அறிய முடிகிறது.

இதேவேளை, இலங்கையின் நிறுவனமயப்படுத்தப்பட்ட அபிவிருத்திகளுக்கு உதவுவதிலேயே அமெரிக்கா நாட்டம் கொண்டுள்ளதாகவும் - ஒரு நாடு என்ற வகையில் ஆயுத சமநிலையைப் பேணவே இலங்கைக்கு ஆயுத உதவி வழங்கப்படுவதாகவும் - தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி தொடர்பாகத் தலையிடவோ, அழுத்தங்களைப் பிரயோகிக்கவோ அமெரிக்கா விரும்பவில்லை என்றும் -

அமெரிக்க அதிகாரிகள் கலந்துரையாடலில் குறிப்பிட்டனர் எனவும கூறப்படுகிறது. இக்கலந்துரையாடலின் பின்னர் யாழ்பொது நூலகக் கட்டடத்திற்குச் சென்று பார்வையிட்ட அமெரிக்க அதிகாரிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து உரையாடினர். (ஒ)

# 19 இலங்கை மீனவர்களை மாலைதீவு விடுவித்தது!

கொழும்பு,டிசெ.15

மாலைதீவு சிறைகளிலிருந்த 19 இலங்கை மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ஆனால், அவர்களின் 4 படகுகளுடன், படகோட்டிகளும் மாலைதீவிலேயே விசாரணைக்காக தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

19 மீனவர்களையும் விடுதலை செய்யுமாறு மாலைதீவு ஜனாதிபதி மம்மூன் அப்துல் கையூம் உத்தரவிட்டார் என்று மாலைதீவு வெளியுறவுத்துறை அதிகாரி அப்துல் ஹமீது ஜகரியா தெரிவித்தார்.

இம்மாத ஆரம்பத்தில் 34 வெளிநாட்டவரை மாலைதீவு விடுதலை செய்தது.அவர்களில் 16 பேர் இலங்கையர்கள். (ஐ)

# புலிகளைப் பலவீனப்படுத்தும் முயற்சியில் வல்லரசு நாடுகள் ஈடுபடக்கூடாது!

## மனித உரிமைகளுக்கான புதிய அமையம் கோரிக்கை

விடுதலைப் புலிகளின் பலத்தினாலேயே இன்றைய சமாதானச் சூழல் உருவாகியுள்ளது. தமிழ் மக்களின் பாதுகாவலர்களாக இருப்பவர்கள் விடுதலைப் புலிகள் தான். எனவே, இந்தியா போன்ற வல்லரசுகள புலிகளைப் பலவீனப்படுத்தும் - கொச்சைப்படுத்தும் - நடவடிக்கைகளில ஈடுபடாது தமிழ்மக்களின் பிரச்சினையைத் தீர்க்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

'தமிழ்பேசும் மக்களின் மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான அமையம்' என்ற பெயரில் குடாநாட்டில் புதிதாக உருவாக்கப் பட்டிருக்கும் அமைப்பு மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளது இலங்கையில உள்ள தமிழ்பேசும் மக்களின் சார்பாக உருவாக்கப்பட்டுள்ள இந்த அமையம் நேற்று முதல் தனது செயற்பாடுகளை ஆரம்பித்திருக்கின்றது. இந்த அமையத்தின் முதலாவது கூட்டம் நேற்று நல்லூர் இளங் கலைஞர் மன்றத்தில் இடம்பெற்றது.

கூட்டத்தில் அருட்தந்தை சி.போனட அடிகளார், யாழ்.மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம், யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட பீடாதிபதி சு.இராசதுரை, தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் தபஞ்சலிங்கம், பல்கலைக் கழக புவியியல்துறை விரிவுரையாளர் சூசையானந்தன், கியூடெக் நிறுவன இயக்குநர் சி.ஜீ. ஜெயக்குமர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தின் நிறைவில் மேற்படி அமையத்தின் நோக்கங்கள், செயற்பாடுகள் என்பன குறித்து பத்திரிகையாளர்களுக்கு விளக்கம் அளிக்கப் பட்டது.

அப்போது அங்கு தெரிவிக்கப்பட்டதாவது:-

தமிழ்பேசும் மக்களின் உரிமைகள், அபிலாஷைகள் தொடர்பாக சர்வதேச மட்டத்தில் குரல் எழுப்புவதற்காகவே இந்த அமையம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ் பேசும் மக்களின் மனித உரிமைகள், குடியிருப்பு, பொருளாதாரம், சமூக கலாசாரம், அரசியல் போன்றவற்றை முதன்மைப்படுத்தி அவற்றுக்காக சர்வதேச மட்டத்திலும் உள்நாட்டிலும் கருத்துக்களை வெளிப்படுத்துவதே இந்த அமைப்பின் பிரதான நோக்கமாகும்.

வெளியில் இருந்து வருபவர்களுக்கு எமது இன விடுதலை தொடர்பாக உண்மையான - உறுதியான - கருத்துக்களையும், தகவல்களையும் இந்த அமையம் வழங்கும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தவே தீர்வை மாற்றங்களைச் செய்திருக்கிறோம்

## புலிகளின் நிதிப் பொறுப்பாளர் தமிழேந்தி கூறுகிறார்



பளை,டிசெ.15

தீர்வை நீக்கம், தீர்வைக் குறைப்பு, தீர்வை அதிகரிப்பு என்பன மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படுகிறது என்று தீர்வை மாற்றங்கள் தொடர்பான செய்தியாளர் மாநாட்டில் விடுதலைப் புலிகளின் நிதிப்பொறுப்பாளர் செ.வ. தமிழேந்தி கூறினார்.

பளை காவல்துறைப் பணிமனையில் நேற்றுக்காலை 10 மணிக்கு செய்தியாளர் மாநாடு நடைபெற்றது. தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் உடனிருந்தார்.

இந்த மாற்றம் மூலம் மாதாந்தம் 80 லட்சம் ரூபா வீதம் வருடாந்தம் சுமார் 10 கோடி ரூபா வருமான இழப்பு எமக்கு ஏற்படும் என மதிப்பிட்டுள்ளோம். மக்களுக்காக இந்த இழப்பை நாம் ஏற்றுக்கொள்கிறோம் எனவும் கூறிய அவர், மேலும் கூறியதாவது:-

வரி விதிப்புத் தொடர்பான சகல விவரங்களுடனான கைந்நூல் ஒன்றை வெளியிடவிருக்கிறோம்.

அந்தக் கைந்நூல் மூலம் மக்கள வரிவிதிப்பு, வரி விலக்கு விவரங்களை அறிந்து தமது பொருள்களை நியாயவிலையில் பெறமுடியும். குறிப்பிட்ட ஒரு பொருளுக்கான வரி வீதத்தையும் அந்தப் பொருளின் சாதாரண விலையையும் ஒப்பிட்டு பொருளின் விலையை மக்களே நிர்ணயித்துக் கொள்ள வாய்ப்புக் கிட்டும்.

உள்ளூர் விவசாய உற்பத்திப் பொருள்கள் அறுவடைசெய்யப்படும் சமயத்தில் வெளியிடங்களில் இருந்து அந்தப் பொருள்களை எடுத்துவர தடைசெய்யமுடியும். அல்லது அந்தப் பொருளுக்கான தீர்வையை அதிகரிக்க முடியும். அந்தப் பொருள் போதியளவு உள்ளதாக அரச அதிபர் உறுதிசெய்ய வேண்டும்.

யாழ்ப்பாணம் எமது கட்டுப்பாட்டில் இல்லாதபடியால் அரச அதிபர் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்ய ஏற்பாடுசெய்யவேண்டும். நாம் தீர்வையை விதித்துவிட்டு நியாயமான விலைக்கு விற்குமாறு வர்த்தகர்களைக் கேட்டுள்ளோம்".

- இவ்வாறு அவர் கூறினார். (ஐ)



தீர்வை மாற்றம் தொடர்பாக விளக்கமளிப்பதற்காக நேற்றுப் பளையில் கூட்டப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் எடுக்கப்பட்ட படம்.

# சமாதானத்தை எதிர்பார்த்தோர் அரசியல் நெருக்கடியால் அச்சம்!

## அமெ. அதிகாரிகளிடம் ஆயர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.15

சமாதானத்தை எதிர்பார்த்திருந்தவர்களுக்கு தற்போதைய நிலை அச்சத்தை விளைவிக்கின்றது.

அமெரிக்க ராஜாங்கத் திணைக்கள அதிகாரியிடம் யாழ்.ஆயர் இவ்வாறு தெரிவித்தார்.

அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான பணியகத்தில் இந்தியா, நேபாளம், இலங்கை, மாலைதீவு ஆகிய நாடுகளின் பிரிவுப் பிரதிப் பணிப்பாளர் நிக்கலஸ் ஜேமஸ், இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் பிரிவு ஆலோசகர் கிறிஸ்லோவ் ஆகியோர் ஆயர் இல்லத்தில் யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையை சந்தித்துப் பேசினர்.

இச்சந்திப்பு தொடர்பாக யாழ். ஆயர் கூறியதாவது:-

தென்னிலங்கையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியின் பின்னர் இங்கு ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து அமெரிக்க அதிகாரிகள் கேட்டறிந்தனர். ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையே ஏற்பட்டுள்ள பிணக்கு தொடர்பாக பொதுமக்களின் அபிப்பிராயங்கள பற்றியும் விசாரித்தனர்.

நிரந்தர சமாதானத்தை எதிர்பார்த்திருந்த மக்களுக்கு சமாதான முயற்சிகளில் ஏற்பட்ட பின்னடைவு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது என்று அமெரிக்க அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தினேன்.

சமாதான முயற்சிகள் தொடர்வதற்கு அமெரிக்கா உட்பட பிற நாடுகளின் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினேன் என்று ஆயர் தெரிவித்தார். (ஒ)

# யுத்தமில்லா இலங்கையில் வாழவே தென்பகுதி சிங்கள மக்கள் விருப்பம்!

## பேராதனைப் பல்கலைக்கழக புத்திஜீவிகள் கருத்து

காத்தான் குடி, டிசெ.15

இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும் ஒன்றிணைவதன் மூலமே வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காணமுடியும். தென்பகுதி சிங்கள மக்கள் யுத்தம் இல்லாத இலங்கையில் வாழவே பெரிதும் விரும்புகின்றனர். யுத்தத்தை நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டுவர அனைவரும் ஒன்று படுதல் வேண்டும.

-இவ்வாறு பேராதனைப் பல்கலைக் கழக தொழிற்சங்கத்தினரும், பல்கலைக்கழக புத்திஜீவிகளும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 125 பேரடங்கிய புத்திஜீவிகள அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களுக்கு விஜயம் செய்தனர். தென்கிழக்குப் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம் உட்பட பல இடங்களுக்கும் அவர்கள் விஜயம் செய்தனர்.

பட்டிருப்புத் தொகுதி விடுதலைப் புலிகளின் அரசியல் தலைமைச் செயலகத்துக்கு விஜயம் செய்த அவர்களை விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் ஆர். கார்த்திக் வரவேற்றார். சுமார் 2 மணிநேரம் இவர்கள் சமாதானம் தொடர்பாகப் பேசினர்.

புலிகளின் தலைவர் பிரபாகரனின் புகைப்படங்களையும் அவர்கள் ஆவலுடன் பெற்றுக்கொண்டனர்.

# சுயதொழில் முயற்சிக்கடன்

யாழ்ப்பாணம்,டிசெ.14

யாழ். குடாநாட்டில் மிதிவெடியால் பாதிப்புற்ற 100 பயனாளிகளுக்கு சர்வோதய நிறுவனம் சுயதொழில் முயற்சிக்கடன் வழங்கியுள்ளது.

'யுனிசெவ்' நிறுவனத்தின் நிதி உதவியுடன் இக்கடன்கள் வழங்கப் பட்டுள்ளன.

இக்கடன்களைப் பெற்றவர்களுக்கான கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வுகளும் நாளை திங்கட்கிழமை காலை.8.45 மணிக்கு யாழ்.வை.எம்.சி.ஏ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சகல பயனாளிகளையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-8)

# ஈராக்கில் கார்க்குண்டுத் தாக்குதல் பொலீஸ் நிலையம் தகர்ந்தது!

## 20 பேர் உயிரிழப்பு! 30 பேர் காயம்!!

பக்தாத்,டிசெம்பர்15

**ஈராக்கியத் தலைநகர் பக்தாத்தில் அமைந்திருந்த பொலீஸ் நிலையம் கார்க் குண்டுத் தாக்குதலில் தகர்ந்தது. அப்பகுதியில் நின்ற இருபது பேர் கொல்லப்பட்டனர். முப்பதிற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். அவசர அவசரமாக மீட்புப் பணிகள் நடைபெற்றன. அமெரிக்கப் படையினர் அப்பகுதியை சீல்வைத்துள்ளனர்.**

நேற்று அதிகாலை கால்டியா என்ற இடத்திலேயே இத்தாக்குதல் நடந்தது. கார் ஒன்றில் வந்த குண்டுதாரி மேற்படி தாக்குதலை நடத்தினார் என்று பக்தாத்தில் உள்ள அமெரிக்கப்படைப்பேச்சாளர் ஜெனரல் கிறிஸ்தோபர் தெரிவித்தார்.

பக்தாத்திலிருந்து அறுபது கிலோ மீற்றர் தூரத்திலுள்ள இந்தப் பொலீஸ் நிலையத்தில் ஈராக்கிய பொலீஸாரே கடமையில் இருந்தனர். அங்கு அமெரிக்கப்படையினரும் இருந்தனர் என்று செய்திகள் கூறுகின்றன. எனினும், இச்சம்பவத்தில் அமெரிக்கப்படையினர் எவரும் கொல்லப்படவில்லை என்று அமெரிக்கப்படை அதிகாரியான கேணல் ஜெவ்கஸீஹர் தெரிவித்தார்.

இத்தாக்குதலில் இருபதுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர் என்று ரமாடி நகரிலுள்ள வைத்தியசாலை நிர்வாகி ஹைதாம் பஹார்தாஹா தெரிவித்தார்.

குண்டுத்தாக்குதலுக்கு இலக்கான பொலீஸ் நிலையக் கட்டடம் தகர்ந்தது. அந்தக் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்குண்டுள்ளவர்களை மீட்கும் பணியில் அமெரிக்கப்படையினரும், ஈராக்கிய பொலஸாரும் ஈடுபட்டனர்.


சிவிலியன்கள் அப்பகுதிக்குச் செல்வதற்கு அமெரிக்கப்படை தடைவிதித்துள்ளது. ஹெலிகொப்டர்கள் அப்பகுதி வான் பரப்பில் வட்டமிட்டபடி இருந்தன.

இதற்கிடையே -

பக்தாத்தில் நேற்றுமுன்தினம் நடந்த குண்டுவெடிப்பில் இரண்டு அமெரிக்கப்படையினர் கொல்லப்பட்டனர். காலை நேர ரோந்தில் ஈடுபட்டிருந்த படையினரைக் குறிவைத்தே இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில், மேலும் மூன்று படையினர் படுகாயமடைந்தனர் என்று அங்குள்ள அமெரிக்கப்படை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் அமெரிக்கக் கூட்டுப்படைகளுக்கு எதிராகத் தாக்குதல் நடத்திவந்த சதாம் ஆதரவு கெரில்லாக்கள், தற்போது அங்குள்ள படையினர் அல்லாத வெளிநாட்டவர்களையும், அமெரிக்கப் படைக்கும், இடைக்கால நிர்வாகத்திற்கும் ஆதரவு தெரிவிப்போரையும் குறிவைத்து தாக்குதல்களை நடத்த ஆரம்பித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



ஈராக்கில் இடம்பெற்ற தாக்குதலில் காயமடைந்த ஒருவரை மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லும் காட்சி.

# சட்டவிரோதக் குடியேறிகளுக்கு அமெரிக்காவில் பொதுமன்னிப்பு

வாஷிங்ரன்,டிசெ.15

அமெரிக்காவில் சட்ட விரோதமாகக் குடியேறியுள்ள ஒரு கோடியே 20 லட்சம் பேருக்குப் பொதுமன்னிப்பு வழங்கி, குடியுரிமை தரும் திட்டம் அமெரிக்க அரசின் பரிசீலனையில் இருப்பதாக வெள்ளைமாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை, மெக்சிக்கோ உள்ளிட்ட பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவில் சட்ட விரோதமாகக் குடியேறியுள்ளனர்.

சட்டவிரோதமாக அமெரிக்காவில் வசிக்கும் வெளிநாட்டவர்களுக்குச் சட்ட அந்தஸ்து அளிக்கும் வகையில் ஏதேனும் நடவடிக்கையை எடுத்தாக வேண்டும் என்று மனித உரிமை அமைப்புகள் வலியுறுத்தி வந்தன.

அவர்களுக்குக் குடியுரிமை தரக்கூடாது என்று உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் ரொம் ரிட்ஜ் 2 நாள்களுக்கு முன்னர் கூறியிருந்தார். அதற்கு மக்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பலத்த எதிர்ப்புத் தெரிவித்தனர். அவர்களுக்குச் சமாதானம் கூறும் வகையில் வெள்ளைமாளிகை அதிகாரி இப்போது புதிய அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்.

மெக்சிக்கோ நாட்டவர்கள்தான் மிக அதிக எண்ணிக்கையில் இருக்கின்றனர். அவர்களை வெளியேற்றினால் அமெரிக்க நாட்டின் விவசாய வேலைகளும் ஹோட்டல் வேலைகளும் ஸ்தம்பித்துவிடும் என்று ஒருசாரார் அஞ்சுகின்றனர்.

இப்போது அமெரிக்க மக்கள் தொகையில் வெள்ளையர் எண்ணிக்கை 75 சதவீதமாகும். வெளிநாட்டவரைச் சட்டபூர்வக் குடிமக்களாக்கினால் காலப்போக்கில் வெள்ளையர் சிறுபான்மையாகிவிடுவர்.

அமெரிக்க நாட்டின் மதம், மொழி, வாழ்க்கைத் தரம் ஆகியவற்றில் பெரும் மாறுதல் ஏற்பட்டுவிடும் என்று இன்னொரு சாரார் அச்சம் தெரிவிக்கின்றனர்.

# தமிழகம் முழுவதும் இன்று தி.மு.கவினர் மறியற்போர்

சென்னை,டிசெ.15

இந்தியாவில் தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்த கொண்டுவரப்பட்ட பொடா சட்டத்தை திரும்பப்பெற வேண்டும். தமிழை, செம்மொழியாக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளுக்காக தமிழகத்தில் தி.மு.கட்சியும், அதன் கூட்டணிக்கட்சிகளும் இன்று மறியல் போராட்டம் நடத்துகின்றன.

தமிழகம் முழுவதும் மத்திய - மாநில அரசு அலுவலகங்கள் முன்பு இன்று காலை 9 மணிக்கு தி.மு.கவினர் மறியலில் ஈடுபடுகிறார்கள். தி.மு.கவினர் மறியல் நடத்தக்கூடாது என்றும் ஊர்வலம் மட்டும் நடத்தலாம் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஆனால், தடையை மீறித் திட்டமிட்டபடி மறியல் நடக்கும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி அறிவித்துள்ளார்.

# உலக வர்த்தகப் பேச்சைத் தொடங்குக; ஐரோப்பிய ஒன்றியம், ஜி.20 கூட்டறிக்கை

பிரேஸிலியா,டிசெ.15

உலக வர்த்தகம் தொடர்பான பேச்சுக்களைப் பணக்கார நாடுகளும் வளரும் நாடுகளும் உடனே ஆரம்பிக்க வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியமும் 'ஜி.20' என்ற அமைப்பும் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளன.

ஜெனீவாவில் ஆரம்பமாகவிருக்கும் பேச்சுக்களுக்கு முன்னதாக இந்தியா, சீனா, பிரேஸில், தென் ஆபிரிக்கா உள்ளிட்ட நாடுகளைக் கொண்ட 'ஜி.20' அமைப்பின் அதிகாரிகள் பிரேஸிலியா நகரில் சந்தித்துப் பேசினர். அப்போது ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுடன் சேர்ந்து இக்கூட்டறிக்கையில் கையெழுத்திட்டனர்.

மெக்சிக்கோ நாட்டின் கான்குன் நகரில் செப்ரெம்பர் மாதம் நடந்தபேச்சு பணக்கார நாடுகளுக்கும் வளரும் நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக மேற்கொண்டு முன்னேற்றம் இல்லாமல் நின்றது.

தாராள வர்த்தக நடவடிக்கைகளை அனுமதிக்க வேண்டும் என்றால் விவசாய மானியங்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையை பணக்கார நாடுகள் கைவிடவேண்டும் என்று 'ஜி.20' அமைப்பு அக்கூட்டத்தில் வலியுறுத்தியது.

இந்நிலையில், ஐரோப்பிய ஒன்றியமும் 'ஜி.20' அமைப்பும் நடத்திய பேச்சுக்களில் சுமுகமான அணுகுமுறை காணப்பட்டது. இரு தரப்பினரும் நேரடியாக தங்களுடைய பிரச்சினைகள் என்ன என்பதை மனம்விட்டுப் பேசினர். அதன்பிறகு கூட்டறிக்கை வெளியிடப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றிய வர்த்தக ஆணையர் பாஸ்கல் லாமியும் இப்பேச்சுக்களில் கலந்துகொண்டார். பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்த அவர், இனி அடுத்த சுற்றுப் பேச்சுக்களில் நுட்பமான விடயங்களில் கவனம் செலுத்தவேண்டியிருப்பதை சுட்டிக்காட்டினார். அடுத்த சுற்றில் அமைச்சர்கள் சந்திக்கவுள்ளனர்.



**கிறிஸ்மஸ் பண்டிகையையொட்டி உலகம் முழுவதும் ஏற்பாடுகள் கோலாகலமாக நடைபெற்று வருகின்றன. கிறிஸ்தவப் பாடல்களைப் பாடும் நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன. அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் 9ஆயிரத்து 500பேர் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் கூடிநின்று கிறிஸ்மஸ் பாடலைப் 16 நிமிடப் பாடி சாதனை ஏற்படுத்திய காட்சி இது.**

## ஆப்கானில் 'லோயா ஜிர்கா' கூடுகிறது

காபூல்,டிசெ.15

ஆப்கானிஸ்தானில் செல்வாக்கு மிகுந்த அமைப்பான 'லோயா ஜிர்கா', நாட்டின் அரசமைப்பை உருவாக்கக் கூடியுள்ளது. இரண்டு வருடங்களின் முன்னர் தலிபான்களின் ஆட்சி ஆப்கானிஸ்தானில் முடிவுக்கு வந்தது. அதன் பின்னர் இரண்டாவது தடவையாக 'லோயா ஜிர்கா' கூடியுள்ளது.

ஆப்கானில் உள்ள இனக்குழுக்களின் 500 பிரதிநிதிகள் 'லோயா ஜிர்கா' எனப்படும் மகாசபையில் அங்கம் வகிக்கின்றனர்.

# சிரியா மீது பொருளாதாரத் தடை அமெரிக்க ஜனாதிபதி ஒப்புதல்

வாஷிங்ரன்,டிசெ.15

தீவிரவாதத்திற்குத் துணை போவதால் சிரியா மீது பொருளாதாரத் தடைவிதிக்க அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் ஒப்புதல் அளித்துவிட்டார். இதற்காக தனிச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது.

அமெரிக்க நாடாளுமன்றின் இரு அவைகளும் ஜனாதிபதி புஷ்ஷின் இந்த முடிவை கருத்து வேறுபாடின்றி ஏற்றுக்கொண்டன.

அணு ஆயுதங்களையும் இரசாயன உயிரியல் ஆயுதங்களையும் பெற சிரியா தொடர்ந்தும் முயற்சித்து வருவதாகவும் ஜனாதிபதி புஷ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வாஷிங்ரனில் அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார் அந்த அறிக்கையில் - கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக சிரியாவின் நடவடிக்கைகளைக் கவனித்த பின்பே இந்தத் தடையை விதிக்கத் தீமானித்தோம் -என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# 65 லட்சம் மக்கள் பட்டினி; வடகொரியா திண்டாட்டம்

வடகொரியாவில் 65 லட்சம் மக்கள் பட்டினியால் வாடுகின்றனர் என்று ஐநா. உணவுத்திட்ட அமைப்பு தெரிவித்துள்ளது. பட்டினியைப் போக்க அந்நாட்டு அரசு இயலாமை நிலையில் உள்ளது என்றும் அது தெரிவித்துள்ளது.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் அந்நாட்டின் மீது விதித்துள்ள கடுமையான பொருளாதாரத் தடையே இதற்குக் காரணம் என்று அது கூறியுள்ளது.

உலக நாடுகள் இந்நிலையைப் போக்க வடகொரியாவுக்கு தாராளமாக நிதியுதவி அளிக்கவேண்டும் என்றும் அங்கு பட்டினியால் வாடும் குழந்தைகளைக் காப்பாற்ற உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அது வேண்டுகோள் விடுத்துள்ளது. இது குறித்து ஐநா. வெளியிட்டுள்ள அறிக்கையில் -

உலக நாடுகள் வடகொரியாவில் பட்டினியால் வாடும் மக்களுக்குத் தேவையான நிதியை வழங்க வேண்டும். இல்லையேல் அங்குள்ள குழந்தைகளைக் காப்பாற்ற முடியாத நிலை ஏற்படலாம்.

வடகொரியாவின் கிராமப்புறங்களில் வாழும் மக்களே பட்டினியால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் பேரழிவு ஏற்படவும் வாய்ப்பு உள்ளது. கடும் வரட்சியால் பாதித்துள்ள அந்நாட்டை மீளக் கட்டியெழுப்ப அனைத்து நாடுகளும் முன்வரவேண்டும்

-என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்க Lottery Visas

- அமெரிக்க Green Card Lottery Visas விண்ணப்பப் படிவங்களை உடனுக்குடன் நேரடியாக மின்னஞ்சல் மூலம் எமது நிறுவனத்தில் அனுப்பிக்கொள்ளலாம்.
- இதன் முடிவு திகதி 30.12.2003. ஆதலால் நெருக்கடியைத் தவிர்க்கு முகமாக முன்கூட்டியே உங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவும்.
- உங்கள் அதிர்ஷ்ட சந்தர்ப்பத்தை இரண்டு மடங்காக்க உங்கள் குடும்ப அங்கத்தவரின் பேரில் வேறு விண்ணப்பத்தை அனுப்பும் போது விசேட சலுகைகள் வழங்கப்படும்.
- உங்கள் ஆலோசனைகளுக்கும் விண்ணப்பங்களை அனுப்புவதற்கும் நீங்கள் நாடவேண்டிய இடம்:

**விசிற்றோக்.நெற்**

முதலாம் மாடி, பலாலி வீதி,
(வீரகத்திப் பிள்ளையார் ஆலய முன்னால்),
(பரமேஸ்வராச் சந்தி), திருநெல்வேலி.
☎ 021 - 222 - 6637
021 - 222 - 7387

(34-24-13-16) (25833)


## கடலக தொழில்நுட்பவியல்
## பயிற்சி - 2004

மேற்படி பயிற்சிநெறியைப் பயில விரும்புபவர்கள் பூர்த்திசெய்யப்பட்ட சுயவிவர விண்ணப்பப்படிவத்தை 09.01.2004 ஆம் திகதிக்கு முன் கீழ்க்குறிப்பிட்டுள்ள விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும்.

வயது எல்லை: 18 - 35

காலம்: மூன்று மாதங்கள்

இல. 372, பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 222 6251

அதிபர்,
கடற்றொழில் மற்றும்
கடலோட்டு எந்திரவியல் கல்லூரி.

(சி-32005) (25-24-13-16)

## மனதார வாழ்த்துகின்றோம்

வியாபாரிமூலை புவனேஸ்வரி அம்மாள் (நாச்சிமார்) ஆலயத்தின் பிரதமகுருவும், சிறந்த ஆன்மீகச் சொற்பொழிவாளருமான

**சிவஸ்ரீ மகா கணபதி சிவானந்தராசா குருக்கள்**



அவர்கள் சாவகச்சேரி நீதிபதி சு.பா.சுப்பிரமணியம் அவர்கள் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். இவரின் சேவை நெடிது தொடர வேண்டுமெனப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

வியாபாரிமூலை ஐக்கிய நாணயச் சங்கம்.

(32009)(34-24-13-16)

## உளம் மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்

எங்களது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய
யா/அல்லாரை தமிழ் வித்தியாலய ஓய்வுபெற்ற அதிபரும் - தரம் I,
கச்சாய் அறநெறிப் பாடசாலை தலைவரும், கச்சாய் மாதர் சங்க போஷகரும்,
கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினரும், சமூகசேவையாளருமான

**செல்வி திரவியநாயகம் வேலுப்பிள்ளை**



அவர்கள் 2003.12.12 அன்று யாழ். மாவட்ட நீதிபதி திரு.எம்.திருநாவுக்கரசு முன்னிலையில் யாழ். நீதி, நிர்வாக பகுதிக்கான சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டமையையிட்டு அவரை நாம் உளம் மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துவதோடு, அவரது சேவை மேன்மேலும் வளர்ச்சியுற்றுத் திகழ எல்லாம் வல்ல கச்சாய் கண்ணகை அம்மனை பிரார்த்திக்கின்றோம்.

கச்சாய் தெற்கு, கொடிகாமம்.

சகோதரர்கள், வெளிநாட்டில் உள்ள பேறாமக்கள், பேரப்பிள்ளைகள், மருமக்கள்.

(சி-31890) (24-13-16)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சித்திரமேழி, இளவாலையைச் சேர்ந்தவரும் திருநெல்வேலியைத் தற்காலிக வதிவிடமாகக் கொண்டவரும் சித்திரமேழி ஞானவைரவராலய அறங்காவற்குழு முன்னாள் தலைவரும் யா/மாதகல் சென்ற் யோசேப் மகாவித்தியாலய முன்னாள் அதிபரும் பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபை உறுப்பினரும் சித்திரமேழி கிளைத்தலைவரும் ஆகிய

**திரு அருணாசலம் தம்பிப்பிள்ளை**

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக 10.12.2003 அன்று யாழ். மாவட்ட நீதிமன்ற மேலதிக நீதிவான் திருமதி எஸ்.நந்தசேகரன் அவர்கள் முன்னிலையில் சத்தியப்பிரமாணஞ்செய்து பதவியை ஏற்றுக்கொண்டார். அவர் தம் சேவையைச் செவ்வனே நிறைவேற்ற சித்திரமேழி ஞானவைரவப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

அறங்காவலர் குழு - சித்திரமேழி ஞானவைரவர் ஆலயம்.
நிர்வாகக் குழுவினர் - பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கம் சித்திரமேழி கிளை 07.
நிர்வாக சபையினர் - பழனி ஆனந்தசபை சனசமூக நிலையம், சித்திரமேழி.

(25786) (26-24-13-16)

## ஜி.சீ.ஈ. சாதாரணதர விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள்

அச்சுவேலி,டிசெ.15

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீடு செய்யும் பணிகள் எதிர்வரும் 26 ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 04ஆம் திகதிவரை தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யும் பணிக்கு நியமிக்கப்பட்டுள்ள பிரதம பரீட்சகர்கள், உதவிப் பரீட்சகர்களுக்கான நியமனக் கடிதங்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை ஆகிய இரண்டு நிலையங்களில் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் நடைபெறும்.(எ-11)

## காலாவதியான பால்மா வகைகள் அழிப்பு!

வட்டுக்கோட்டை,டிசெ.15

வட்டுக்கோட்டையில் உள்ள விற்பனை நிலையங்களில் சுகாதாரப் பிரிவினரின் திடீர்ச் சோதனையின் போது காலாவதியான பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

வட்டுக்கோட்டை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் தலைமையிலான குழு ஒன்று அண்மையில் மேற்கொண்ட திடீர்ப்பரிசோதனையின் போது, ஐந்து கடைகளில் காலாவதியான பால்மாவகைகள், பிஸ்கட் வகைகள் மற்றும் மீன்ரின் என்பன மீட்கப்பட்டு அவ்விடத்திலேயே அழிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. (எ-161)


## SALE பண்டிகைக்கால மலிவுவிற்பனை SALE

★ கவறிங் கோல்ட் நகைகள்
★ மேக்கப் செற்
★ பரத நாட்டிய செற்
★ சாறி போடர்
★ லேஸ், நூல் வகைகள்

'கிறிஸ்மஸ் றீ' மற்றும் சோடனைப்பொருள்களை மிகவும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள,

**அம்பிகாபதி**
(Ambihapathy Fancy Goods)
66, பெரியகடை, யாழ்ப்பாணம்.

(சி-32003) (25-24-13-16)



யாழ். நகரில்......!

## சக்தி தொலைக்காட்சி (T.V.)

இப்பொழுது உங்கள் முன்!

நாங்கள் ஹோ எகட்டன் செனித் மார்க்கட்டிங் & அட்வடைசிங் சிஸ்டம்ஸ் மற்றுமொரு மைல்கல்!

விளம்பரத்துறையில் 35 வருடகால அனுபவம் மிக்கவர்களான M.T.V. நிறுவனத்தினருக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தொலைபேசி: 222/7227,
தொலைநகல்: 222/7227,
வழித் தொலைபேசி: 0777 032188.

கண்டிக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை.
கண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

(C31000)(31-24-13-16)


## அறிவித்தல்

## தமிழீழ வைப்பகம்

19.04.1996ஆம் நாளுக்கு முன்னர் தமிழீழ வைப்பகத்தின் யாழ்ப்பாணம், நெல்லியடிக் கிளைகளில் நகையடைவுக்கடன் பெற்று இன்றுவரை அவற்றை மீளச் செலுத்தத் தவறியவர்களின் அடைவு நகைகளைத் தமிழீழ வைப்பகம் விற்பனைசெய்யத் தீர்மானித்துள்ளது. எனவே, 26.12.2003 ஆம் நாளுக்கு முன்னர் அதற்கான முற்பணத் தொகையினையும், 19.04.1996 ஆம் நாள் வரைக்குமான வட்டித் தொகையினையும் மட்டும் செலுத்தி மீட்டுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மேலாளர்,
ஆளுகைப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

(C/31872) (26-24-13-16)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



திருமதி
**நடராசா பொன்னம்மா**

மண்ணுலகில் 02.06.1925 — விண்ணுலகில் 15.11.2003

*அன்புடனும் பண்புடனும் எமை வளர்த்து*
*ஆளாக்கிய எமது அம்மாவிற்கு எமது*
*இதயபூர்வ அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்!*

அன்னாரின் ஆத்மா சாந்திபெற வீரபத்திரரின் கழலிணையை இறைஞ்சி நிற்கிறோம்.

ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!

எமது அன்புத் தெய்வம் சிவபதமடைந்த செய்திகேட்டு நேரில்வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியவர்களுக்கும் மற்றும் பலவகையிலும் உதவிகள் புரிந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, இன்று (15.12.2003) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

*தனிப்பட்ட அழைப்பிதழ் கிடைக்கத் தவறியோர் இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

'விஜி அகம்',
புலவனார் வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(25839)(34-24-11-16)

உதயன்

## இந்திய நிலைப்பாடு

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியாவின் செயற்பாட்டில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றமை சகல தரப்பினராலும் கூர்ந்து கவனிக்கப்படுகிறது. இதனை "இந்தியப் போக்கில் கருதி மாற்றம்" என்று இப்பத்தியில் விலாவாரியாகக் குறிப்பிட்டிருந்தோம். அதனை உறுதிசெய்யும் தகவல்கள் தொடர்ந்து வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் ஈழத் தமிழர்களின் ஏகபிரதிநிதிகளாகக் கணிக்கப்படுபவர்கள் விடுதலைப் புலிகள். ஏகபிரதிநிதிகள் என்பதிலும்பார்க்க அதிகாரபூர்வ - உண்மையான பிரதிநிதிகள் (Authentic Representatives) என்று குறிப்பிடுவது இன்னும் பொருத்தமாக இருக்கும்.

புலிகள் இயக்கம் மீதான தனது வெறுப்பை வெளிப்படுத்த முயலும் இந்திய ஆளும்வர்க்கம், அதற்காக ஈழத்தமிழர்களை நட்டாற்றில் விடும் தனது செயல்பாடு குறித்து சற்றேனும் கவலை கொள்வதாக இல்லை என்பதே யதார்த்தம்.

இந்திய மத்திய அரசைப் பொறுத்தவரை இது தேர்தல் காலம். நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தலுக்கு ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியும் அதன் கூட்டணிக் கட்சிகளும் மட்டுமன்றி ஏனைய அனைத்துக் கட்சிகளும் மும்முரமாகித் தயாராகிக்கொண்டிருக்கும் வேளை. இச்சமயத்தில் ஏனைய கட்சிகளுடன் கூட்டமைத்துக் கொள்வது குறித்தும் எதிர்க்கட்சிகளோடு துவந்த யுத்தம் புரிவது குறித்துமே பெரிய கட்சிகள் சிந்திக்கின்றன.

அதுவும் ஆளும் கட்சியான பாரதிய ஜனதாக் கட்சியைப் பொறுத்தவரை தனது ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்வதற்காகப் பகீரதப் பிரயத்தனம் செய்ய வேண்டிய நிலைமை அதற்கு. அதனால் வேறு சிக்கல் தரும் - அளவுக்கு அதிகமாகத் தொல்லைகளை ஏற்படுத்தும் - தனக்கு அத்தியாவசியமற்ற - விடயங்களில் தலையிட்டு, குழப்பிக்கொள்ளும் எண்ணப்போக்கு அதன் ஆட்சித் தலைமையை வகிக்கும் தலைவர்களுக்கு இல்லை.

பொதுத் தேர்தலைச் சந்திப்பதற்கான மும்முர முன்னேற்பாடுகள் குறித்தும் அதிகம் அலட்டிக்கொள்ளும் அவர்கள், பொது ஆட்சி விவகாரங்களை மூத்த அதிகாரிகள் வசம் விட்டுவிட்டு ஒதுங்கி நிற்கின்றார்கள். - முக்கிய விவகாரங்களில் மட்டும் தலையிடுவதோடு சரி.

வெளிவிவகார அமைச்சும் இதற்கு விதிவிலக்கல்ல.

அதனால் அங்குள்ள இராஜதந்திரிகள், மூத்த அதிகாரிகளின் கைகள் இப்போது ஓங்கியிருக்கின்றன. இந்த மூத்த அதிகார வர்க்கத்தின் கருத்துகள், போக்குகளுக்கு மாறான வழிகாட்டல் நிலைப்பாடுகளை எடுத்து, அதற்காக தமது அமைச்சுகளுக்குள்ளேயே மற்றொரு யுத்தமுனையைத் திறப்பதற்கு ஆளும் கட்சியின் மூத்த அரசியல்வாதிகளுக்கு - அமைச்சர்களுக்கு - நேரமும் இல்லை; அவகாசமும இல்லை; கவனமும் இல்லை; கவலையுமில்லை; தேவையுமில்லை.

இந்த சுதந்திரமான நிலைமையை வைத்துக் கொண்டு, தமது விருப்பப்படி காய்களை நகர்த்தத் தொடங்கியிருக்கின்றார்கள் மூத்த அதிகாரிகள் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

இலங்கை இனப்பிரச்சினை விடயத்திலும் ஈழத்தமிழர்களுக்கு எதிரான தீவிரப் போக்கைக் காலங்காலமாக வரவேற்று வந்த ஆளும்வர்க்க அதிகாரிகள் இப்போது சந்தர்ப்பமும் வாய்ப்பும் கிடைத்ததும் தமது கைவரிசையைக் காட்டத் தொடங்கியிருக்கின்றார்கள். அதன் வெளிப்பாடே இந்தியாவின் போக்கு மாற்றமாக இங்கு தென்படுகின்றது.

புலிகளுக்கு எதிரான சர்வதேசப் பாதுகாப்பு வலை ஒன்றைப் பின்னுவதற்காக அமெரிக்காவின் காலடியில் விழ்ந்தார் பிரதமர் ரணில். அதனால், சீற்றமுற்ற இந்தியா இங்கு எதிர் நடவடிக்கைகளுக்குப் பின்னணியில் நின்று தூபமிட்டது.

பாதுகாப்பு அமைச்சு, உள்துறை அமைச்சு உட்பட மூன்று முக்கிய அமைச்சுக்களை பறித்தெடுக்கும் ஜனாதிபதியின் அதிரடி நடவடிக்கைகளுக்குப் பின்னால் வடக்கு அயலவரின் வழிகாட்டல் அதிகம் இருந்தது என்பதை அப்போதே சுட்டிக்காட்டியிருந்தோம்.

பாதுகாப்பு அமைச்சும், படைக் கட்டுப்பாடும் - விடுதலைப் புலிகளுடன் சமரசம் பேணி, அமைதித் தீர்வை சமாதான வழியில் காணும் முயற்சிக்கு ஒத்துவராத - ஜனாதிபதியின் கைகளுக்கு முற்றும் முழுதாக வந்து விட்டது. தமது வழிகாட்டுதலில் அந்த நடவடிக்கைகளை வெற்றிகரமாகச் செய்து முடித்த அரசியல் தலைமைக்கு இந்தியா பரிசு தரவேண்டாமா?

இராணுவத் தளபதியும் முப்படைகள் மற்றும் பொலிஸின் சிரேஷ்ட அதிகாரியுமான லெப்டினன்ட் ஜெனரல் பலகல்லவை இந்தியாவுக்கு அழைத்து கூடுதல் பாதுகாப்பு ஒத்துழைப்புக்கு உறுதியளித்த இந்தியாவின் செயற்பாடு ஒரு வகையில் இவ்வாறு வெகுமானம் - பரிசு - வழங்கும் நடவடிக்கைதான்.

எது, எப்படியோ மொழியாலும், பண்பாட்டாலும், பழக்கவழக்கங்களாலும், வாழும் முறையாலும் தென்னிந்திய மக்களோடு பின்னிப் பிணைந்து நிற்கின்ற ஈழத் தமிழரை ஒதுக்கிவிட்டு - அவர்களின் நலன்களைப் புறந்தள்ளிவிட்டு - இந்தியா எடுக்கும் நடவடிக்கைகள், அது தன்மீதே மண் வாரி வீசும் வேலையாகத்தான் போய்முடியும் என்பது மட்டும் நிச்சயம்.

# அராலிப் பகுதி விவசாயிகளுக்கு பம்பாய் வெங்காய நாற்றுகள்

## இறக்குமதி செய்து வழங்க ஏற்பாடு

வலி.மேற்கு,டிசெ.15

அராலிப் பகுதி விவசாயிகளுக்கு இந்தியாவில் இருந்து நல்ல இன பம்பாய் வெங்காய விதைகள் இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்படவுள்ளன.

இதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தொல்புரம் கமநலசேவை நிலையப் பதில் பெரும்பாக உத்தியோகத்தர் திருமதி சா.குகநேசன் தெரிவித்தார்.

கிராம அலுவலர்கள், விவசாயப் போதனாசிரியர், விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்ட கூட்டத்திலேயே அவர் மேற்படி தகவலை வெளியிட்டார்.

வலிகாமம் மேற்குப் பிரதேச விவசாயிகளின் வேண்டுகோளுக்கிணங்க தொல்புரம் கமநலசேவை நிலையத்தில் பதில் பெரும்பாக உத்தியோகத்தர் திருமதி சா.குகநேசன் தலைமையில் அண்மையில் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

★ பல லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட பொன்னாலை பெரிய குளத்திற்கு உடனடியாக தடுப்புப் பலகைகள் பொருத்தப்படவேண்டும்.

★ பொன்னாலையிலுள்ள கடற்படையினரின் காவல்வேலி சேதமடைந்துள்ளதனால், இப்பாதையூடாக காரைநகரில் இருந்து கட்டாக்காலி மாடுகள் பொன்னாலையினுள் நுழைகின்றன. இவ்வாறு நுழையும் ஆடு, மாடுகளால் பொன்னாலை, சுழிபுரம் ஆகிய இடங்களிலுள்ள வயல் நிலங்களில் பயிர்கள் அழிக்கப்படுகின்றன. எனவே, மேற்படி பாதுகாப்பு வேலியைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலருடாக கடற்படையினரிடம் வேண்டுகோள் விடுத்தல்.

மேற்படி தீர்மானங்கள் உட்பட மேலும் பல ஆக்கபூர்வ ஆலோசனைகள் குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. (எ-175)

### நாரந்தனை - சூரியாவத்தையில்

## வெள்ளம் தங்கியதை அடுத்து வீடமைப்புப் பணிகள் தாமதம்

ஊர்காவற்றுறை,டிசெ.15

நாரந்தனை, சூரியாவத்தைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீடமைப்புப் பணிகள் அவ்விடத்தில் தேங்கியுள்ள வெள்ளம் காரணமாக தடைப்படும் அவலம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் வீடமைப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் கூறப்பட்டது.

நாரந்தனைப் பகுதியில் சொந்தக் காணியற்றவர்களுக்கு குறுக்குக் கடல் ஓரமாக உள்ள அரச காணிகளில் போரூட் நிறுவனத்தின் உதவியுடன் வீடுகள் அமைப்பதற்கென கட்டடப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

பலரது அத்திபாரத்திற்கு மேலாக கடல் வெள்ளம் நிற்பதனால் வீடுகளைக் கட்டி முடிப்பதற்கு என பறிக்கப்பட்ட மணலும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. மற்றும் சிலர், வெள்ளம் தேங்கி நிற்பதால் அத்திபாரம் வெட்டுவதற்கான கிடங்குகள் கூட வெட்ட முடியாத நிலையில் அவதிப்படுகின்றனர்.

இதனால், வீடுகளைக் கட்டி முடிப்பதற்கென வழங்கப்பட்ட காலத்தை வெள்ளம் வற்றும்வரை நீடித்துத் தருமாறு வீட்டுத் திட்ட பயனாளிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-16)

### மனிதநேய அமைப்பினால்

## ஓமந்தை சூனியப் பகுதியில் கண்ணி அகற்றும் பணிகள்

வவுனியா,டிசெ.15

வவுனியா - ஓமந்தையில் உள்ள விடுதலைப் புலிகளின் சூனியப் பகுதியில் வெடிபொருள்களை மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் அகற்றி வருகின்றனர்.

சூனியப் பகுதியான 100 மீற்றர் பகுதியில் - இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியான 50 மீற்றர் பகுதியில் ஏற்கனவே, இராணுவ கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் வெடி பொருள்களை அகற்றியிருந்தனர்.

தற்போது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள 50 மீற்றர் சூனியப் பகுதியில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் வெடிபொருள் அகற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இராணுவ நடவடிக்கையின் போது புதைக்கப்பட்ட வெடி பொருள்களினை இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியிலும், இராணுவ கட்டுப்பாடற்ற பகுதியிலும் பல்வேறு தொண்டு நிறுவனங்கள் அகற்றி வருகின்றமை தெரிந்ததே. (எ-164)

### நாளை

மார்கழி 01
செவ்வாய்க்கிழமை
(16.12.2003)
திதி : ஸப்தமி
முற்பகல் 7.31 வரை
நட்சத்திரம்: பூரம்
பிற்பகல் 12 ? வரை
சுபநேரம்: 10.52-12.22
ராகுகாலம்: 3.22-4.52
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஒருவர் அனுபவம் இன்னொருவருக்கு உதவாது. அதிலும் திருமணத்தைப் பொறுத்தவரையில் அவரவர் பொறுப்பை அவரவர்களே உணரவேண்டும்.

## சிறுவனுக்குத் தீக்காயம்; மூவர் விளக்க மறியலில்

தெல்லிப்பழை,டிசெ.15

ஒன்பது வயதுச் சிறுவனொருவனை நெருப்பால் சுட்டுக் காயம் விளைவித்தார்கள் எனக் குற்றஞ்சுமத்தி வட்டுக்கோட்டை பொலீஸாரால் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட மூவரை நாளை செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் உத்தரவிட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை துணவிப் பகுதியில் தனது பெற்றோரை விட்டு விலகி பெரிய தாயாருடன் தங்கியிருந்த ஒன்பது வயதுச் சிறுவன் நெருப்புச்சூட்டுக் காயங்களுக்கு உள்ளாகியிருந்தான் என்றும் -

இந்தச் சிறுவனின் நிலையை அறிந்து கொண்ட சிறுவர் நலன்பேணும் அமைப்பு ஒன்று பொலீஸாருக்குத் தகவல் கொடுத்ததையடுத்து மேற்படி சிறுவன் தங்கியிருந்த வீட்டிற்குச் சென்ற பொலீஸார் சிறுவனின் பெரிய தாயாரையும் அவ்வீட்டில் தங்கியிருந்த குறித்த சிறுவனது உறவினர் இருவரையும் சுடந்தவார முற்பகுதியில் கைதுசெய்து மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்திருந்தனர்.

இதனையடுத்து நீதிவான் சம்பந்தப்பட்ட மூவரையும் நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். இதேவேளை - குற்றஞ்சுமத்தப்பட்ட நபர்களில் ஒருவரான சிறுவனின் பெரிய தாயார் ப.விநாயகி என்பவர் பாலூட்டும் தாயார் எனவும் -

கைக்குழந்தையின் நன்மைகருதி அவரை பிணையில் விடுதலை செய்யுமாறும் - எதிரி தரப்புச் சட்டத்தரணி வேண்டுகோள் விடுத்தார். இதனை ஏற்றுக்கொண்ட நீதிவான் அவரை பிணையில் செல்ல அனுமதித்தார். (எ-150)

## ஆலயத்தில் திருடமுயற்சித்தவர் பொதுமக்களிடம் சிக்கினார்

### தச்சன்தோப்பில் சம்பவம்

யாழ்ப்பாணம்,டிசெ.15

ஆலய விக்கிரகத்தைத் திருட முயன்ற நபர் பொதுமக்களிடம் சிக்கினார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு தச்சன்தோப்புப் பகுதியில் இடம்பெற்றது.

இத்தகவலை மேற்படி ஆலய நிர்வாக சபைத் தலைவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

தச்சன்தோப்பு, அரசடி அகோர காளி அம்மன் ஆலயச் சுற்றாடலில் நேற்றுமுன்தினம் நபரொருவர் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடினார். ஆலய நிர்வாக சபை உறுப்பினர்களும், பொதுமக்களும் அந்த நபரைக் கண்காணித்தனர். அந்த நபர் ஆலயத்துக்குள் நுழைய முயற்சித்தபோது பொதுமக்கள் அவரை மடக்கிப் பிடித்தனர். அந்த நபரைச் சோதனையிட்டபோது அவரிடம் பெருந்தொகைப் பணம் இருந்தமை தெரியவந்தது.

இதனையடுத்து, அந்த நபரையும் பணத்தையும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினரிடம் பொதுமக்கள் ஒப்படைத்தனர்.

என்று அவர் தெரிவித்தார்.

இந்த ஆலயத்தின் கண்டாமணி கடந்த மாதம் காணாமற் போனதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-7)






## எனக்குப் பள்ளிக்கூடம் போக ஆசை

புதிய ஆசிரியையின் கடைசி நாளன்று வகுப்பில் ஒரு விபத்து நடைபெற்றது. அலுமாரியின் கதவைத் திறப்பதற்காக ஆசிரியை இறுக்கி இழுக்கிறார். கதவு திறக்கவில்லை. அலுமாரி கவிழ்ந்து அவர் மேல் விழுகிறது. அவர் அதன் கீழ் அகப்பட்டு விட்டார். நெம்புகோல் பற்றி தாரா சொல்லிக் கொடுத்தது மீனாவின் மனதில் பளிச்சிடுகின்றது. அவள் வெளியே ஓடிப்போய் ஒரு நீண்ட கோலை எடுத்து வருகின்றாள். அந்தக் கோலை நெம்புகோலாக உபயோகித்து அலுமாரியை அவர்கள் நிமிர்த்துகின்றார்கள். புதிய ஆசிரியை எழும்புகின்றார். இந்தச் சம்பவத்திலிருந்து ஆசிரியை ஒரு படிப்பினையை கற்றுக்கொண்டார். அவர் பயிற்சி வகுப்புகளுக்கு போய்க் கற்றுச் சிறந்த ஆசிரியையாக மாற முடிவு செய்தார்.

பழைய ஆசிரியை திரும்பி வருகின்றார். அவருக்கு தன்னுடைய வகுப்புக்கு திரும்பி வந்ததையிட்டு பெரும் மகிழ்ச்சி.

பிள்ளைகளுக்கும் சந்தோஷம். அதன் பின்பு பாடசாலைக்குப் போவது மீனாவுக்கு விளையாட்டாக மாறிவிட்டது.



(சி-32030)

அனுசரணை:

unicef

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு
அறை எண் 30,
யாழ். போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

## வாழ்த்தும் பாராட்டும்



சமாதான நீதிவானாகப் பதவியேற்ற சுதுமலை வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த **உயர்திரு. சி.சிவகுரு** அவர்களுக்கு

(ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்)

*திரு. மார்க்கண்டு சுவாமிகள் மலர்மாலை அணிவித்து அவரது சேவை நல்ல முறையில் தொடர வேண்டும் என்று 21.11.2003இல் மானிப்பாய் அருள் முருகனை வேண்டி ஆலயத்தில் அவரைக் கௌரவித்து வாழ்த்திப் பாராட்டி மகிழ்கின்றார்.*

- சுவாமிகள்

ஸ்ரீ அருள்முருகன் நிலையம்,
லோட்டன் றோட், மானிப்பாய். (25797) (26-24-13-16)

## நன்றி கலந்த வாழ்த்துக்கள்



வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபையினரின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு இவ்வாலயத்தின் சுற்றாடலிலுள்ள வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள 25 குடும்பத்தினருக்கு மலசலகூட வசதிக்காக 250 சிமெந்துப் பைகளை அன்பளிப்பாகத் தந்துதவிய -

இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர்

மாண்புமிகு

**தியாகராஜா மகேஸ்வரன்**

அவர்களுக்கு எங்கள் ஊர்மக்கள் சார்பில் நன்றி தெரிவித்து வாழ்த்துகின்றோம்.

- வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபையினர்.

*வதிரி. அல்வாய்.* (25817) (25-24-13)

## கண்ணீர் அஞ்சலி

இ.மி.சபை பருத்தித்துறை ஊழியரும், பண்டாரி அம்மன் கோவிலடி, தம்பசிட்டியை வதிவிடமாகவும் கொண்டவருமான

**அமரர் செ.முருகேசு**

*அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம். அத்துடன், அன்னாரின் மறைவால் துயருறும் குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

*மி.பா.சே.நிலையம், இ.மி.ச., பருத்தித்துறை.* (32010) (25-13-24)

மின் அத்தியட்சகர், சக ஊழியர்கள்.

## விசேட விலைக்கழிவு

கருமாரி மோட்டோஸ்

- லான்ட் மாஸ்டர்
- வாட்டர்பம்
- ஜெனரேட்டர்
- ஓட்டோ
- மீன்பிடி இயந்திர உதிரிப்பாகப் பாவனையாளர்களுக்கும், எமது வாடிக்கையாளர்களுக்கும்

**விசேட விலைக்கழிவு**

**01.12.2003 முதல் 31.12.2003 வரை**

இல. 281 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது நிறுவனத்தின்

20 ஆவது ஆண்டு நிறைவு 10.12.2003 இல் வருகின்றமையால் இந்த விலைச் சலுகைகளை வழங்குகின்றோம் என்பதை அறியத்தருவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

- நிறுவனத்தினர்.

(C/31553)(14-16-17)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

தோற்றம் 23 - 02 - 1935



மறைவு 15 - 11 - 2003

**வெலிச்சோர் மைக்கல்**

*அன்போடும் பண்போடும் ஆதரித்தீர் காலமெல்லாம்.*
*இன்சொல்லே பேசி மகிழ்வித்தீர் எப்பொழுதும்;*
*"இன்றோ நாளையோ சுகம் பெற்று வந்திடுவீர்"*
*என்ற எம் எண்ணம் கனவாகி விட்டதுவே.*
*குழந்தை போல் பழகி ஒரு குழந்தையில்லாக் குறைதீர்த்தீர்.*
*குழந்தையில்லா மனக்குறையை இன்றுதான் நான் உணர்ந்தேன்.*
*நாற்பத்தோராண்டு நான் வாழ்ந்த வாழ்க்கை எல்லாம்*
*நொடிப் பொழுதில் மண்ணோடு மண்ணாய்ப் போனதுவே.*
*களிப்போடு வாழ்ந்த இனிய நினைவு மட்டும்*
*அழியாது எம் வாழ்வு நிலைக்கும் வரை!*

- அன்பு மனைவி, சகோதரர்கள், உறவினர்.

*408, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.* (25785) (26-24-13)

## திறப்புவிழா

யாழ். மாநகர சபையின் புதிய பாலர் பாடசாலைத் திறப்புவிழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.15 மணிக்கு மாநகர சபையில் உள்ள பாலர் பாடசாலை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

மாநகர சபை ஆணையாளர் இ.இராமலிங்கம் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும். (எ-8)

## கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிப்பு

வட்டுக்கோட்டை பொதுச்சுகாதார அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளன.

வட்டு.மேற்கு கிராம அலுவலர் பிரிவிலும், அதனை அண்டிய பகுதிகளிலும் நாளைமறுதினம் புதன் கிழமை காலை 7.00 மணிமுதல் 3.00வரை இந்தப் பணி இடம்பெறும்.

அன்றையதினம் வளர்ப்பு நாய்களைக் கட்டிவைத்து ஒத்துழைப்பு வழங்குமாறு இப்பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.பரமேஸ்வரன் கேட்டுள்ளார். (எ-161)

## நேர்முகப்பரீட்சை

கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் வலி.மேற்கில் நடத்தப்படும் தையல் மனையியல் டிப்ளோமா பயிற்சிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இன்று காலை 9.30 மணிக்கு வலி. மேற்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய அடையாள அட்டை, பிறப்புசாட்சிப்பத்திரம், கல்விச்சான்றிதழ், குடும்ப அட்டை, கிராம அலுவலரின் நற்சான்றிதழ் ஆகிய ஆவணங்களுடன் விண்ணப்பித்த அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தா.தியாகமூர்த்தி கேட்டுள்ளார்.(எ-175)

## தேவை

தையல் வேலையில அனுபவமுள்ள ஆண்கள் தேவை.
தொடர்பு:
**Fast Studio and Colour Lab**
*இல. 392. பிரதான வீதி. யாழ்ப்பாணம்.*
(சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கு அண்மையில்)

## ஆள் தேவை

தையல் வேலையில அனுபவமுள்ள ஆண்கள் தேவை.
தொடர்பு:
**குமார் தையலகம்**
*மூன்றாம் கட்டை, கொக்குவில், தாவடி.*
தொ.பே.இலக்கம்: 0777 111486


Available Canon NP1215 Parts

| | | |
|---|---|---|
| OPC Drum | C | 1200.00 |
| Cleaning Blade | C | 400.00 |
| Drum Unit | K | 8000.00 |
| Developer Unit | O | 9900.00 |
| Developer Cylinder | C | 3750.00 |
| Developer Spacer | O | 450.00 |
| Developer Bearing | O | 400.00 |
| Developer Seal | O | 75.00 |
| Heater Roller | C | 800.00 |
| Heater Roller Bush | O | 650.00 |
| Oil Roller | C | 400.00 |
| Separation Claws | K | 125.00 |
| Lower Roller | K | 1500.00 |
| Thermister | O | 1000.00 |
| Thermo Switch | O | 1000.00 |
| Springs | K | 20.00 |
| Heater Roller Gear Set | C | 900.00 |
| Main Motor Gear Set | C | 900.00 |
| Paper Path Belt Set | C | 800.00 |
| Heate Lamp | C | 650.00 |
| Exposer Lamp | C | 550.00 |
| Exposer Cable | C | 600.00 |
| Scanner Cable | C | 500.00 |
| Toner Cartridge | C | 500.00 |
| Toner Bag | C | 400.00 |
| Panel Sticker | C | 400.00 |
| Top Sticker | C | 250.00 |
| T.C.Assembly | C | 2750.00 |
| Mirrors (Any) | O | 2000.00 |
| D.C. Board | O | 7500.00 |
| Power Supply Board | O | 5000.00 |
| H.V.T.Board | O | 6000.00 |
| A.V.R. Board | O | 4000.00 |
| Cooling Fan | O | 3000.00 |
| Main Motor with wheel | O | 7000.00 |
| Fully Recon Machine | | 55,000.00 |

ORIGINAL (O)
KATUN (K - USA)
COMPATIBLE (C)
Over 2,000.00 Purchase 1 Calendar
Over 10,000.00 Purchase 5%Dis.
Over 50,000.00 Purchase 10%Dis.

**PEACE LANKA (PVT)LTD**
No.26, Castle lane, Colombo - 04
2582320, 2586479,
0722 - 263778.

## சக்தியை இப்பொழுது கண்டறியுங்கள்!



UMAZAKI Judo

அழகும் எழிலும் மிக்க தோற்றம்
எங்கும் எதையும் வெல்லும்
வல்லமை கொண்ட உண்மையான தோற்றம்

● பாதுகாப்பு. ● வசதி. ● சிக்கனம்.

*125CC என்ஜின் பவர்*

உமஸாக்கி ஜூடோ - சக்தியை இப்பொழுது கண்டறியுங்கள்

ஏக முகவர்கள்
**செண்ட் அந்தனீஸ் கொன்சலிடேட்டட் லிமிட்டெட்**
516. ஸ்ரீ சங்கராஜ மாவத்தை. கொழும்பு 10 தொலைபேசி: 2324261-5. 2337283-5 ஃபக்ஸ்: 2446554
**யசோ மோட்டர்ஸ்** 163. ஸ்டென்லி வீதி யாழ்ப்பாணம்

நாடெங்கும் உள்ள வியாபாரிகளிடம் கிடைக்கின்றன.

Access Graphics

# உள்ளூராட்சி ஊழியர்களின் இடமாற்றம் மறுபேச்சு இன்றி அமுலாக வேண்டியதே!

**வடக்கு - கிழக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சினால் 01-01-2004 முதல் அமுல்படுத்தப்படவுள்ள உள்ளூராட்சி மன்றப் பணியாளர்களின் இடமாற்றம் தொடர்பாக ஆட்சேபனைகளும் ஆதரவான கருத்துக்களும் வெளியிடப்பட்டு வருகின்றன.**

**இத்தகைய இடமாற்றம் ஏன் அவசியம் என்பது குறித்து வாசகர் ஒருவர் இங்கே விவரிக்கிறார்.**

தங்கள் பத்திரிகையில் வாசகர் திருமுகத்தில் 11.12.2003 அன்று உள்ளூராட்சி இடமாற்றங்கள் பற்றி ஒரு வாசகர் எழுதியிருந்தார்.

அவ்வகையில் நிறுவனங்களை மேம்படுத்தவும் சீர்திருத்தவும் மேற்கொள்ளப்படும் இடமாற்றங்கள் நடந்தேறவேண்டியவைதான். அதுசார்ந்து சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைத்தேயாகவேண்டும்.

யாழ். மாநகரசபை பற்றியதாக ஒரு மேலோட்டமான கண்ணோட்டத்தை இங்கு தரலாமென விரும்புகிறேன்.

யாழ். மாநகரசபைக்குரிய ஒட்டுமொத்தமான ஓர் அரசியல் வரலாற்றையும் உள்ளூராட்சித் தேர்தல்களும் அதன்மூலம் தெரிவான முதல்வர்கள், சபை உறுப்பினர்கள் ஆகியோரின் நிர்வாக முறைமையையும் ஒட்டுமொத்தமான வட-கிழக்கு தமிழர் அரசியல் அபிலாஷைகளுடன் இணைத்தே நன்மை தீமைகளுடன் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

ஆனால், அவ்வாறு தேர்தல்கள் மூலம் தெரிவுசெய்யப்பட்ட சபைகள் இருந்த காலத்திலும் அவை கலைக்கப்பட்ட காலங்களிலும் மாநகரசபையின் நிறைவேற்று, அமுலாக்க அதிகாரம் அவ்வப்போது பதவியிலிருந்த மாநகர ஆணையாளர்களிடமும் அவர்களின் கீழ் பெரும்பாலும் (ஓய்வுபெறுவதைத் தவிர) அடிக்கடி இடமாற்றங்களுக்கு உட்படும் நிலையில்லாத அதிகாரிகளின் கீழான பணியாளர்களிடமுமே இருந்து வருகிறது.

மேற்படி அதிகாரிகள், பணியாளர்களுள் வட - கிழக்கு மாகாணசபையின் நியமனக் கட்டுப்பாடுடையோரும் (மாகாண அரச சேவை, மத்திய அரசசேவையைச் சேர்ந்தோர்) மாநகரசபையின் நியமனக்கட்டுப்பாடுடையோரும் (நியமனத்தின் பின்னர் மாகாணசபையே இவர்களின் கட்டுப்பாட்டுக்கும் பொறுப்பு) உள்ளனர்.

மேலே மாகாண அரச சேவை, மத்திய அரச சேவையைச் சேர்ந்தோரை அட்டவணைப்படுத்தப்பட்ட பதவி நிலை சார்ந்தோர் என்றும் மாநகரசபையின் நியமனக்கட்டுப்பாடு உடையவர்களை அட்டவணைப்படுத்தப்படாத பதவிநிலை சார்ந்தோர் என்றும் அழைப்பர்.

உள்ளூராட்சி அமைச்சின் கீழ் வரும் பிரதேசசபைகள், நகரசபைகள், மாநகரசபைகள் அனைத்திலும் அகில இலங்கைரீதியாக நிர்வாகத்தில் மூத்த முகாமைத்துவத்திலும் நடுமுகாமையாளர்களாகவும், நடுத்தர தொழிநுட்ப மற்றும் அதன் சம வகுப்பினர், இலிகிதர் மற்றும் சமமான வகுப்பினர் ஆகியோர் மாகாண, மத்திய அரச சேவையைச் சேர்ந்த அவ்வவற்றின் பொதுச் சேவை ஆணைக்குழுக்களின் நியமனக் கட்டுப்பாட்டின்கீழ் வருவர். பல்வேறு பிரிவுகளையும் சேர்ந்த மேற்பார்வையாளர்கள் (உதாரணம் - வேலை மேற்பார்வையாளர், சனசமூகநிலைய மேற்பார்வையாளர், சுகாதார மேற்பார்வையாளர், வருமானமேற்பார்வையாளர், சந்தை மேற்பார்வையாளர்), சேகரிப்பாளர்கள் (வரி, வாடகை), மேசன்மார், பொருத்துநர்கள், உதவியாளர் (நூலக உதவியாளர், களஞ்சிய உதவியாளர்கள்), சாரதிகள், ஓட்டுநர்கள், மின்இணைப்பாளர்கள், ஏவலாளர்கள், தூதுவர்கள், புத்தகம் கட்டுபவர், பதிவகக்காப்பாளர், தொலைபேசி இயக்குநர், ஆயுள்வேத மருந்தகர்கள், மண்டப பராமரிப்பாளர்கள், காவலர்கள், இயந்திர இயக்குநர்கள், காசு எண்ணுபவர், அலுவலகத் தொழிலாளிகள், துப்புரவு செய்பவர்கள், வீதித் தொழிலாளிகள், நீர்வேலைத் தொழிலாளிகள், கொல்களத்தொழிலாளர்கள், கூட்டுத் தொழிலாளிகள், சுத்திகரிப்புத் தொழிலாளிகள், பெண் பரிசாரகர், மின்தொழிலாளிகள், சந்தைத்தொழிலாளிகள், பொதுத்தொழிலாளிகள், டி.டி.ரி. தொழிலாளிகள், பெண்சுகாதார உதவியாளர்கள் போன்ற பதவிகளே மாநகர நியமனக் கட்டுப்பாடு உடைய அட்டவணைப்படுத்தப்படாத பதவிகள் எனப்படும். இவர்கள் தாம் நியமனம் செய்யப்படும் சபையிலேயே ஓய்வூதியம்வரை பணி செய்பவர்.

மாகாண, மத்திய அரசசேவையைச் சேர்ந்த அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளான ஆணையாளர், செயலாளர்கள், கணக்காளர்கள், வைத்திய அதிகாரிகள், பொறியியலாளர்கள், நூலகர்கள், சட்ட அலுவலர்கள், தொழில்நுட்பவியலாளர்கள், எழுதுவினைஞரும் அதனோடு இணைந்த சேவைகளையும் சேர்ந்த சேவையில் மூத்த சிரேஷ்ட உத்தியோகத்தர்கள், கனிஷ்ட உத்தியோகத்தர் ஆகியோரே அட்டவணைப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்கள் ஆவர்.

**அரியாலையூர் கிறிஸ்தோபர் சிலுவைராசா**

மேலே சொல்லப்பட்ட அட்டவணைப்படுத்தப்படாத பணியாளர்கள் அனைவரும் நியமனம் செய்யப்படுவதில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ அட்டவணைப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் சிபாரிசுகளும் தயவுதாட்சணியமும் உத்தியோகபூர்வமாகவோ உத்தியோகப்பற்றற்ற முறையிலோ இன்றியமையாததாகவுள்ளது. அட்டவணைப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் இரத்த உறவுகள், தூரத்து உறவுகள், நண்பர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரே சிபாரிசு செய்யப்படுகின்ற வாய்ப்பு உள்ளது. மேலும் அவர்கள் போட்டிப்பரீட்சைகள் மூலம், அப்பரீட்சை வினாத்தாள்களை, நடுநிலையான மதிப்பீட்டாளர்கள் மதிப்பீட்டு புள்ளியிட்டு, அதில் தெரிவுசெய்யப்படுபவர்கள், நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவாகும் ஆளணி அல்ல. அட்டவணைப்படுத்தப்படாத உத்தியோகத்தர்கள், தொழிலாளிகள் தரத்தினருக்கு மிகக்குறைந்த கல்வித்தகைமைகளே வேண்டப்படுவதால் அவர்களுக்கு எழுத்துப்பரீட்சை சாத்தியமில்லை. எனினும், அட்டவணைப்படுத்தப்படாத ஏனைய பதவிகள் பெரும்பாலும் அடிப்படையில் G.C.E.(O/L) பரீட்சையில் சித்தி அல்லது அதற்குச் சமமான தகைமைகளுடன் நியமிக்கப்படுவன. இப்பதவிகளுக்கு இலங்கையில் யாழ். மாநகரசபை தவிர்ந்த ஏனைய சில மாநகரசபைகளில் எழுத்துப்பரீட்சை, நடுநிலைமை பேணக்கூடிய நேர்முகப்பரீட்சைகள் என்பன மூலம் முயற்சிக்கப்பட்டுள்ளன.

ஆனால், யாழ்ப்பாண மாநகர சபையை எடுத்துக்கொண்டால் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகள் முற்றிலும் அட்டவணைப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் சிபாரிசுகள், தயவுதாட்சணியமூலம் நகர்த்தப்பட்டு அதே அட்டவணைப்படுத்தப்பட்ட பதவி ஆளணியினர் அங்கத்தவர்களாக விளங்கும் நேர்முகப்பரீட்சைச் சபைமூலமே கடந்த பலவருடங்களாகத் தெரிவாகிவந்துள்ளனர். (தேர்தல்கள் மூலம் தெரிவான முதல்வர், அங்கத்தவர்களின் சிபாரிசுகள், செல்வாக்குகள் மூலம் சில நியமனங்கள் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளுள் உள்ளன) எனினும், 99% அட்டவணைப்படுத்தப்படாத பதவிகள், அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளில் உள்ளவர்களாலேயே தீர்மானிக்கப்படுகிறது.

தயவுசெய்து ஒன்றை விளங்கிக் கொள்ளுங்கள். மேலே தெரிவாகும் அட்டவணைப்படுத்தப்படாத பதவி நிலையினர் நியமனமான திகதியிலிருந்து ஓய்வுபெறும் வரை இடமாற்றம் எதுவுமின்றி யாழ். மாநகரசபையிலேயே தொடர்ந்து பணியாற்றுகின்றனர். ஏறத்தாழ மொத்தமாக தொளாயிரம் (900)பேர் பணிசெய்யும் இச்சபையில் எழுநூற்றி அறுபது பேர் (760) அட்டவணைப்படுத்தப்படாத ஆளணி ஆகும் அதாவது நூற்றிநாற்பது (140) அட்டவணைப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் கீழ், மேற்படி 760 பேரும் ஏதோவொருவகையில் அடங்குவர். தமக்கு வேலைதந்த எஜமானர்களுக்கு செய்நன்றி பாராட்டவேண்டிய நிர்ப்பந்தம் இந்த அட்டவணைப்படுத்தப்படாத ஆளணிக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள நிர்ப்பந்தமாக உள்ளது. இந்த 760 பேரும் G.C.E. (O/L) கல்வி அல்லது அதனிலும் குறைந்த கல்வித் தகைமையுடையோர். அவர்களுள் ஏறத்தாழ 75% பேர் (500 பேருக்கும் மேற்பட்டோர்) மிகவும் ஏழ்மை நிலையிலுள்ள பெரும்பாலும் கையெழுத்து வைப்பதற்காக மட்டுமே பேனை பிடிக்கின்ற மாநகர மக்களுக்காக வியர்வை சிந்தி உழைக்கின்ற அன்றாடக் காய்ச்சிகளாக (பெயரளவில் மாதாந்தச் சம்பளகாரர் எனினும்) உள்ளனர். அட்டவணைப்படுத்தப்பட்ட உயர் பதவிகளில் உள்ளவர்களும் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளில் உள்ள வருமானவரி மேற்பார்வையாளர்கள், வருமானவரி சேகரிப்பாளர்கள், சகலவகையான மேற்பார்வையாளர்கள் ஆகியோர் நேரடியாக நிதிப் பிரயோக நடவடிக்கைகளிலும், பொருள்கள், சேவைகளைக் கையாண்டு உற்பத்தி மற்றும் நகர மக்களின் சேமநலன் சேவைகளை வழங்குபவர்களாக உள்ளனர்.

இந்நிலையில் அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளுக்குரிய, நிர்வாக ரீதியிலான பதவி வகிப்போர் மிக நீண்டகாலம் பதவியிலிருப்பின், அவர்களது தயவில் தாட்சணியத்தில் நியமிக்கப்பட்டு பணியாற்றும் அட்டவணைப்படுத்தப்படாத ஊழியர்களை அடக்கியோ அழுத்தியோ, தமக்கிசைவாக மாற்றி லஞ்சம், ஊழல், நடவடிக்கைகளில் இறங்கவும் முறைப்படியான வளப்பிரயோகம் இல்லாமல் போகவுங்கூடிய ஏதுக்கள் மிகப்பெரிய அளவில் உருவாகிவிடும். ஆகையினால், மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவினால் யாழ். மாநகர சபை உட்பட அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டுள்ள இடமாற்ற உத்தரவை இரண்டாம் பேச்சுக்கு இடமின்றி அமுல்படுத்துவதே மாநகர மக்களுக்கும் நகரின் சேவையை அனுபவிக்கும் அனைத்து மக்களுக்கும் நன்மை பயப்பதாக அமையும். அதைவிடுத்து, இடமாற்ற உத்தரவுகளை இரத்துச் செய்து தத்தமக்கேற்ற 'சோம்பல் முறிக்கும்' நிர்வாக ஒழுங்கைக் காப்பாற்றி மக்களின் அபிவிருத்தியையும் அவர்களுக்கான சேவையையும் பாதிக்க முனைவது தனிப்பட்ட ரீதியில் ஒரு நிறுவனத்துக்குச் செய்யும் துரோகம் மட்டுமல்ல, மாநகர மக்களுக்கும் யாழ் மாவட்ட மக்களுக்கும் செய்யும் துரோகமாக அமைந்துவிடும் ★

## உடுவில் வெள்ளவாய்க்காலை புனரமைக்குமாறு கோரிக்கை

வலி.தெற்கு,டிசெ.15

உடுவில் மகளிர் கல்லூரியில் இருந்து சண்டிலிப்பாய் சந்திவரை செல்லும் டச் வீதியின் வெள்ளம் வடிந்தோடும் வாய்க்கால் நீண்டகாலமாகச் சீர்செய்யப்படாமல் உள்ளது.

சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரமுடைய இவ்வாய்க்கால் பொதுமக்கள் நெருக்கமாக வசிக்கும் வீதியோரமாகச் செல்வதால் சுகாதார சீர்கேடுகள் ஏற்பட வழிசெய்கின்றது.

வாய்க்கால் முழுவதும் பற்றைகள், செடிகள் வளர்ந்து காணப்படுகின்றன. மழைகாலத்தில் வடிந்தோடும் மணல், ஆங்காங்கே தேங்கி வாய்க்காலை மேவித் திட்டுக்களாகிக் காணப்படுகின்றது.

வீதியில் இருந்து வீடுகளுக்குச் செல்வதற்காக இக்கால்வாயை மேவிப் போடப்பட்டுள்ள பாலத்தின் கீழ் மணல் அடைந்து காணப்படுகின்றது. பொதுமக்களால் கொட்டப்படும் குப்பை போன்றவற்றாலும் வாய்க்கால் மூடிக் காணப்படுகின்றது.

வெள்ளம் ஆங்காங்கே தடைப்பட்டு நிற்பதாலும், பற்றைகள், செடிகள் வளர்ந்துள்ளமையாலும் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. சுற்றாடல் பகுதிச் சுகாதாரமும் பாதிக்கப்படுகின்றது.

சம்பந்தப்பட்டவர்கள் இவ்வாய்க்காலை விரைவில் துப்பரவு செய்து வெள்ளம் வடிந்தோடக் கூடிய முறையில் சீர்செய்து தரவேண்டுமென பொதுமக்கள் தரப்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (எ-152)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.15

வலி.வடக்குப் பிரதேச செயலகத்தின் விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இடம்பெயர்ந்த, மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் அவசியத் தேவைகளை இனங்காண்பதற்கும் அவற்றை ஈடுசெய்வதன் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான துரித அபிவிருத்தித் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கும் இக்கூட்டத்தில் ஆலோசனைகள் பெறப்படவுள்ளதாக வலி.வடக்குப் பிரதேச செயலர் க.குணராசா அறிவித்துள்ளார்.

(எ-8)

# வாசகர் திருமுகம்

## கார்த்திகைத் தீபத் திருநாளில் இளைஞர்களின் அட்டகாசம்

சமீப காலமாக யாழ்ப்பாணத்தில் வாழும் இளைஞர்களில் பெரும்பாலானோர் பண்பாடு, மரியாதை, ஒழுக்கம், இரக்கவுணர்வு, பெரியவர்களுக்கு மரியாதை செய்தல், பெண்களை மதித்தல், சமூகத்திற்கான பயம் என்பனவற்றையெல்லாம் உதறித்தள்ளிவிட்டு மிருகங்களிலும் கேவலமாக மாறியிருப்பது சமூகத்திலுள்ள சகல தரப்பினருக்கும் மிகுந்த கவலையையும் வேதனையையும் அளித்துள்ளது. நாளைய சிற்பிகளான இவர்கள் எவ்வாறு இவ்விதம் ஊனப்பட்டு நிற்கின்றார்கள்?

இவர்கள் செய்யும் அடாவடித்தனங்களும், சண்டித்தனங்களும், மரியாதைக் குறைவான செயல்களும் நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே செல்கின்றன. நல்லூர்த் திருவிழாவில் தீர்த்த உற்சவத்தைக் கேவலப்படுத்திய இவர்கள், கார்த்திகைத் திருநாளிலும் காட்டுமிராண்டித்தனமாக அட்டகாசம் புரிந்திருக்கின்றார்கள்.

எரியும் ரயரை ஆலய தரிசனத்திற்காக வந்த பெண்மீது வீசியெறிந்து அட்டகாசம் புரிந்த அந்த இழிவான கும்பல் சமூகத்தில் இன்னும் நடமாடிக் கொண்டிருக்கவேண்டுமா?

எரியும் ரயர்களை வீதியில் இழுத்துக்கொண்டு மோட்டார் சைக்கிளில் வேகமாகச் செல்லல், வெடி கொளுத்தி மற்றவர்களின் மேலும் வீட்டு வளவினுள்ளும் வீசுதல், ஏற்றிவைத்த தீபங்களை உதைத்து வீழ்த்துதல், தீபம் ஏற்றிய வாழை மரங்களை வெட்டிச் சரித்தல், வீதியின் நடுவே ரயர்களை எரித்து மற்றவர்களுக்குப் பெரும் இடைஞ்சல் செய்தல், கேவலமாகச் சத்தமிட்டபடி வீதிகளில் உலா வருதல், கண்ணில் தென்படும் பெண்களைக் கேவலமாகக் கேலி செய்தல் இன்னும் வார்த்தைகளில் எழுத முடியாத பல கேவலமான செயல்களை இவர்கள் புரிந்துள்ளார்கள்.

இந்தக் கும்பல்களின் தொல்லைகளால் வெறுப்படைந்த பலர் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து இருப்பதைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள். பலர் இடம்மாறவும் முடிவுசெய்துள்ளதாகத் தெரிகின்றது. யாழ். மண்ணுக்கு ஏன் இந்த இழிநிலை? மற்றவர்கள் யாழ்ப்பாணத்தவரைப் பார்த்துக் கேவலமாகப் பேசுவதற்கு வழிசமைத்துக் கொடுக்க இந்த ஈனர்களை அடக்குவார் இல்லையா? விரைவில் யாழ்ப்பாணம் இந்தவித தொல்லைகளால் உள்ளூர் யுத்தம் ஒன்றுக்கு நிச்சயம் முகங்கொடுக்கப் போகின்றது என்பது யதார்த்தமான உண்மையாகும்.

எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவில் இத்தகைய கேவலமான இளைஞர் கும்பலின் அட்டகாசங்களை எந்த விதத்திலாவது அடக்காவிடின் யாழ்ப்பாணத்தின் அழிவினை எவராலும் காப்பாற்றமுடியாது.

சம்பந்தப்பட்டவர்கள் இதனைத் தங்களின் உடனடிக் கவனத்திற்கொண்டு உரிய கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்தக் கும்பல்களை அடக்குவார்களென்ற நம்பிக்கையுடன் காத்திருக்கின்றோம்.

*மல்லாகம்.* ம.இராசதுரை

## இலக்கியப் பெருவிழா பற்றி முழு விவரங்களை வெளியிடுக

சமீபத்தில் வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கான தமிழ் இலக்கியப் பெருவிழா 2003; வவுனியாவில் நடைபெற்றது. அதில் 2002 ஆம் ஆண்டில் வெளியான நூல்களில் சிறந்தவையாகத் தெரிவு செய்யப்பட்ட கவிதை, கட்டுரை, நாடகம், சிறுகதைகள் போன்ற துறைகளுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

சில காலத்திற்கு முன்னர் தேசிய ரீதியில் வழங்கப்பட்ட சாகித்திய விழாப் பரிசில்கள் தொடர்பாகக் கம்பவாருதி ஜெயராஜ், செ.யோகராசா போன்றோரின் முணுமுணுப்புக்கள் பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளன. இந்த நிலையில் வடக்கு - கிழக்கு கலை, கலாசார அமைச்சு என்ன ரீதியில் பரிசுக்குரிய நூல்களைத் தெரிவுசெய்தது? ஒவ்வொரு துறைக்கும் நடுவராகப் பங்குபற்றியோர் விவரம், மொத்தமாக ஒவ்வொரு துறையிலும் கலந்துகொண்ட நூல்கள், நூலாசிரியர்கள் விவரங்களை பகிரங்கப் படுத்தினால் உபயோகமாக இருக்கும்.

ஏனெனில், வவுனியாவில் விழா தொடர்வதற்கு முன்னரே தமிழ்மக்களின் போராட்ட வாழ்வியல் மையமாகிய வன்னிப்பகுதி புறக்கணிக்கப்பட்டது தொடர்பான குற்றச்சாட்டுக்கள் கிளம்பியுள்ளன.

இந்த நிலையில் உண்மையில் என்ன நடந்தது என்பதை அறிய எமக்கு உரிமை உண்டு. எனவே, ஒரு போட்டி பற்றிய பூரணமான அறிக்கையைப் பத்திரிகையில் பிரசுரிப்பது நல்லது. அந்தப் பணியை 'உதயன்' செய்யலாம். எத்தனையோ விடயங்களை வெளிக்கொணரும் 'உதயன்' இதனைச் செய்யவேண்டும்.

விழாவின் போது சிலவேளை இவ்வாறான அறிக்கை வெளியிடப்படாது இருந்தாலும் எம்போன்றவர்கள் அறிந்துகொள்ளப் பத்திரிகையிலே பிரசுரமாவது பொருத்தமானது.

மு.கணபதிப்பிள்ளை

# திருமணம் புரிபவர்களுக்குத் திருவள்ளுவர் அறிவுரை

புலவர்
ம.பார்வதிநாதசிவம்



திருமணத்துக்குமுன்னர் மணமகனுடைய வருவாய் எவ்வளவு என்பதை மணமகள் திட்டவட்டமாகத் தெரிந்துகொள்ள வேண்டும். திருமணம் முடிந்த பின்னர் மணமகனின் வருவாய்க்கு ஏற்ப மணமகள் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். இதனைத் திருவள்ளுவர் *"வளத்தக்காள் வாழ்க்கைத்துணை"* என்கிறார்.

கணவனுடைய வருவாய்க்குத் தக்கபடி வாழத்தெரிந்தவள் மனைவி என்கிறார்.

ஆனால், இன்று பெரும்பாலும் நடப்பது என்ன? பல இடங்களிலும் திருமணம் பேசிக் களைத்தவர்கள் எப்படியாவது மணமகன் ஒருவன் கிடைத்தால் போதும் என்ற நிலைக்கு இறங்குகிறார்கள். வருவாய் குறைந்த ஒருவனைத் திருமணம் செய்கிறார்கள். திருமணம் முடிந்துவிட்டதே என்ற மகிழ்ச்சி மெல்ல மெல்ல குறையும் வருவாய் குறைவாக இருக்கிறதே என்ற கவலை மெல்லமெல்ல அதிகரிக்கும் மனைவி கணவனுடைய சம்பளத்தையும் தன் குடும்ப ஆடவர்களுடைய சம்பளத்தையும் ஒப்பிட்டுப் பார்ப்பாள். "அக்காவின் கணவன் பதினையாயிரம் சம்பளம் எடுக்கிறான். அண்ணன் இருபதாயிரம் சம்பளம் எடுக்கிறான். அயல் வீட்டிலுள்ள தம்பியின் நண்பன் பதினையாயிரம் சம்பளம் எடுக்கிறான். எனது கணவர் ஐயாயிரம் மட்டுந்தானே சம்பளம் எடுக்கிறார். இதை வைத்துக்கொண்டு எப்படி இந்தக்காலத்தில் குடும்பத்தை நடத்துவது" என்றெல்லாம் மனதுக்குள் ஏங்குவாள். குறிப்பாகக் கணவனுக்கும் புலப்படுத்துவாள். வாழ்க்கையில் சண்டையும் சச்சரவும் மெல்ல மெல்லத் தலையெடுத்து இவர்களை வெல்ல முயற்சி செய்யும். குடும்ப அமைதி பறந்து விடும்.

அமைதி இன்றிவாழ்வதற்குத்தானா இருவர் திருமணம் புரிவது? இதற்குத் தீர்வு திருவள்ளுவர்காணும் "வளத்தக்காள் வாழ்க்கைத்துணை" என்பதே. கணவனின் வருவாய்க்கு ஏற்ப மனைவி வாழக்கற்றுக்கொள்வதே.

இந்தக் குறைபாடு மனைவியிடம் ஏற்படுவது. இதைவிடப் பெரிய குறைபாடு ஒன்று உண்டு. அது கணவன் மனைவி இருவரிடமும் ஏற்படுவது. அதுதான் சந்தேகம். சந்தேகம் என்பது பெரும்பாலான குடும்பங்களில் இல்லை. மிகச் சில குடும்பங்களிலேயே உண்டு. இல்லறம் என்ற அழகியமாளிகை சந்தேகப்புயலால் சேதமடைந்து அலங்கோலமடைய ஆரம்பிக்கும் அதற்கு என்ன செய்ய முடியும். அதற்கும் திருவள்ளுவரே வழி கூறுகிறார்.

"தெளிந்தான் கண் ஐயுறவும்
தீரா
இடும்பைதரும்" என்கிறார்

ஒருவன் தனது நிறுவனத்துக்கு உத்தியோகத்தரை எடுக்கும் போது நன்றாக ஆராய்ந்து எடுக்கவேண்டும். எடுத்து அவனிடம் பொறுப்பான பதவியைக் கொடுத்து விட்டுப்பின்னர் அவன் மீது சந்தேகப்படக் கூடாது. சந்தேகப்பட்டால் அது தீராத துன்பமாகவே முடியும்.

திருவள்ளுவர் நிர்வாகத்துக்குக் கூறியது குடும்ப வாழ்விற்கும் பொருந்தும். திருமணத்திற்கு முன்னர் ஒருவரைப் பற்றி ஒருவர் நன்றாக ஆராய வேண்டும். ஆராய்ந்து தெளிந்த பின்பே திருமணம் செய்யவேண்டும். மனைவி கணவனிடம் தன்னையும் கணவன் மனைவியிடம் தன்னையும் மனப்பூர்வமாக ஒப்படைத்தபின்னர் சந்தேகம் ஏற்படக்கூடாது. ஒருவருக்கொருவர் உரியவர் என்ற தெளிவு ஏற்படவேண்டும். ஒருவரில் ஒருவருக்கு ஏற்படும் தெளிவே இல்வாழ்வை இன்பமயமாக்கக் கூடியது.

தமிழருடைய இல்லறப் பண்பாட்டைத் தலைவன் - தலைவி என்ற தமிழ்ச் சொற்களே தெளிவாகப் புலப்படுத்துகின்றன. அவன் குடும்பத்தின் தலைவன். அவள் அவனை விடச் சற்றும் குறைந்தவள் அல்ல. அவள் குடும்பத்தின் தலைவி. இல்லறத்தில் இருவரும் சம உரிமை உடையவர்களே. இவரது நோக்கும் இல்லறம் என்ற மாளிகையை இன்ப மாளிகை ஆக்குவதுதான் தலைவன் - தலைவி இருவராக இருக்கலாம். ஆனால், நோக்கம் ஒன்று தான். அதுதான் குடும்ப முன்னேற்றம். குடும்ப முன்னேற்றத்தையும் குடும்ப கௌரவத்தையும் பேணுவதில் சம பங்கு கொண்ட இருவரிடையே உள்ளத் தெளிவுதான் இருக்க முடியும். சந்தேகம் இருக்க முடியாது.

தலைவன் - தலைவி இருவருமே பிரம்மசரியம் என்றபடியைக் கடந்து சம்சாரம் அல்லது இல்லறம் என்னும் புதுப்படியை அடையும்போது இன்று நாம் புதுப் பிறப்பெடுத்துள்ளோம் என்று எண்ணவேண்டும்.

"இன்று புதிதாய் பிறந்தோம் என்று
நீவீர்
எண்ண மனதத்தினைமுற
இசைத்துக் கொண்டு
தின்று விளையாடி இன்புற்றிருந்து
வாழ்வீர்"

-என்றார் சுப்பிரமணியபாரதியார்.

எனவே, திருமணம் புரிபவர்கள் தாம் திருமணத்தன்று புதுப்பிறவி எடுத்ததாகக் கொள்ளவேண்டும். அந்தப் புதுப்பிறப்பில் இருவரும் மேற்கொண்டிருக்கும் உறவு ஏனைய உறவுகளைவிட மேலானது விசுவாசமானது என்று நம்பவேண்டும். ஏனைய உடன்பிறந்தார், சுற்றத்தார் என்கின்ற உறவுகள் எல்லாம் இந்தத்தலைவன் தலைவி உறவைப்படுத்த வந்தவையே என்று கொள்ள வேண்டும். அப்படிக்கொண்டால் தலைவன் - தலைவியின் அன்பு ஆட்சியில் இல்லறமாளிகை - இன்ப மாளிகையாகத்திகழும்.

தொடரும்.....

# பிதாமகன்: 'தும்பிக்கை கொண்ட குரங்கு'

தென்னிந்திய தொலைக்காட்சி விளம்பரங்களினூடாக ஓர் எதிர்பார்ப்பைத் தோற்றுவித்துவிட்டு நகரின் திரையரங்குக்கு வந்த 'பிதாமகன்' - வித்தியாசமாக எடுக்க வேண்டுமென்ற உத்தேசத்தோடு தயாரிக்கப்பட்டுப் பின்னர், முழுக்க முழுக்க வித்தியாசமாய் எடுக்கப்பட்டால் எங்கே ஒரு தோல்விப் படமாக (வசூல் ரீதியில்) ஆகிவிடுமோ என அஞ்சி, ஆங்காங்கே 'ஸ்ரீமான் பொதுஜனத்தின்' இரசனை நோக்கினை மனங்கொண்டு, நடனம் + சங்கடப்படுத்தும் விரச நகைச்சுவை + விறுவிறுப்பான சண்டைகள் போன்றவற்றையும் கலந்து ஒரு "திரைப்படைப்பாக" தரப்பட்டுள்ளது.

தமிழ்த்திரைப்பட உலகைப் பொறுத்தவரை பொதுவில் யாருமே, திரைப்படம் என்னும் காட்சி ஊடகத்தை 'ஒரு சிறந்த கலை ஊடகம் என்னும் கருத்தை மனதில் வைத்துத்' தயாரிப்பதில்லை பழக்கப்போன ஒரு வகைப்போதையில் ஆழ்ந்து போக விரும்பும் ரசிகர் கூட்டத்தைத் திருப்திப்படுத்த உதவும் உத்திகளின் கூட்டமைப்பாகவே மிகப்பெரும்பாலான திரைப்படங்கள் வெளிவருகின்றன.

தற்போதைய திரைப்படங்கள், அடிப்படைக்குறைபாடு சிறிதும் மாற்றமின்றி அமைந்திருந்தாலும் படப்பிடிப்பு, அமைப்பின் வித்தியாசமான போக்கு என்பவற்றையும் கலந்து, ஒரு சமரசம் பேணும் போக்கோடு அவ்வப்போது வந்துகொண்டிருக்கின்றன.

பிதாமகனிலும் இத்தகைய போக்கை அவதானிக்க முடியும்! இடுகாட்டில் பிறந்து, தாயை இழந்து வெட்டியானால் பராமரிக்கப்பட்டுத் தானும் ஒரு வெட்டியானாய் உருவாகும் 'சித்தன்' பின்னர் கிராமத்துக்குள் நுழைந்து அனுபவிக்கிற பாடுகளில் தன்மைகளை விக்ரமின் திறமையின் துணையோடு சித்திரிக்க முயலும் பாலா - தனது சமரச எத்தனங்களால், தும்பிக்கை கொண்ட குரங்கு ஒன்றையே பிடித்துள்ளார் எனக் கருத வேண்டியிருக்கிறது!








ஆரம்பத்தில் இந்தத் திரைப்படத்தைப் பார்த்துவிட்டு "அந்த மாதிரி இருக்கிறது" என எனது நண்பன் சொன்னதை எண்ணிக்கொண்டு, திரையரங்கின் அசௌகரியங்களையும் சகித்துக்கொண்டு பார்த்துக்கொண்டு மீளுகையில் -

நல்ல திரைப்படங்களைப் பார்க்க அவாவும் பாவப்பட்ட ஜீவன்கள், இப்படி வருகிற அரைகுறைப் படைப்புக்களையே 'ஆகா! ஓகோ!' என்று புகழ வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கும் அவலத்துக்காகக் கவலைப்பட்டேன் - நல்ல திரைப்படங்களைப் பார்க்க வாய்ப்பிருந்தாலும், அது குறித்த தேடல் இல்லாது உள்ளமை வருந்தத்தக்க விடயம்தான்!

நன்றி : 'தெரிதல்'

## காலத்தின் பதிவு



நிலம் படித்து.... விதை புதித்து....

படம் : தீபன்

| | | | |
|---|---|---|---|
| செவ். | ரா. | | சனி |
| | இராசிச் சக்கரம் | | சந். |
| | | | வியா. |
| புத. வெ. | கு. ▲ | கே. | |

# இந்த வார இராசி பலன்

## 14.12.2003 - 20.12.2003

### மாற்றம்:

14.12.2003இல் ஆயிலியம் கர்க்கடக இராசியில் சந்திரன் நிற்கும். காலங்கடத்துவது ஞானம் வரஅல்ல அரசியலில் புதிய அணுகுமுறை. தெற்கு அரசியல்வாதிகளிடையே பேத மான நிலை. இந்தியாவும், சமயக் குரவர்மாரும் சம்மதிக்கா விடில் அரசியல் மாற்றத்திற்கு நாம் என்ன செய்வது? எனச் சிந்திக்கும் நிலை. சமாதானம் தேர்தல்வரை போகும் நிலை ஏற்படலாம். அரசியல்வாதிகள் நேரத்திற்கு நேரம் பேச்சு மாறு வர். மக்கள் சண்டைவருமோ என ஏங்கி இருப்பார். புதிய திட்டங்களை உருவாக்க அரசியல்வாதிகள் உலகநாடுகளை நாடுவர். இந்தியாவில் திடீரென தெற்கு அரசியல்வாதிகள் வடக்கிற்கு கட்டுப்பட்டுச் செயற்படுவர். வடக்கில் தீவிரவாதிகள் அழிவுகளைச் செய்வர். மத்தியகிழக்கில் மேற்கு நாடுகள் தங் கள் இராணுவ வலுவை அதிகரிக்கச் செய்யும். அழிவுகள் திட்டமிட்டுச் செயற்படுத்தப்படும். பசுபிக், இந்துசமுத்திர பிராந்திய நாடுகளில் காற்றழுக்கத்தால் திடீர் மழை வீழ்ச்சிகள் அதிகரிக்கும் எனக்கிரகநிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

தொழில்ஸ்தானத்து அதிபதி, சனி, வீரியஸ்தனம், ஆகிய மூன்றாம வீட்டில் இருப்பதனால் தொழி லால் இலாபங்கள் அதிகரிக்கும். ஆனால் அடிக்கடி மனச்சஞ்சலம் ஏற்பட்டபடி இருக்கும். பொருள்வரவு, தூரத்துச் செய்தி, எதிர் பாலாரின் ஆதரவு இருக்கும். வீடு, வாகனச்சுகம் கொடுக்கும், தந்தைவழியினர் குறைசொல்லுவர். தாய்வழியினர் செய்தி அனுப் புவர். இடமாற்றம் பிரயாணம் திடீரெனக் கொடுக்கும். நாரிநோ வரும். பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். பாதுகாப்புப் பகுதி யினர்கள், வியாபாரிகள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், வெள்ளி, சனி.*

### இடபம்

மாதாவழியினர்கள் நல்ல தைச செய்வார்கள். சூரியன் பார் வையால் உள்ளதைச் சொல்லி நல்லதைச் செய்தாலும் குடும் பத்தினர்கள் குறைசொல்லு வார்கள். இனஜனவரவு இருக்கும். பொருள்வரவு கொடுக்கும். தொழில் ஸ்தானத்தில் வாக்குக்கலகம் ஏற்படும். தூரப்பிரயா ணங்களை தாமதப்படுத்துவது நன்று. வயிற்று உபாதைகள் கொடுக்கும். சனிவரும் வீடுவாகனம் சுகம் கொடுக்கும். இட மாற்றங்கள் நன்மையாகும். சட்டத்துறையினர் சமயத்துறையினர், வைத்தியத்துறையினர்களுக்கு மாற்றங்கள் ஏற்பட்டபடி இருக்கும். சங்கீதத்துறையினரும் அதிகவருமானம் அடைவார்தள்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன் வெள்ளி, சனி.*

### மிதுனம்

பிள்ளைகளை அதிகம் கட்டுப் படுத்த முடியாத காலம். இதை பிள்ளைகள் பலவீனமாகக்கருதி அவர்களின் வாழ்க்கை வளங் களை இழந்து போகக்கூடாது என ஆலோசனை சொல்லுகிறீர்களா? உங்கள் ஆலோசனைக ளுக்கு அதிகவரவேற்பு இருக்கும். எடுத்தெறிந்து பேசாதீர்கள். அப்பால் பிறரை அரவணையுங்கள். இடமாற்றங்கள் சிலருக்கு ஏற்படும். அதிகாரத்தனம் அதிகரிக்கும். பணவரவு, தொழில்ஸ் தானத்தில் நல்லவை நடக்க இடம் உண்டு. குடும்பத்தினர் பற்றிய கவலைகள் அதிகரிக்கும். நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். சிறுவிபத்துவரலாம், சனித்தொல்லை கொடுக்கும். குருத்துறை, செய்தித்துறையினர் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், வெள்ளி, சனி.*

### கடகம்

உலகமே கம்பியூட்டர் மயம். ஆனால் தவறுகள் மலியாமல் உங்களைப் போன்று விழிப்பாக இருக்க வேண்டும். தொழில்ஸ் தானத்தில் மேலதிகாரிகள் உதவி கள் செய்து தருவர். வருவாய்க்கு மீறிய செலவுகள் கொடுக்கும். தூரத்திலிருந்து வரும் செய்திகளால் மகிழ்ச்சியும். பொருள்வர வும் ஏற்படஇடமுண்டு. கொடுத்தகாசு வராது. தெய்வழிபாடு நன் மைதரும். கஷ்டங்கள் குறையும். நாரிப்பிடிப்பு சனிவருத்தம் கொடுக்கும். குருத்துறை, சட்டத்துறையினர்கள் நன்மை அடை வார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: வியாழன், வெள்ளி, சனி.*

### சிங்கம்

இந்த உலகில் உள்ளும் புறமும் ஒருசிலர் மட்டுந்தான் அகத்தூய்மையுடன் வாழுகின் றார்கள். ஏனையோர்கள் அவர் களின் ஆத்ம, உடல், மனோ வலிமைக் கேற்ப கூடிக்குறைந்த பாவ, புண்ணியபலன் பெற்று வாழுகின்றார்கள். களவுகள் போகலாம். உதயத்தில் 8ஆம், 5ஆம் வீட்டதிபதியான வியாழன் இருப்பதனால் புத்திராலும், தாரத்தாலும் நன்மைகள் ஏற்படும். அவர்களுக்காக நீங்கள் செய்யும் காரியங்கள் சிறப்படையும். சொத்து, அல்லது திடீரென பணவரவு கொடுக்கும். வீடுமனைச்சிறப்பு, பொருள் செலவு வரும். பெற்றோர் வழியினர்கள் உதவிகள் செய்து தருவார்கள். குருத் தொழில் செய்பவர்களுக்கு மாற்றங்கள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், வெள்ளி, சனி.*

### கன்னி

பருவத்தின் வேகம் விந்திய சமான உணர்வுகள் ஏற்பட்டு கஷ்டங்களைச் சிலருக்குக் கொடுத்து விடுகின்றது எனவே நீங்களும் அவதானமாக இருக்க வேண்டும். இடமாற்றங்கள் ஏற்படும். அடிக்கடி சகோதரர்களு டன் சீற்ச்சினக்கச் செய்யும். தொழில்பட்டதில் புகைச்சலொன்று ஏற்பட்டு வேதனை தரும். இடமாற்றங்கள் நன்மை தரும். கால் வருத்தம், தலைவிறைப்புக் கொடுக்கும். தூரத்திலிருந்து செய்தி கள் வரும். இனஜனங்களுக்கிடையில் எதிர்ப்புணர்வு கொடுக் கும். அடிக்கடி பதற்ற நிலைவரும். புத்திர, சகோதரர்களுக்கு உடல்நிலை மருந்து எடுக்கச் செய்யும். செய்தித்துறை, சங்கீதத் துறை, கணனித்துறையினர் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், வெள்ளி, சனி.*

### துலாம்

மக்கள் நுளம்பை அழிக்கா விடில் மக்களை நுளம்புகள் அழித்து விடும். இனஜனங்கள் பேதப்படுவர். தொழில்ஸ்தானத் தில் குறைகள் ஏற்படும். நண் பர்கள் வீண்பழி சுமத்துவர். வருமானத்திற்குக் குறைவிருக்காது. பொருள்கள் தவறவோ களவு போகவோ இடமுண்டு. சிலருக்கு திடீர் இடமாற்றங்கள் ஏற்படும். சூழ்நிலைகள் உருவாக இட முண்டு. கொடுத்தது வராது. நாரிநோ, வயிற்றுநோ, சனித் தொல்லை, என்பன ஏற்படும். சட்டவாதிகள், பாதுகாப்புத்துறை யினர், குருத்துறையினருக்கு மாற்றங்களும் நன்மைகளும் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், வெள்ளி, சனி.*

### விருச்சிகம்

பாவம் பொல்லாதது நீதியை மறைக் கும். தர்மசோதனையைத் தரும். கடி னசிந்தை, போராட்ட உணர்வு உள்ள உங்கள் செயற்பாடுகள் திடீர் பாவ புண் ணியங்களைத் தரச்செய்யும். தொழில்ஸ் தானத்தில் ஒரு மந்தநிலை வரும். போட்டிகள் உருவாகும். பணவரவு சுமாராகும். மறைமுக எதிர்ப்பு 8இல் உள்ள சனியால் ஏற்படும். ஆஸ்பத்திரிச் செலவுகள் கொடுக்கும். குளிர், சனி, வருத்தம், வயிறு தொண்டை நோவரும். இடமாற்றங்களை தவிர்த்தல் நன்று. குடும்பத்தில் பல மாற்றங்கள் ஏற்பட இடமுண்டு. வியாபாரிகள், இரும்புத்துறையினர்கள், வாகனத்துறையினர் நன்மைகள் அடை வார்கள்.

*அதிர்ஷ்டநாள்: வெள்ளி.*

### தனுசு

நன்மைகள் செய்தால் நல்லது கிடைக்கும். மாதாவழியி னர்கள் உதவி செய்வார்கள். தொழில்நிலை மந்தநிலை, வாகனச் செலவு, ஆஸ்பத்திரிச் செலவுகள் அதிகரிக்கும் நிலை ஏற்படும். மனதில் ஒருபயம். பதற்றப்படாதீர்கள். இன்பதுன்பத்தைச்சமநிலைப்படுத்தி வாழுங்கள். கொடுத்த பொருள் வராது. கால்நோ, சனித் தொல்லை, குளிரால் விறைப்பு என்பன மாறிமாறிக் கொடுக்கும். தூரத்துச் செய்திகள் ஓரளவு ஆறுதலைத் தரும். குருத்துறை, சட்டத்துறை, வைத்தியத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு மாற்றங்கள் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, வெள்ளி.*

### மகரம்

வேஷம் பாவமானது. அத னால் துன்பம் தொடரும். தொழில் ஸ்தானத்தில் போட்டிகள் வரும். இன ஜனங்களால் மனக்கலக் கம் வரஇடம் உண்டு. பொருள் கள் தவற இடம்உண்டு. கால் வருத்தங்கள் வரும். அந்நியர்கள் உதவி செய்து தருவார்கள். பெரியார்கள் உதவிகள் செய்து தருவார்கள். குடும்பத்தினருக்கு குடும்பப் பேச்சு, புதிய தொழில் வாய்ப்பு கொடுக்கும். நண்பர்களால் உதவிகள் கிடைக்கும். வியாபாரிகள், மருந்துத்துறையினர்கள், சந்தைத்துறையினர்கள் நன்மை அடைவார்கள். பிரயாணங்களைத் தவிர்த்து விடவும்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, வியாழன்.*

### கும்பம்

கைக்குவந்தது வாய்க்கு எட்டாத நிலை. எக்காரியத்தி லும் ஒரு மந்தநிலை கொடுக்க இடம்உண்டு. நண்பர்கள் உதவி செய்து தருவார்கள். காணிபூமி, இடமாற்றம், வாகனச் சிறப்பு, மனைவி அல்லது கணவனுக்கு தொழில் ரீதியிலான இடமாற்றங்கள் வருங்காலத்தில் ஏற்பட வாய்ப்புண்டு. வீடுமனையில் திருத்தங்கள் ஏற்படலாம். வியா பாரிகள், குருத்தொழில், வங்கித் தொழில் செய்பவர்கள் சிறப்பு அடைவார்கள். கால் வருத்தம், சலப்பிரச்சினை அதிகரிக்கும். வைத்தியம் செய்யவும்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, வியாழன், சனி.*

### மீனம்

அதிக உழைப்பு, படிப்படி யான மாற்றம், தொழிலில் ஊக் கம், பணவரவு வரும். புதிய திட்டங்கள் உருவாக அன்னிய இடத்திலிருந்து உதவிகிடைக்க வாய்ப்பு உண்டு. மேலதிகாரிகள் சஞ்சலம் தருவர். நண்பர்கள் உதவிசெய்வார்கள். தாய்வழியினரின் வரவு உதவிகள் கிடைக்கும். கால்வருத்தம், சனித்தொல்லை ஏற்படும் பிரயாணம், வாகனத்துறை, குருத்துறை வைத்தியத்துறையினர்கள நன் மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, வியாழன், சனி.*

**மகாதேவா ஜோதிடம்**

# பிரிட்டனில் இலங்கையர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய விடுமுறை விசா

இலங்கையர்களுக்கான தொழில் வாய்ப்புடன் கூடிய விடுமுறைகால விஸாக்களை, இவ்வாண்டு ஓகஸ்ட் மாதத்திலிருந்து பிரித்தானிய தூத ரகம் அறிமுகப்படுத்தியுள்ளது. பிரித் தானிய தூதரகத்தின் அரசியல் மற் றும் தகவல் பரிமாற்றத்திற்கான இரண்டாவது காரியதரிசி மார்கரட் ரங் பத்திரிகைகளுக்கு இது பற்றி விளக்கமளித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகளைச் சேர்ந்த 17 தொடக்கம் 30 வயதிற் குட்பட்ட பிரஜைகளுக்காக இத்திட் டம் உள்ளது என்றார்.

தற்போது, நாளாந்தம் 90 தொழில் வாய்ப்புடன் கூடிய விடுமுறை கால விஸாக்களுக்கான விண்ணப்பங் களை இலங்கையிலுள்ள பிரித்தா னிய தூதரகம் பரிசீலித்து வருகின் றது. ஆயினும், துரதிஷ்டவசமாக இவ்வகை விஸாக்கள் தொடர்பாகப் பொது விளக்கமின்மையால் 81சத வீதமான விண்ணப்பங்கள் நிராகரிக் கப்படுகின்றன. இரண்டு வருடங்கள் வரையிலான நீண்ட விடுமுறையில் பிரிட்டனுக்குச் செல்ல விரும்பும் பிர ஜைகளுக்கு இவ்விஸாக்கள் ஏற் புடையன. அவர்கள் பிரிட்டனில் தங்கியிருக்கும் காலத்தில் தொழில் புரிவதற்கும் அனுமதிக்கப்படுவார் கள். ஆயினும், இவ்வகை விஸாக் களைப் பெற்று பிரிட்டனுக்குச் செல் வோர் அங்குத் தங்கியிருக்கும் காலத் தில் கண்டிப்பாகத் தமது விடுமுறை யைக் கழிக்கவேண்டும். இந்த விஸாக்கள் தொழில் அனுமதிப்பத் திரமாகக் கருதப்படமாட்டாது. www.ukvisas.gov.uk என்ற இணை யத்தளத்தில் இவ்விஸாக்களுக்கான விண்ணப்பப்படிவங்களைப் பெறமுடியும்.

**தொலைபேசியூடாக முன்னனுமதி பெறல்**

பிரித்தானிய தூதரகத்தில் முன் அனுமதி பெறவிரும்பும் விண்ணப்ப தாரிகள் தொலைபேசியூடாகத் தொடர்புகொள்ளவேண்டும். ஆயினும் எதிர்வரும் பெப்ரவரி மாதத் தொடக் கம் வரையில் பிரித்தானிய தூதரகத் தில் முன்னனுமதிக்கான பதிவுகள் முன்கூட்டியே பெறப்பட்டுவிட்டன. பல வருடங்களாக இவ்வகை விஸாக் களை வழங்கும் திட்டம் நடைமுறை யில் இருந்து வருகின்றது. இந்த வரு டத்தின் ஓகஸ்ட் மாதத்திலிருந்து அனைத்துப் பொதுநலவாய நாடு களினதும் பிரஜைகளுக்கும் இத் திட்டம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. எவ் வளவு விஸாக்கள் வழங்கப்படும் என் பது பற்றியோ எவ்விதமான நிர்ண யிக்கப்பட்ட தொகையோ, முடிவு திகதியோ இலங்கையர்களுக்காக அறிவிக்கப்படவில்லை. அடுத்த சில மாதங்களில் பிரிட்டனுக்குப் பயணம் செய்யும் திட்டம் இல்லாதவர்கள் தற் போது விண்ணப்பிக்கவேண்டிய அவசி யமில்லை.

தொழில்வாய்ப்புடன் கூடிய விடு முறைகால விஸாக்களைப் பெறுவ தற்கான சில தகுதிகள் கீழே குறிப் பிடப்பட்டுள்ளன:-

1) விண்ணப்பதாரிகள் பொதுநல வாய நாடுகளைச் சேர்ந்த பிரஜை களாக இருத்தல் வேண்டும்.

2) குறித்த வயதெல்லை (17-30) உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

3) பிரிட்டனில் தங்கியிருக்கும் காலத்தில் அவர்களது தேவைகளை பூர்த்திசெய்யக்கூடிய நிதி வசதி இருப்பதற்கான ஆதாரங்களைச் சமர்ப் பிக்க விண்ணப்பதாரிகள் தயாராக இருத்தல் வேண்டும்.

4) இலங்கைக்கு மீண்டும் திரும்பி வரும் பயணச் செலவுகளுக்கான நிதி யைச் செலுத்தும் ஆற்றல் உடையவ ராக இருத்தல் வேண்டும். அல்லது விடுமுறைக்கால முடிவில் விண்ணப் பதாரிகள் பிரிட்டனிலிருந்து திரும்பும் பயணத்திற்கான நிதியைப் பொறுப் பேற்கக்கூடியவராக இருத்தல்வேண்டும்.

இவ்வகை விஸாக்களில் பிரிட்ட னுக்குச் செல்வோர், பிரிட்டனில் பிர வேசித்த திகதியிலிருந்து இரண்டு வரு டங்களுக்கு மட்டுமே அங்கு தங்கியி ருக்க முடியும். இந்த இரண்டு வருட காலத்தில் பிரிட்டனுக்கு வெளியே தங்கியிருக்கும் காலமும் இந்தக் காலப் பகுதியுடன் சேர்த்துக் கணக்கி டப்படும்.

விண்ணப்பதாரிகளுக்குத் தொழில் செய்வதற்கு எந்தவித கட்டுப்பாடுகளும் விதிக்கப்படவில்லை. அவர்கள் தொழில் பெற விண்ணப்பிக்கமுடியும். பகுதிநேரத் தொழில்களையோ முழு நேரத் தொழில்களையோ அவர்கள் செய்யமுடியும். ஆயினும், அங்கு தங்கி யிருக்கும் காலத்தில் தமது விடு முறையைக் கழிக்க வேண்டும் என் பது கட்டாயமானது.

இத்திட்டத்தின் கீழ் பிரிட்டனுக் குச் செல்வோர் அங்கு ஒரு வருடம் இருந்தபின் தொழில் அனுமதிப்பத் திர வேலைவாய்ப்பினைப் பெற அனு மதிக்கப்படுவர்.

விண்ணப்பிக்கும் வேளையில், குடி யேற்றம் அல்லாதவர்களுக்கான விண் ணப்பப்படிவங்களையே விண்ணப்ப தாரிகள் பயன்படுத்தவேண்டும். 16 வயதிற்குட்பட்ட விண்ணப்பதாரியில் தங்கியிருக்கும் எவரும் விண்ணப்ப தாரியுடன் பயணம் செய்ய விரும் பினால், பிரதான விண்ணப்பதாரியின் விண்ணப்பத்திலேயே அவர்களும் சேர்க் கப்படலாம். ஆனால், விண்ணப்பதாரி யில் தங்கியிருக்கும் 16 வயதிற்கு மேற் பட்டவர்கள் தனியான விண்ணப்பப் படிவங்களிலேயே விண்ணப்பிக்க வேண்டும்.

செல்லுபடியாகும் கடவுச்சீட்டு, பயண ஆவணங்கள் மற்றும் கடவுச்சீட் டில் இணைக்கப்படும் புகைப்பட அள விலான சமீபத்தில் எடுக்கப்பட்ட இரு புகைப்படங்கள் என்பவையும் முக்கி யமாக இருத்தல் வேண்டும்.

மேலதிக விசாரணைகளின்றி, பிரவேச அனுமதி வழங்கும் அதிகாரி விண்ணப்பங்கள் தொடர்பான முடிவு களை எடுக்கமுடியும். ஆனாலும் விண் ணப்பங்கள் தொடர்பான பரிசீலனை யின்போது விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கும் அழைக்கப்பட லாம். மேலும் விண்ணப்பதாரி தனது பொருளாதாரநிலை மற்றும் நிதி தொடர்பான ஆதாரங்களைச் சமர்ப் பிக்குமாறு கேட்கப்படலாம்.

(நன்றி : சண்டே லீடர்)

# ஞானோதய அக்கடமி

சங்கத்தானை சாவகச்சேரி

**A/L 2006**

கலை, வர்த்தக,
கணித, விஞ்ஞானப் பிரிவுகள்

ஆரம்பம்: 15.12.2003 திங்கள் 12.00 மணி.

★ வழமையான ஆசிரியர் குழு ★

(C-32013)(34-11-16-25)



# விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Off Set மெசின் (Davidson 701-A3 Size) விற்பனைக்குண்டு.

தொடர்பு:

சுபாகரன்.
T.P.:- 021 2263481
காலை 8 மணிமுதல் மாலை 8 மணிவரை

(25821)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யுத்த அனர்த்தங்களினால் அழிவுற்ற நிலையில் இருந்த மட்டுவில் கிராமத்தில் 200 குடும்பங்களுக்கு மட்டுமல்ல மட்டுவில் புனித லூர்து அன்னை ஆலயம், ஞானவைரவர் ஆலயம், மட்டுவில் ஆச்சிரமம் முதலான இவற்றைப் புனரமைப்பதற்கு குறிப்பிட்டளவு சிமெந்துப் பைக்கெற்றுக்களை உதவி செய்ததோடு மட்டுமன்றி வறுமைக்கோட்டின் கீழ்வாழும் மக்களில் பத்துப்பேருக்கு வீடு அமைப்பதற்கும் வசதி செய்து தந்த எமது கௌரவ மாண்புமிகு மதிப்பிற்குரிய இந்து கலாசார அமைச்சர்

## உயர்திரு. தியாகராஜா மகேஸ்வரன்

அவர்களையும் அவருக்கு உறுதுணையாக உதவிபுரிந்த

## திரு. சோமசுந்தரம் சிவா

அவர்களையும் சகல வளங்களும் பெற்று பல்லாண்டு வாழ்கவென சகல மக்களும் இதயம் நிறைந்த நன்றியுடன் வாழ்த்துவதோடு மேலும் அவர்களின் கருணையை எதிர்பார்த்திருக்கின்றோம்.

\- மட்டுவில் வாழ் மக்கள்.

(25829) (26-11-16-25)

# முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



15-12-2003 (திங்கட்கிழமை)

## ஆனந்த மோகன் லக்ஷன்

ஆனந்த மோகன் - இராஜ பிரபா
தம்பதிகளின் புதல்வன்

**ஆ. லக்ஷன்**

தனது முதலாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார். லக்ஷனை அன்பான அப்பா, அம்மா, அம்மம்மா, அம்மப்பா, அப்பப்பா, பாட்டி, அன்ரைமார், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மாச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் முத்துமாரி அம்மன் அருள்பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

தற்காலிக முகவரி:
முத்தவிநாயகர் கோயிலடி, யாழ்.வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

நிரந்தர முகவரி:
முகமாலை வடக்கு, முகமாலை.

(25835) (26-11-16-25)


**PRINCE**

**பிரின்ஸ்**

**நீடித்த உழைப்பிற்கு கூடிய நிக்கள்**

**துருப்பிடிக்காத உலோக கிச்சன் சின்க்**

பூசப்பட்டுள்ளதால் சந்தையிலுள்ள ஏனைய கிச்சன் சின்குகளைவிட விசேஷமானது.




ஏக விநியோகஸ்தர்கள்.

**சென்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்**

காட்சியறை, 516, ஸ்ரீசங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி: 324261-5, 337283-5, 436779 பெக்ஸ்: 446554
295, காலி வீதி, கொழும்பு 3. தொலைபேசி: 575666

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர். 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



# சக்தி F.M. தரும்

## பண்டிகைக் கால சலுகைக் கட்டணம்

நத்தார், புதுவருட, பொங்கல் வாழ்த்துக்களை உங்கள் வாடிக்கையாளருக்குத் தெரிவிக்க

**கட்டணம் ரூபா 3500/= மட்டுமே!**

இந்தச் சலுகைக் கட்டணம்
2004 - ஜனவரி 15 ஆம் திகதிவரை மட்டுமே!

தொடர்புகளுக்கு: சக்தி F.M., சக்தி T.V.

அங்கீகரிக்கப்பட்ட யாழ். முகவர்:
ஜோ.எகட்டன் செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்,
(கண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)
கண்டுக்குளி.

அதிரடித் தொலைபேசி: 0777 032188
தொலைநகல்: 222 7227

உள்ளகத் தொலைபேசி 222 7227.

(சி-31899)(31-11-16-25)


# "லாலா" வின் பாராட்டு



துன்னாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், தென்புலோலியை வசிப்பிடமாகவும் கொண்ட **பரஞ்சோதி - சரஸ்வதி** தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், துன்னாலை மெதடிஸ் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை, யா/கரவெட்டி திரு இருதயக் கல்லூரியின் பழைய மாணவனும் புலோலி அபிவிருத்திக் கழகத் தலைவரும், துன்னையூர் கலாசார கலாமன்ற செயலாளரும், குருக்கட்டு சித்தி விநாயகர் கலாமன்ற தலைவரும், அகில இலங்கை இளங்கோ கழக ஆலோசகரும் வடமராட்சி வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவு கலாசாரப் பேரவை நிர்வாக சபை உறுப்பினரும், ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் உற்சவகால அன்னதான சபை (பொன்னையா சாமியார் மடம்) பொருளாளரும், தென்புலோலியூர், உபயகதிர்காம முருகன் தேவஸ்தான நிர்வாக சபை உறுப்பினரும், சிறந்த பௌராணிகரும் (புராண படனகாரர்), தெய்வீகப் பேருரையாளரும், பட்டிமண்டப நடுவரும் நாடகச் சக்கரவர்த்தி, இசைநாடக நவரசக் கலைமணி, கலைக்குரிசில் போன்ற விருதுகளைப் பெற்ற கலைஞரும் சிறந்த சமூக சேவையாளனும் லாலா சோப் தொழிற்சாலை விற்பனை முகாமையாளருமாகிய

## உயர்திரு. பரம்சோதி பரராஜசிங்கம்


அவர்கள் 28.11.2003 அன்று யாழ். மாவட்ட நீதிவான் மதிப்பிற்குரிய உயர்திரு. இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவரது பணி மேன்மேலும் தொடர இறையாசியை வேண்டுகின்றோம்.

\- லாலா சோப் தொழிற்சாலையினர்,
அச்சுவேலி.

(சி-31868) (25-11-16-25)

# 31 ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு
13 - 07 - 1947



உதிர்வு
15 - 11 - 2003

சுழிபுரம் மேற்கைப் பிறப்பிடமாகவும்
அச்சுவேலி தெற்கை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

## செல்லத்துரை செல்வராஜா

என்றும் உம் நினைவுகளோடு
நாம் உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

இன்று (15.12.2003) திங்கட்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் நண்பகல் நிகழ்கின்ற மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

\- குடும்பத்தினர்.

(25712)(34-11-16-25)

# மாணவரின் கல்வி நாட்டத்துக்கு ஆசிரியரின் தயார்ப்படுத்தல் அவசியம்

கல்வி என்ற செயற்பாட்டுக்குள் பல திறன் சார்ந்தோர் இடம்பெறுகின்றார்கள். கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் நேரடியாகப் பங்குகொள்வோராக ஆசிரியரும், மாணவர்களும் உள்ளனர்.

"ரோமில் லத்தீன் மொழியைக் கற்பிக்கும் ஆசிரியருக்கு லத்தீன் மொழி மட்டுமல்ல ரோமையும் நன்கு தெரிந்திருக்க வேண்டும்" என்பது குழந்தைக் கல்வி பற்றிய பிரபல கூற்றாகும். கற்றல் விளைவுகளை நாம் அறிவு (Knowledge) திறன் (Skill), மனப்பாங்கு (Attitude) என்ற வகைகளில் மதிப்பீடு செய்துகொள்ளலாம்.

**புதிய கல்விக் கொள்கை**

முன்னைய மரபு வழிக் கல்வியில் வகுப்பறை பாடநூல், பரீட்சைச் சான்றிதழ் என்ற சில வரையறைகளுக்குள் மாணவர்கள் உட்படுத்தப்பட்டனர். இப்படிக் கற்பிக்கும் கல்வியில் மாணவர்கள் சித்திபெய்தாவிட்டால் அவர்களது வாழ்க்கைக்கும் கற்ற கல்விக்கும் எவ்வித தொடர்புமின்றிப் போய்விடும். இதற்கு மாற்றீடாகவே புதிய கல்விக் கொள்கைகள் முன்மொழியப்பட்டன. அக்கொள்கைகள் பரீட்சார்த்தமாகப் பல பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வெற்றி கண்டன. அதன்பின்னர் அக்கொள்கைகள் நடைமுறைக் கல்வியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய புதிய கல்விச் சீர்திருத்தம், அடைபட்ட வகுப்பறை மாணவர்களை வெளியுலகு நோக்கிச் சிந்திக்கவும், தேடவும் தூண்டிய ஒரு பயன்பாட்டுக் கல்வியாக மாறியிருப்பது மறுப்பதற்கில்லை.

இன்றைய நிலையில் மூன்று வயதில் முன்பள்ளிக் கல்விக்காகத் தாயின் அரவணைப்பிலிருந்து விடுவித்துக் குழந்தையைச் செப்பனிடும் பாரிய பணி ஆசிரியர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றது. அந்தவகையில் ஒரு பிள்ளையின் கற்றல் நடவடிக்கையில் அதிக பங்கை வகிப்பவராக ஆசிரியர்கள் உள்ளனர்.

**ஆசிரியப் பணி**

இப்பாரிய பணிக்குத் தன்னை அர்ப்பணிக்கும் ஆசிரியர் ஒருவர் கற்றல் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தவும், வினைத்திறன் மிக்கக் கற்பித்தலைச் செயற்படுத்தவும் பிள்ளைகளை அறிந்திருப்பது அவசியமாகின்றது. இதனடிப்படையில்தான் புதிய கல்விச் சீர்திருத்தத்தில் பாடசாலையில் தரம் 1இல் பிள்ளைகள் அனுமதிக்கப்படும்போது ஆசிரியரின் முதற்செயற்பாடாகப் "பிள்ளைகளை அறிவோம்" என்ற செயற்பாடு அமைந்திருக்கின்றது. தரம் 1முதல் தரம் 13வரை மாணவர்கள் ஒவ்வொருவரையும் பற்றி ஆசிரியர் அறிந்திருப்பது அவசியமானதாகும். ஆசிரியர் - மாணவர் தொடர்பு ஆரோக்கியமானதாக இல்லாதிருப்பின் மாணவர்கள் கல்வியில் நாட்டமின்றி எதிர்மறையான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களாக மாறிவிடுவார்கள்.

ஒருபாடசாலையில் வகுப்பறை என்ற தொகுதிக்குள் பல தன்மைகளைக் கொண்ட மாணவர்கள் இருப்பர். அவர்கள் ஒவ்வொருவரையும் அளவீடு செய்யும் ஆசிரியரது சிறந்த பணியின் மூலம் மாணவரைக் கல்வியின்பால் ஈர்க்கமுடியும். இலங்கை முழுவதிலும் உள்ள ஏறக்குறைய 45 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வியைக் கற்கின்றனர். ஆயினும் இவர்களில் எத்தனைபேர் சமூகத்திற்கு ஏற்ற நற்பிரஜைகளாக உருவாகின்றனர் என்பது கேள்விக்குறியே. ஆரம்ப கால மாணவ நிலைக்கும் இன்றைய மாணவ நிலைக்கும் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. இன்றைய மாணவர்கள் ஆபரமாகச் சிந்திக்கும் ஆற்றல் கொண்டவர்களாகத் திகழ்கின்றனர். இதனால் பாடசாலைகளில் ஆசிரியர்களது செயற்பாடுகள் திட்டமிட்ட ஒழுங்குபடுத்தலின்றி இருப்பின் அவர்கள் பாதிப்படையும் நிலையோடு மாணவர் கல்வியும் பாதிப்படையும்.

**மாணவரின் தன்மை**

மாணவர்களைப் பொறுத்தவரையில் கவனம், தெளிவுப் புலக்காட்சி, உள்ளத்தில் சந்தேகப்படுதல், பொருள் தேடல், சீர்செய்தல், துலங்கல், ஒழுங்கமைப்பும் கட்டுப்பாடும் மீட்டெடுத்தல், ஆற்றுகை, எதிர்பார்ப்பு என்றவாறான உள்ளார்ந்த திறன்களை ஒழுங்கமைக்கும் வகையில் கற்றல் செயற்பாடுகளை உருவாக்குவது ஆசிரியரது கற்பித்தல் சார்ந்த பணியாகும். இத்தகைய கற்றல் செயற்பாடு பற்றிய அறிவு ஆசிரியருக்கு இருக்குமிடத்தில் மாணவர்கள் இயல்பாகவே ஆசியரது கற்பித்தலை உள்வாங்கும் திறனைப் பெறுகின்றனர்.

மாணவர்களது கற்றல் இடர்பாடுகளை அறிந்துகொள்வதென்பது இன்றைய கல்வி உளவியலில் பெரிதும் அவசியமானதாகும். புலன் இயக்கத் தொடர்புகள், சுய உதவி, சமூகமயமாக்கல், நாளாந்த வாழ்வியல் திறன்கள் ஆகியவற்றை மாணவரிடையே வளர்ப்பதற்கு பாரம்பரிய கல்விமுறை திருப்தியாக இருக்கவில்லை. இதனால்தான் புதிய உளவியல் அணுகுமுறைகளைக் கொண்ட "பயன்படு" கல்வியானது அறிமுகமாகியது. குருவிற்குப் பணிவிடை செய்து கற்ற காலமும் வகுப்பறையில் மாணவர்களைப் பொம்மைகளாக இருந்து ஆசிரியர் சொல்வதைக் கேட்டும் எழுதியும் கற்றகாலமும் மாறி இன்று மகிழ்ச்சிகரமான சூழலில் கற்க வேண்டும் என்ற புதிய செயல் நெறியில் அனைத்துப் பிள்ளைகளும் கல்வியைத் தொடர வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சாதாரணமாக ஒரு வகுப்பறையில் மீத்திறன், மெல்லக் கற்போர், சாரசரியினர் என மூன்று பிரிவினராக மாணவர்கள் இருப்பார்கள். மீத்திறன் மாணவர்கள் மீதுதான் இயல்பாகவே ஆசிரியர்களது கவனம் காலம் காலமாக அதிகம் இருப்பது வழக்கம். இவர்களை விட மீதியாக இருக்கின்ற இருபிரிவு மாணவர்களையும் பற்றி ஆசிரியர்கள் பெரும்பாலும் சிந்திப்பது குறைவாகவேயுள்ளது. கவனம், நினைவில் நிறுத்துதல், கற்பனை, அறிக்கைச் செயன்முறை தன்மயமாக்கல் வேகம், கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் போன்ற அடிப்படைத் திறன்களில் பின்னடைவைப் பெற்றிருக்கும் மாணவர்களைக் கண்டறிந்து அவர்களை வழிப்படுத்தும் திறன் ஓர் ஆசிரியரிடம் இருப்பது அவசியமாகும்.

இத்தகைய மாணவர்களை இனம் காணாது ஆசிரியர்கள் கற்பித்தலை மேற்கொண்டால் மாணவர்கள் கல்வியில் ஆர்வமில்லாது காலப்போக்கில் இடைவிலகுவர்.

நோய்கள், உணவு ஊட்டக் குறைபாடுகள், விபத்துக்களின் தாக்கம் போன்றனவும் கற்றல் செயற்பாட்டில் பாதிப்பை ஏற்படுத்த வாய்ப்புண்டு.

**வகுப்பறை முகாமைத்துவம்**

மாணவர்களைக் கல்வியின் பால் தூண்டுவதற்கு ஆசிரியர் செய்ய வேண்டிய பிறிதொரு கருமம் வகுப்பறை முகாமைத்துவமாகும். மாணவர்கள் எப்போதுமே 'பின்பற்றும்' இயல்பினை உடையவர்கள் ஆகவே, ஆசிரியர்கள் மாணவர்களுக்கு முன்மாதிரியாக நடந்துகொள்ளவேண்டும்.

அந்த வகையில்,

★ நேரம் தவறாமை.

★ கற்பித்தலில் திட்டமிட்ட தயார்ப்படுத்தல்.

★ இயன்றளவிற்கு வகுப்பைத் துரிதமாக வேலையில் ஈடுபடுத்தல்.

★ சிறந்த முறையில் (தெளிவாக) வகுப்பை விளித்தும் பேசுதல்.

★ முழு வகுப்பினதும் ஒத்துழைப்பும் பங்குபற்றுதலையும் வலியுறுத்தல்.

★ அனைத்து மாணவர்களும் செயற்பாடுகளில் ஈடுபடும்படியாக அவதானித்தல்.

★ மாணவருடன் பேசுதல் பற்றித் தன்னைத் தானே பகுப்பாய்வு செய்தல்.

★ மாணவர்களை ஒப்பிட்டுப் பேசா திருத்தல்.

★ நெருக்கடியான நிலைமைகளில் உறுதியாக முடிவெடுக்கும் தன்மை.

★ கொடுக்கின்ற வாக்குறுதிகளை உடனுக்குடன் நிறைவேற்றுதல்.

★ செயல்முறை வேலைகளுக்கு முக்கியத்துவமளித்தல்.

★ வகுப்பறை வேலைகளை சகல மாணவர்களுக்கும் பகிர்ந்தளிப்பது.

★ மாணவர் பிரச்சினைகளில் தனிப்பட்ட கவனம் செலுத்துதல்.

★ கற்பித்தலின் போது வினாக்களை எழுப்பி மாணவர்களது சந்தேகங்களைத் தீர்த்தல்.

இவ்வாறான ஆசிரியரது செயற்பாடுகளினால் மாணவர்கள் கல்வியில் ஆர்வமுடையவர்களாக மாறுவார்கள்.

மாணவர்கள் எப்பொழுதும் பெற்றோரை விட ஆசிரியர்களது சொற்களை நம்புகின்ற இயல்பினையுடையவர்கள். பாடம் சார்ந்த கல்விக்கு மேலாக ஒவ்வொரு ஆசிரியரும் சமூகம் சார்ந்த பிரச்சினைகள், சமூகத்தில் தனிமனிதனின் பங்களிப்பு, விட்டுக்கொடுப்பு, முன்மாதிரி, நடுவு நிலைமைத் தன்மை, ஒழுக்க விழுமியங்களைப் பேணுதல் போன்றவற்றிலும் மாணவர்களுக்கு வழிகாட்ட வேண்டும்.




**புத்திஜீவியன்**

ஒவ்வொரு தொழிலுக்கும் ஒவ்வொரு தகைமை சிறப்பாக வேண்டப்படுகிறது. ஆசிரியத் தொழிலுக்கு வேண்டப்படும் மேலான தகைமை ஒழுக்கமே ஆகும். ஏனெனில், ஆசிரியர்கள் வெறும் சேவைகளுடன் மட்டும் உறவாடுபவர்கள் அல்லர். எதிர்கால சமூகத்தை உருவாக்குபவர்கள் அவர்கள். எனவே, ஒவ்வொரு செயற்பாடுகளிலும் ஆசிரியர்களை மாணவர்கள் அவதானிக்கின்றார்கள், பின்பற்றுகின்றார்கள் என்பதை உணர்ந்து கொண்டால் ஆசிரியர்கள் தவறான பாதையில் ஒருபோதும் பயணிக்கத் துணியமாட்டார்கள்.

இவ்வாறான பிரச்சினைகள் எல்லாவற்றையும் தாண்டி பாடசாலைக்குள் வருகின்ற மாணவர்களை வழிப்படுத்தி கற்றலில் ஈடுபடுத்தும் திறனைப்பெறக்கூடிய நிறுவனம் சார் பயிற்சிகளை ஆசிரியர்களுக்கு வழங்குவதென்பது மிகவும் அரிதே. மேலை நாடுகளைப் பொறுத்தவரையில் ஆசிரியத் தொழில்தான் உயர்ந்த அந்தஸ்தைக் கொண்ட தொழிலாக இருக்க, இலங்கையில் எல்லோரும் செய்யக்கூடிய இலகுவான தொழிலாக இந்த ஆசிரியத் தொழிலே விளங்குகின்றது.

எந்தவொரு பயிற்சியுமின்றி தொழிலுக்கு வருகின்ற ஆசிரியர் ஒருவரினால் எவ்வாறு மாணவர்களை உளவியல் ரீதியாக நெறிப்படுத்த முடியும்? மாணவர் பற்றிய உளவியல் அறிவு ஒழுக்கவிதி, வகுப்பறை முகாமைத்துவம், ஆசிரியரது கடமைகள், பொறுப்புக்கள் இவைபற்றிய பயிற்சிகள் ஆசிரியசேவையில் இணைவோருக்குத் தேவை.

எனவே, இத்தகைய நிலை ஏற்படாதவாறு ஆசிரியப் பயிற்சிகளை வழங்கி ஆசிரியப் பணியின் அர்ப்பணிப்பையும் மகத்துவத்தையும் ஆசிரியரிடையே ஏற்படுத்தி வகுப்பறைக்குள் அனுப்பாதவரை முழுமையான கல்வியை மாணவர் பெறுவது கடினமானதே.

எனவே, தொகுத்து நோக்குமிடத்து மாணவர்கள் இன்று கல்வியைத் தொடரும் வகையில் தொழிற்றிறன் சார்ந்த கல்வி, மாணவரது கற்றலை இலகுபடுத்தும் துணைச் சாதனங்கள், மாணவர் நலத்துறைச் சேவைகள், கட்டாயக்கல்வி முதலானவற்றை அரசு, கலைத்திட்டம் மூலம் அறிமுகப்படுத்தி - நடைமுறைப்படுத்தி இருப்பினும், இவற்றை எல்லாம் வகுப்பறையினுள் முன்னெடுத்துச் செல்பவர்கள் ஆசிரியர்களே என்ற வகையில் மாணவர்களைக் கல்வியின் பால் திசை திருப்புவதில் ஆசிரியர்கள் செய்யக்கூடியதும், செய்ய வேண்டியதுமான பணிகள் பலவாகும். ★

## கல்விச்சாலைக் காட்சிகள்



கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தின் மெய்வன்மைப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் எஸ்.செல்வரத்தினத்தை வித்தியாலயத்தின் விளையாட்டுத்துறை ஆசிரியர் சி.தேவராசா மலர்மாலை அணிவித்து வரவேற்பதைப் படத்தில் காணலாம்.



குன்னாலை வசந்தம் பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டியை ஆசிரியர் எஸ்.கருணேஸ்வரன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். விழாத் தலைவி பண்டிதை பத்தினியம்மா வல்லிபுரம், யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, வடமராட்சி மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் வர்ணம் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

*(படம்: வடமராட்சி செய்தியாளர்)*



சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி) கல்லூரி அதிபர், ஆசிரியர்களால் 'பாண்ட்' வாத்திய இசையுடன் விழா மண்டபத்துக்கு அழைத்துச்செல்லப்படுவதைப் படத்தில் காணலாம்.



நூலக வாரத்தை முன்னிட்டு ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற நூல் கண்காட்சியை தெல்லிப்பழை பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். வித்தியாலய அதிபர் திருமதி கு.ஜெயவீரசிங்கம், எழுத்தாளர் ந.சிவபாதம் (புத்தொளி) ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

*(படம்: சண்டிலிப்பாய் செய்தியாளர்)*

# PATRICIAN INSTITUTES

## பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

தொழில்நுட்பப் பயிற்சி நெறிகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

**ஆரம்பம் 05-01-2004**

| | |
|---|---|
| I. A. ADVANCED DIPLOMA IN COMPUTER PROGRAMMING | DURATION 1YEAR |
| B. DIPLOMA IN MICRO SOFT OFFICE | DURATION 6MONTHS |
| C. DIPLOMA IN TYPE SETTING | DURATION 3MONTHS |
| D. DIPLOMA IN COMPUTERISED ACCOUNTING | DURATION 4MONTHS |
| E. DIPLOMA IN DESK TOP PUBLISHING | DURATION 6MONTHS |
| F. DIPLOMA IN ACCESS INCLUDING S.Q.L. | DURATION 3MONTHS |

**II. CERTIFICATE COURSES:-**

| | | |
|---|---|---|
| i) M.S. WORD - 2000 | vi) PASCAL | xi) d BASE FOR WINDOWS |
| ii) M.S. EXCEL - 2000 | vii) d BASE III+ | xii) PRINT SHOP DELUXE |
| iii) M.S.ACCESS - 2000 | viii) PAGE MAKER | xiii) ADOBE PHOTO SHOP |
| vi) M.S. POWER POINT | ix) WINDOWS 95 | xvi) QUICK BOOK |
| v) VISUAL BASIC VER 6.5 | x) COREL DRAW | EACH 3 MONTHS |

| | | |
|---|---|---|
| III. | சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (ஆங்கிலம்) | காலம் 6 மாதங்கள் |
| IV. | சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (தமிழ்) | காலம் 6 மாதங்கள் |
| V. | மோட்டார் வாகனம் திருத்துதல் (Petrol or Diesel வாகனங்கள்) | காலம் 6 மாதங்கள் |
| VI. | ஜெனரல் எலக்ரிஷன் (மின்சார இணைப்பு, மோட்டார் றிவைண்டிங்) | காலம் 6 மாதங்கள் |
| VII. | வானொலி, தொலைக்காட்சிப்பெட்டி திருத்துதல் | காலம் 8 மாதங்கள் |
| VIII. | கடைச்சல் இயந்திர தொழிற்பயிற்சி (ON THE JOB TRAINING வழங்கப்படும்) | காலம் 3 மாதங்கள் |
| IX. | மின் ஒட்டுநர் பயிற்சி (ON THE JOB TRAINING வழங்கப்படும்) | காலம் 3 மாதங்கள் |
| X. | மரவேலை (with Use of Machinery) (ON THE JOB TRAINING வழங்கப்படும்) | காலம் 6 மாதங்கள் |
| XI. | குளிர்சாதனப்பெட்டி திருத்துதல் | காலம் 6 மாதங்கள் |

(VIII, IX, X பயிற்சிநெறிகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்குப் பயிற்சி நிறைவில் மீண்டும் ஊக்குவிப்புப் பணம் வழங்கி அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழுக்கு சிபாரிசு செய்யப்படும்.)

எமது நிறுவனத்தில் கணனிகள், வானொலி, தொலைக்காட்சிப்பெட்டிகளில் ஏற்படும் எல்லாவித பழுதுகளும் திருத்தம் செய்து கொடுக்கப்படும்.

**NOTE:-**

1. பயிற்சிக் கட்டணங்களைத் தவணைமுறையில் செலுத்தலாம்.
2. வன்செயலால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் போதிய ஆதாரங்காட்டி பங்குக் குருவானவரின் (Parish Priest) சிபார்சின் பெயரில் பயிற்சிக் கட்டணத்தில் சலுகையைப் பெற்றுக்கொள்ளலாம்.
3. எமது நிறுவனத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படும்.
4. பயிற்சிகள் சம்பந்தமான சகல விவரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**PRODUCTION AND REPAIRING ON ORDER......!**

**கட்டமைத்தலும் திருத்துதலும்**

சகல விதமான இரும்புசார் உற்பத்திப் பொருள்களும், ஒட்டு வேலைகளும், மரத்தளபாடங்களும் உறுதியான தொழில்சார் அறிவு மூலமும் ஓடருக்கு மிக விரைவாகவும் திறமையாகவும் செய்துகொடுக்கப்படும்.

**வாகன உரிமையாளருக்கான அறிவித்தல்**

**வாகனத் தகுதிச் சான்றிதழ் - 2004**

**FITNESS CERTIFICATE FOR MOTOR VEHICLE**

2004 ஆம் ஆண்டுக்கான வாகனத் தகுதிச் சான்றிதழ் தை மாதம் தொடக்கம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் மோட்டார் சைக்கிளுக்கான ENGINE NO. பொறித்துக் கொடுக்கப்படும்.

*முக்கிய குறிப்பு:-*

சகல பயிற்சி நெறிகளுக்கும் ஆண், பெண் இருசாராரும் சேர்த்துக் கொள்ளப்படுவர் (2004 ஆம் ஆண்டில் இருந்து).

மேலதிக விவரங்களுக்கு:-

REGISTRER,

**PATRICIAN INSTITUTES,**

**59, ST. PATRICK'S ROAD,**

**JAFFNA.**

(C/31869) (25-24-13-16)



# நியூ சயன்ஸ் அக்கடமி

## நெல்லியடி

**A/L 2006**

**கணித, உயிரியல் வகுப்புகள்**

(O/L பரீட்சையில் தோற்றியவர்களுக்கு)

| | |
|---|---|
| இரசாயனம்: | திரு.மணியம், திரு.அன்பு |
| பௌதிகம்: | திரு.குகன், திரு.பிரபா |
| இணைந்த கணிதம்: | திரு.செந்தில்றாஜ் |
| உயிரியல்: | திரு.தற்பரன் |

ஆரம்பம்: 20.12.2003 சனிக்கிழமை 1.00 மணி.

**கலை, வர்த்தகப் பிரிவு**

**A/L 2006**

| | |
|---|---|
| பொருளியல்: | திரு.விக்கி |
| தமிழ்: இந்துநாகரிகம்: | திரு.முகுந்தன் |
| அளவையியல்: | திரு.சுதன் |

*ஏனைய பாடங்களும் நடைபெறும்.*

(25772) (25-24-13-16)


# இரண்டாம் ஆண்டு நினைவுகளில்

நிஜமாகி 22 - 03 - 1962



நினைவில் 15 - 12 - 2001

**அமரர் மாணிக்கம் பரமானந்தம் (பரா)**

திதி: 15.12.2003

உனைப்பிரிந்து இரண்டு ஆண்டுகள்,
உருண்டோடியது இருண்டயுகமாக
ஈரவிழிகளுடன் இதயம் கனக்க
என்றும் சுமந்து நிற்போம் உன் நினைவுகளை...
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

43, முருகமூர்த்தி வீதி,
வண்.வட மேற்கு, யாழ்ப்பாணம்.

தினமும் உன் நினைவுகளைச் சுமந்து:
அம்மா, குடும்பத்தினர், உறவினர்கள்.

(25841) (25-24-13-16)

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 14 - 05 - 1926



ஆண்டவன் அடியில் 08 - 12 - 1998

**திருமதி சின்னத்தம்பி கனகம்மா**

திதி: அபரபக்க சஷ்டி 15.12.2003 திங்கள்

அன்புடனும் பண்புடனும் எம்மை வாழ வைத்த
எம் அன்புத் தெய்வமே!
ஐந்து ஆண்டுகள் சென்றாலும்
மறையாதம்மா எங்கள் துயரம்!

*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:*

சி.முருகமூர்த்தி
முருகன் இரும்புத் தொழிற்சாலை
அன்ட் மணப்பந்தல்,
மீசாலை.

- மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(25840) (25-24-13-16)

# ஓராண்டு நினைவலைகள்

தாயக மடியில் 02 - 01 - 1945



தாயக மண்ணில் 27 - 11 - 2002

**அமரர் முருகேசு சிவகுரு (G.S.)**

திதி: 15.12.2003

சரித்திர நாளிலே எம்மை விட்டுப் பிரிந்தீர்களே – அப்பா!
கல்வியே வாழ்வென்று எம்மை வளர்த்தீர்களே – அப்பா!
நல்வழியில் நாடு நலம் பெற நாங்கள் நடப்போம் – அப்பா!
ஓராண்டு சென்றாலும் ஒரு கணமேனும் மறவோம் ....! உங்களை...

உங்கள் நினைவுடன் வாழும்:

உசன்,
மிருசுவில்.

(25737) (25-24-13-16)

- குடும்பத்தினர்.


# நிரந்தர சமாதானத்துக்குக் கட்டியம் கூறிய எழுத்தாளர் மற்றும் கலைஞர்கள் மாநாடு

**திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் அண்மையில் கொழும்பில் நடத்தப்பட்ட எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் மாநாடு பற்றிய ஒரு தொகுப்பு இவ்வார கலைச் சுடரை அலங்கரிக்கின்றது.**

இலங்கைத் தீவில் நிலையான அமைதியை ஏற்படுத்துவதில் நீண்ட காலமாக உழைத்துவரும் அமைப்புகளில் திருமறைக் கலாமன்றம் முக்கிய இடம்பெறுகிறது. இனங்களிடையே சகோதரத்துவத்தை ஏற்படுத்துவதற்காக கலைகள் மூலம் தனது பணியை முன்னெடுத்து வருகின்றது இந்த அமைப்பு.

அதற்கான செயற்பாடுகளின் இன்னொரு வடிவமாக இலங்கை எங்கும் உள்ள கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களை ஒன்றிணைத்து குழு நிலைக் கூட்டங்களையும் நடத்திவருகின்றது. இதன்மூலம் கலைஞர்களையும் எழுத்தாளர்களையும் அவர்களுக்குரிய ஊடகங்களின் ஊடாக - சமாதானத்தின் முன்னேற்றத்துக்கு - உழைக்க வைப்பதே இதன் நோக்காகும்.

கடந்த ஆண்டு, தாய்லாந்துப் பேச்சுக்கள் ஆரம்பமான நாள் முதலாக இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. யாழ்ப்பாணம், காலி, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் இதுபோன்ற கலந்துரையாடல்கள்



ஏற்கனவே இடம்பெற்றுள்ளன. அதன் தொடரான கூட்டம் அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

'முரண்பாட்டு மாற்றத்தில் கலையினதும் ஊடகத்தினதும் பங்களிப்பு' என்ற தொனிப்பொருளிலான இந்த மாநாடு, நவம்பர் 23ஆம் திகதி கொழும்பு சுதந்திர சதுக்கத்திலுள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் திருமறைக் கலாமன்ற இணைப்பாளர் ஜோசப் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர்களில் ஒருவரான குணபால பிரேமலதா வரவேற்புரை நிகழ்த்துகையில், "இத்தகைய இணைந்த இன, மத, கலாசார நடவடிக்கைகளின் ஊடாக ஒப்புரவுத் தன்மைக்கான புரிந்துணர்வை ஏற்படுத்துவதே எமது நோக்காகும்" என்று குறிப்பிட்டார்.

மாநாட்டின் தொடக்க உரையை பத்திரிகை எழுத்தாளர் காஸ்ரன் டீ றொசைரோ நிகழ்த்தினார். அவர் தனது உரையில் தெரிவித்ததாவது:-

இன்று நாட்டில் முழுமையான குழப்பநிலைமை ஏற்பட்டுள்ளது. எல்லா சமூகங்களினதும் கொள்கை வகுப்பவர்கள் இணைந்து பணியாற்ற வேண்டிய சூழல் இது. அனைத்து மக்களும் அதனையே எதிர்பார்க்கிறார்கள். அமைதித் தீர்வு காண்பதற்குரிய கடைசிச் சந்தர்ப்பம் இது வாகும். இந்த நாடு அந்த அளவுக்கு மோசமான நிலைமையில் உள்ளது.

இந்த நேரத்தில் கைநழுவிப் போகின்ற ஒரேயொரு விடயம் என்னவென்றால், அது தொடர்பாடல் ஆகும். நாம் பொதுவான மொழிகளை எமக்கிடையே பகிர்ந்துகொள்ளாவிடில் பரஸ்பர தொடர்பை இழந்துவிடுவோம். இந்துக்களும் பௌத்தர்களும் பல நூற்றாண்டுகளாக தத்தமது பாரம்பரியத்தை பின்பற்றி வந்திருக்கின்றார்கள். நாகரிகமிக்க சமுதாயமாக வாழ்ந்திருக்கிறார்கள். இந்த இரண்டு சமுதாயங்களும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவை. ஒரே காற்றைச் சுவாசிக்கின்ற ஒரே தேசத்து மக்களாகிய நாம் - ஒரே தெய்வக் கோட்பாட்டை கொண்ட மக்களாகிய நாம் - முரண்பாடுகளால் பலியாகி வருவது வேதனைக்குரியது. உணர்வுபூர்வமான இன சமத்துவத்தில் எவ்வித அக்கறையும் அற்றவர்களால் எமது நாடு, பிளவுகளுக்குப் பலியாகிவிட்டது. நல்லவேளையாக அத்தகையவர்கள் மிகச்சிறிய குழுவினரே உள்ளனர்.

இந்த ஆயுத மோதல்களால் பெருமளவில் பாதிக்கப்பட்டவர்கள் அப்பாவி மக்களே ஆவர். அவர்கள் மோசமான சுமைகளைச் சுமந்து கொண்டிருக்கிறார்கள். அழகிய கிராமங்களில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற அந்த மக்களைத் துன்பங்கள் தொடர்ந்துகொண்டிருக்கின்றன.

அரசியல்வாதிகளும், அவர்களின் அடிவருடிகளும் தங்களின் சுயநலத்துக்காகத் தொடர்ந்தும் யுத்தத்தை வரவேற்றுக் கொண்டிருக்கிறார்கள். யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டில் அமைதியை ஏற்படுத்துகின்ற வாய்ப்பும் திறமையும் எழுத்தாளர்களிடமும், கலைஞர்களிடமுமே இருக்கின்றன. உங்களில் பெரும்பாலானவர்கள் இதனை உணர்ந்து கொள்ளவில்லை. இந்தத் தேசத்தின் மனச்சாட்சியை உருவாக்குபவர்கள் நீங்கள். ஆகவே, நீங்கள் வெறும்




பார்வையாளர்களாக அல்லாது பங்காளர்களாக மாறவேண்டும். அதற்காக தளராத உறுதியோடும் பொறுமையோடும் செயற்படுவோம். எமது சமாதானச் செய்தியை இந்த நாட்டுக்கும் சர்வதேசத்துக்கும் எடுத்துச்சொல்வோம் .

- இப்படி காஸ்ரன் டீ றொசைரோ சொன்னார்.

நிகழ்வில் கலந்துகொண்ட பேராளர்களினது பங்களிப்புகளை அடுத்து 'சமாதானப் பங்களிப்பு' குறித்த குழு நிலைக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதற்கான குழுவில் தென் மாகாண ஊடகவியலாளர் சங்கத் தலைவர் டபிள்யூ கே.ரி.எஸ். கவிரட்ணா, சூரியன் எவ்.எம். இயக்குநர் எஸ்.நடராஜசிவம், போருக்கு எதிரான தேசிய முன்னணியின் திட்ட இயக்குநர் சேலி கந்தப்பா, 'யங் ஏசியா' தொலைக்காட்சி நிறுவனத்தைச் சேர்ந்த (YA T.V) திருமதி சாமினி பொய்ல், திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர்களில் ஒருவரான எம். சாம். பிரதீபன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

இதற்கான கேள்வி நேரத்தைத் தொடர்ந்து மதிய உணவுக்காக மாநாடு இடைநிறுத்தப்பட்டது.

மீண்டும் பிற்பகல் 2.30 மணியளவில் மாநாடு ஆரம்பமானது. முதலில் ஒப்புரவுத் தன்மை குறித்த ஜி.ரி.வியின் விவரணச் சித்திரம் காண்பிக்கப்பட்டது.

பிற்பகல் 3 மணியளவில் 'சமாதானம் பற்றிய எனது எதிர்பார்ப்பு' என்ற தொனிப்பொருளில் தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் இனத்தவர்களைச் சார்ந்த அங்கத்தவர்களின் எண்ணங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

முஸ்லிம் சமூகத்தின் சார்பில் முதலில் கலாநிதி ஜின்னாப் செரீப்தீன் உரையாற்றுகையில் -

"நிரந்தர சமாதானத்துக்காக நாங்கள் ஒவ்வொருவரும் வழிதேடிக் கொண்டிருக்கின்ற காலகட்டம் இது. சமாதானத்தை அடைவதற்கு புரிந்துணர்வும் விட்டுக்கொடுப்பு மனப்பான்மையும் முக்கியமானது. நாங்கள் சிங்களவராகவோ தமிழராகவோ அல்லது முஸ்லிமாகவோ இருந்தாலும் அனைவரும் இந்த நாட்டில் பிறந்தவர்களே! நாங்கள் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து ஒற்றுமையாக வாழ்வோம். இன்றைய அமைதி நிலையை மேலும் பலப்படுத்துவோம்"

- என்று குறிப்பிட்டார்.

அடுத்ததாக தமிழ்ச் சமூகத்தின் சார்பில் பிரபல எழுத்தாளர் செம்பியன் செல்வன் (ப.இராஜகோபால்) கருத்துரை வழங்கினார்.

"அமைதியை விரும்புகின்ற எங்களை மொழி மற்றும் இனம் என்ற பெயர்களால் பிரித்துவிட முடியாது. மதங்கள் எல்லாம் அன்பையே போதித்து நிற்கின்றன. மானுடம் என்பது விட்டுக்கொடுக்கும் பக்குவத் தன்மை வாய்ந்தது."

தற்காலிக யுத்தநிறுத்தச் சூழலை சமாதானம் எனக்கூறி ஆரவாரப்படுத்துகின்றோம். உண்மையில் போரை விட ஆபத்தான காலகட்டம் இது என்பதை நாங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். பொதுவாக நாம் அரசியல் பேச அஞ்சுபவர்கள். ஆனால், இன்று சமாதானம் குறித்து நாங்கள் பேசிக்கொண்டிருப்பதற்கு எமது வாழ்வில் கலந்துவிட்ட அரசியலே காரணம் எனலாம். எவ்வாறாயினும் 'நாங்கள் போருக்கு எதிரானவர்கள்' என்று கூறுவதானது 'நாங்கள் சமாதானத்துக்கானவர்கள்' என்பதாகாது. - இப்படி செம்பியன்செல்வன் குறிப்பிட்டார்.



தொடர்ந்து, வடக்கு - தெற்கு ஊடகவியலாளர் சங்கப் பிரதிநிதி தினேஷ் நிஷாந்த சிங்கள் இனத்தின் சார்பில் கருத்துத் தெரிவித்தார். கூறியதாவது,

'கல்வியறிவு அற்றவர்களே பெரும்பாலும் யுத்தத்தில் ஈடுபடுகிறார்கள். ஓர் இளைஞன் என்ற வகையில் எனது கண்ணோட்டம் அப்படித்தான் இருக்கிறது. சகல மதங்களும் 'அன்பு செய்யுங்கள்' என்றுதான் போதனை செய்கின்றன. அப்படியிருக்கும்போது நாங்கள் ஏன் ஒருவரை ஒருவர் தாக்குகின்றோம்?

தற்போது தற்காலிக யுத்த நிறுத்தமொன்று அமுலில் உள்ளது. நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவதன் மூலம் அதனையே நிரந்தர அமைதியாக மாற்ற முடியும். அதற்காக இங்கு கூடியிருக்கின்ற கலைஞர்களும் எழுத்தாளர்களும் திடசங்கற்பம் கொள்ளவேண்டும். சில ஊடகங்கள் இனவாதத்தை தூண்டி நாட்டை யுத்தத்துக்கு இட்டுச் செல்லுகின்றன.

எமது சிறுபராயத்தில் இன வேறுபாடுகளின்றி நாங்கள் எல்லோரும் இணைந்து கல்விகற்றோம். இப்போது அந்த நிலைமை மறைந்து விட்டது. யுத்தவெறி கொண்ட சிந்தனை படைத்தவர்களே இந்த நிலைக்குக் காரணமானவர்கள்.

யுத்தத்தைப் புறந்தள்ளி பேச்சுக்கள் மூலமே தீர்வுகாணவேண்டும். நாங்கள் காட்டுமிராண்டிகளைப் போல நடந்துகொள்ளாது ஒற்றுமையாக வாழ்வோம். இந்த நேரத்திலிருந்து சமாதானத்துக்காக எம்மை அர்ப்பணிப்போம். சக்திமிக்க நாட்டை உருவாக்குவோம்.

மூவின அங்கத்தவர்களினதும் எண்ண வெளிப்பாடுகளை அடுத்து இந்த அமர்வுக்கான கேள்வி நேரம் ஒதுக்கப்பட்டது.

அப்போது, எழுத்தாளர்களால் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்விகளில் ஒன்று, நிகழ்ச்சி ஒழுங்கமைப்பு தொடர்பில் சர்ச்சை ஏற்படுத்தும் விதமாக அமைந்தது.

'மூவின அங்கத்தவர்கள் மேற்படி அமர்வில் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டுள்ளார்கள். ஆனால், முஸ்லிம்கள் என்பவர்கள் தனி ஓர் இனமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளார்களா? என்பதே அக்கேள்வியாகும்.

அதற்குப் பதிலளித்து கலாநிதி ஜின்னாப் செரீப்தீன் கூறியதாவது:-

'முஸ்லிம்கள் மொழியால் ஒன்றுபட்டிருந்தாலும் மதரீதியாக மட்டுமின்றி கலாசார மற்றும் பண்பாட்டில் வேறுபட்டு நிற்கிறார்கள். அதனால் அவர்கள் தனி இனமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளார்கள். இலங்கைத் தமிழர்களும் இந்திய வம்சாவளித் தமிழர்களும் எவ்வாறு பன்மைப்படுத்தப்பட்டுள்ளார்களோ, அதேபோன்று இதனை விளங்கிக்கொள்ள முடியும் - என்று குறிப்பிட்டார்.

'சமாதானம் பற்றிய எனது எதிர்பார்ப்பு' என்ற அமர்வின்போது மலையகத் தமிழர்களுக்கென்றும் தனியான பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவேண்டும் என்ற ஆலோசனை, அன்றைய மாநாட்டில் உள்வாங்கப்பட்டது. இறுதியாக இடம்பெற்ற குழு ரீதியான தொகுப்பு நிகழ்வின்போது யாழ். திருமறைக் கலாமன்றத்தினைச் சேர்ந்த ஜி.பி. பேர்மினஸ் தலைமையில அமைக்கப்பட்ட குழு இந்த ஆலோசனையை முன்வைத்தது.

இறுதியாக தொகுப்புக் கலந்துரையாடல் இருகுழுக்களாகப் பிரிக்கப்பட்டு இடம்பெற்றது. எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்களால் அங்கு முன்வைக்கப்பட்ட முக்கிய முன்மொழிவுகளில் சில வருமாறு:-

**ஆக்கம் : ரம்யன்**

★ இலங்கையில் நடைமுறையிலுள்ள அரசமைப்பு நீதியானதல்ல. எனவே, அது திருத்தப்பட்டு அல்லது முழுமையாக விலக்கப்பட்டு புதிய அரசமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும்.

★ கல்வி விருத்தி குறைவான பகுதிகளில் அவை மேம்படுத்தப்பட வேண்டும்.

★ பெரும்பான்மை, சிறுபான்மை என்ற பேதம் அகற்றப்பட வேண்டும்.

★ பிரதேச மட்டத்தில் சமாதானம் தொடர்பான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டும்.

★ பாடசாலைக் கல்வியில் மனித நேயம், சகோதரத்துவம், ஜனநாயகம் தொடர்பான பாடத்திட்டங்கள் இணைக்கப்படவேண்டும்.

★ அனைத்து இனக் கலைஞர்களிடையே உறவுப் பாலம் அமைக்கப்படவேண்டும்.

★ இந்த நாட்டின் அதிகாரத் தரப்பு இன, மத சார்பற்றதாக அமையவேண்டும்.

★ வடக்கு - தெற்கு ஊடகவியலாளர்கள் பரஸ்பரம் தொடர்புகளை ஏற்படுத்தி ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும்.

இந்த மாநாட்டில் கலந்துகொண்டிருந்த எழுத்தாளர்களாலும் கலைஞர்களாலும் பயனுள்ள பல கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டன. அவை இலங்கையின் இனப்பிரச்சினை, அப்பிரச்சினைகளுக்கான காரணிகள், தற்போதைய சமாதான முனைப்புக்கள், நடித்த அமைதிக்கான வழிமுறைகள் போன்றவற்றுடன் தொடர்பானவையாக இருந்தன. இம்மாநாட்டில் எட்டப்பட்ட விடயங்கள் நடைமுறைக்கு இட்டுச் செல்லப்படும் என்பதற்கு மாநாட்டில் எழுத்தாளர்களும், கலைஞர்களும் வெளிப்படுத்திய கருத்துக்களே கட்டியம் கூறுவதாக அமைந்தன.

★

# வேலைக்கு ஆள் தேவை

✦ கை, கால் சுகவீனமாக இருப்பவருக்கு உடற்பயிற்சி கொடுக்கக்கூடிய (ஹோமியோபதி) வைத்தியர் ஒருவர் தேவை. சம்பள விவரம் நேரில்.

✦ 45 வயதிற்கு மேற்பட்ட ஒருவர் வீட்டில் தங்கி இருந்து வீட்டைப பராமரிக்கக்கூடியவர் தேவை. சம்பள விவரம் நேரில்.


தொடர்பு:

**அற்லஸ் கொமினிக்கேஸன்**

**77, K.K.S. Road,**
**Jaffna.**
**T.P.: 021 222 2557**
**021 222 2990**

(25853) (24-13-16)

# வெளிவந்துவிட்டது!



**இலத்திரனியல் -**
**நுண்ணிலத்திரனியல்**
**Electronics -**
**Microelectronics**

செய்முறை வேலைப்புத்தகம்

க.பொ.த. (உயர்தர) வகுப்பு மாணவர்களுக்கானது

கிடைக்குமிடம்:

**ஸ்ரீலங்கா புத்தகசாலை,**
234, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 2573

இப்புத்தகத்தின் அட்டைப்படம் குறிக்கின்ற தத்துவங்களைச் சரியாக எழுதித்தரும் முதல் பத்து மாணவர்களுக்கு ஒரு பிரதி இலவசமாக வழங்கப்படும்.

(சி-32024) (25-24-13-16)

# கண்ணீர் அஞ்சலி

தே.நீ.வ.வ. சபை பிராந்திய காரியாலயத்தில் கடமைபுரிகின்ற
சி.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி சின்னையா வள்ளியம்மை**

*அவர்கள் 11.12.2003 வியாழக்கிழமை காலமான செய்திகேட்டு அதிர்ச்சியுற்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

வடபிராந்திய தொழிற்சங்கத்தினர்,
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை,
யாழ்ப்பாணம்.

(25848) (24-13-16)

# கண்ணீர் அஞ்சலி



பேராதேனியா பல்கலைக்கழக பொறியியற்பீட மாணவன் செல்வன் ச.பிரியதர்சன் அவர்களின் அருமைத் தந்தையார்

**சின்னையா சண்முகதாஸ்**

*அவர்கள் 12.12.2003 இல் கொழும்பில் காலமானார். அவரது மறைவு மிகவும் கவலைக்குரியது. அன்னாரின் பிரிவால் வருந்துகின்ற குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு, கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாகச் செலுத்தி ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகின்றோம்.*

க.பொ.த. உயர்தர 99
கணிதப் பிரிவு மாணவர்கள்.

(25851) (24-13-16)

# துயர் பகிர்கின்றோம்

எமது பீட இறுதிவருட மாணவி
செல்வி **பு.பிறேமளா** அவர்களின்
அருமைத் தந்தையார்

**அ.புஸ்பராசா**

அவர்கள் அகால மரணமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தவரோடு நாமும் துயரில் பங்கேற்று அவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அவரின் ஆத்மா சாந்தி அடைவதாக.

4ஆம் வருட மாணவர்கள்,
வணிகத்துறை,
முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(25849) (26-24-13-16)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர்

**சின்னத்தம்பி நோயல் மணிமாறன்**

அவர்கள் நேற்று (14.12.2003) ஞாயிறன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர்.
யாழ்ப்பாணக் கல்லூரி

(C/32034) (24-13-16)


## பத்திரிகையாளர் செயலமர்வு

யாழ்ப்பாணம்,டிசெ.15

யாழ் பல்கலைக்கழக ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நிலையம் பத்திரிகையாளர்களுக்கென "செய்திக் கட்டுரைகள் எழுதுவது எப்படி" என்பது குறித்த செயலமர்வு ஒன்றினை நாளைமுதல் எதிர்வரும் 19ஆம் திகதி வரை நடத்தவுள்ளது.

பல்கலைக்கழக புவியியற்துறை மண்டபத்தில் காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை நடைபெறவுள்ள இந்தச் செயலமர்வில் கலந்துகொள்ள விரும்புவோர் இன்று யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலைய அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்திலிருந்து வெளிவரும் 'குமுதம்' சஞ்சிகையின் ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்தவரும், தீராநதி இலக்கிய இதழின் பொறுப்பாசிரியருமான தளவாய் சுந்தரம் மற்றும் உள்நாட்டின் பிரபல செய்திக்கட்டுரையாளர்கள் ஆகியோர் இதில் கலந்துகொண்டு விளக்கங்களை வழங்கவுள்ளனர். (எ-4)

## அரச அலுவலர்க்கு ஆற்றல் மேம்படுத்தல் பயிற்சிநெறி

வலி.மேற்கு,டிசெ.15

நாடு பூராவுமுள்ள கிராம அலுவலர்கள், சிற்றூழியர்கள், எழுதுவினைஞர்கள், சாரதிகள் ஆகியோரின் ஆற்றலை மேம்படுத்துவதற்குரிய பயிற்சிநெறிகளை அடுத்தாண்டு நடத்துவதற்கு பொது நிர்வாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு திட்டமிட்டுள்ளது.

அரச சேவை பயிற்சி நிறுவனத்தினரின் அனுசரணையுடன் இந்தப் பயிற்சிகள் நடத்தப்படவுள்ளன. இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்றை மேற்படி அமைச்சு சகல பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் ஆகியவற்றுக்கு அனுப்பிவைத்துள்ளது. (எ-125)

## கரம்பொன் கிழக்கில் வீடுகள் கையளிப்பு

ஊர்காவற்றுறை,டிசெ.15

ஊர்காவற்றுறை, கரம்பன் கிழக்குப் பகுதியில் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் நிதியுதவியுடன் போரூட் நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட வீடுகள் அண்மையில் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டன.

'எய்றின்' குடியிருப்புத் திட்டம் என்ற பெயரில் வறிய குடும்பங்களைச் சேர்ந்த 17குடும்பங்களுக்கு இத்தகைய வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. (எ-16)

## கசிப்பு உற்பத்தி செய்த இருவர் கைதாகினர்

யாழ்ப்பாணம்,டிசெ.15

உரும்பிராய் பகுதியில் வீடு ஒன்றில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் கோப்பாய் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீசெல்வம் தெரிவித்ததாவது:-

உரும்பிராய், சேச் றோட் பகுதியில் வீடு ஒன்றில் கசிப்பு உற்பத்தி நடைபெறுவதாக எமக்கு தகவல் ஒன்று கிடைத்தது. இதனை அடுத்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை நேரடியாக அங்கு சென்ற நாம், உற்பத்தியில் ஈடுபட்டிருந்த இருவரைக் கைது செய்ததுடன் -

காய்ச்சப்பட்டு விற்பனைக்குத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த கசிப்பு, இரண்டு பரல் கோடா, எட்டு வெறுறுப்பரல்கள் மற்றும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களையும் கைப்பற்றினோம் - என்றார்.

இதேவேளை, சம்பந்தப்பட்ட வீட்டுக்கு அருகில் இருந்த இரு வெவ்வேறு வீடுகளில் இருந்தும் இரு பரல் கோடாவை மீட்டுள்ளோம் - என்று அவர் மேலும் கூறினார். (எ-7)


# விற்பனையாளர் தேவை

தொடர்புகொள்க:
**ஸ்ரீலங்கா புத்தகசாலை**
234, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
**T.P.: 2573**

(சி-32023) (24-34-13-16)

# வாழ்த்துகின்றோம்



சாவகச்சேரி கல்வயல் கிராம அலுவலர் பிரிவில் போரினால் பாதிக்கப்பட்ட வறுமைக்கோட்டின்கீழ் உள்ள 77 குடும்பங்களுக்கு மலசுடம் அமைப்பதற்கு 770 பைக்கற் சிமெந்தும் 77 மாபிள் பேசினும் தந்துதவிய

*இந்துகலாசார மாண்புமிகு அமைச்சர்* **தி.மகேஸ்வரன்**

அவர்களை மனமுவந்து நன்றியுடன் வாழ்த்துகின்றோம்.

கல்வயல் சமூக சேவா சங்கம்,
கலைமகள் சனசமூக நிலையம்,
கல்வயல் பிரிவு மக்கள்.

(சி-32033) (24-13-16-34)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



பண்டத்தரிப்பு முன்னாள் கிராம அலுவலரும்,
தற்போதைய மாதகல் கிழக்கு
கிராம அலுவலருமான

**திரு. இ.துரைராசா**

அவர்கள் தரம் ஒன்றுக்குப் பதவி உயர்வு பெற்றமையையிட்டும், உள்துறை அமைச்சு நடத்திய கிராம அலுவலர்களுக்கான முகாமைத்துவப் போட்டியில் யாழ்.மாவட்டத்தில் 3ஆம் இடத்தைப் பெற்றமையையிட்டும் அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

விழாக்குழுவும்,
பண்டத்தரிப்பு மக்களும்.
பண்டத்தரிப்பு.

(25859) (26-13-16-34)

# போட்டிப் பரீட்சை

ஆசிரியர்களுக்கான போட்டிப் பரீட்சை பயிற்சி வகுப்புகள்

**புதிய பிரிவு ஆரம்பம்**

17.12.2003 பி.ப.3 மணி
சனி. ஞாயிறு வகுப்புகள்

*பிரிவு* I காலை 8, *பிரிவு* II பி.ப.3
*புதிய உயர்கல்லூரி,*
*ஆரியகுளம் சந்தி - யாழ்.*

(25854)(13-16-34)

# மருத்துவ மாணவர் பொதுக்கூட்டம்

அனைத்து மருத்துவ மாணவர்களுக்குமான மிகவும் முக்கியமான பொதுக்கூட்டம் ஒன்று இன்று (15.12.2003) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெறுகின்றது. மருத்துவ மாணவர்கள் அனைவரும் சமுகமளிக்கவும்.

தலைவர்,
மருத்துவ மாணவர் ஒன்றியம்.
யாழ். பல்கலைக்கழகம்.

(25857)(34-13-16)

# தவறிவிட்டது

கைதடியைச் சேர்ந்த சின்னத்துரை தங்கவேல் என்பவருடைய கைச்சங்கிலி (5 பவுண்) ஒன்று கடந்த 11.12.2003 வியாழனன்று கைதடி, இணுவில், குளப்பிட்டி, கொக்குவில் பகுதிகளில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் கீழுள்ள முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

சாயினி தொலைத்தொடர்பகம்,
4 ஆம் கட்டையடி,
இணுவில்.

(25847) (25-13-16-34)

# கண்ணீர் அஞ்சலி



எமது நிர்வாக உறுப்பினர் ச.புவனராணி
அவர்களின் அன்புக் கணவர்


**சின்னையா சண்முகதாஸ்**

*அவர்களின் (12.12.2003) மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன், கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்மா சாந்தி அடைய அத்தியடி விநாயகரின் அருள்வேண்டி நிற்கின்றோம்.*

யாழ். அத்தியடிப் பிள்ளையார்,
கோயில் நிர்வாகத்தினர்.
*அத்தியடி,*
*யாழ்ப்பாணம்.*

(25844) (24-34-13-16)

# DADI ஜெனரேட்டர்



■ 10KW
■ நிசப்தமானது
■ மின்சக்தியில் இயக்கப்படுவது

கொஸ்மோ வர்க்கங்களும் கிடைக்கின்றன

**சென்ட் அந்தனிஸ் கொன்சலிடேட்டட் லிமிட்டெட்**
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-10.
தொலைபேசி. 2337286, 2337283-5, 2324261-5

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Access Graphics

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வீடு விற்பனைக்கு

சுண்டிக்குளி, சோமசுந்தரம் அவெனியுவில் மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்துக்கு முன்னுள்ள றக்கா ஒழுங்கையில் 44 ஆம் இலக்கத்தைக் கொண்ட ஒரு பரப்பும் 10.81 குளி விஸ்தீரண காணியும் அண்மையில் திருத்திய சகல வசதிகளுடன் வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வி.எஸ்.சிவரெட்ணம், C/o தேவா, இல.62 (59), பழைய பூங்கா வீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (C/31887)

## விற்பனைக்கு

36 ஸ்ரீ தொடரிலக்கமுடைய மெசி பெர்குசன் (M.F) ட்ரக்டர் (புதிய பெட்டியுடன்) விற்பனைக்குண்டு. தொடர்பு: க.பஞ்சலிங்கம் (ஆசிரியர்), ஐயா கடையடி, மீசாலை. (25750)

## காணி தேவை

திருநெல்வேலி, கோண்டாவில் பகுதிகளில் பலாலி வீதியை அண்டியதாக கடை கட்டுவதற்கு வெற்றுக் காணியும் மற்றும் பருத்தித்துறை வீதியில் கல்வியங்காடு, கட்டப்பிராய், கரவெட்டி பகுதிகளில் வீடு கட்டுவதற்கான காணியும் விலைக்குத் தேவை. தரகர் தேவையில்லை. தொடர்பு: கந்தையா இலட்சுமணன், "சிவபுரம்", சித்தன்கேணி. (25784)

## வானொலி நாடக நூல்

வானொலியில் "அனாதை" நாடகம் கேட்டீர்களா? அராலியூர் ந.சுந்தரம் பிள்ளை எழுதிய "வானொலி நாடகம் எழுதுவது எப்படி? என்ற முதலாவது தமிழ் நூலைப் படித்தால் நீங்களும் அந்த மாதிரி நாடகம் எழுதலாம். (25846)

## தவறிவிட்டது

இல. 61/6, மில் ஒழுங்கை, பிரம்படி, கொக்குவிலைச் சேர்ந்த சி.மகேந்திரன் என்பவருடைய கையடக்கத் தொலைபேசி (SEIMENS) கச்சேரி கிழக்கு ஒழுங்கைக்கும் கண்டி வீதி, வைரவர் கோவிலடிக்கும் இடையில் 12.12.2003 பிற்பகலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். (25832)

## கணிதம்

ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கு குறைந்த காலத்தில் விசேட சித்திக்கும் கற்பிப்பதில் 39 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் A,B பெறுபேறடைவதற்கு அதிவிசேடமாகக் கற்பிக்கப்படும். தொடர்பு: காலை 6-9 மணி வரை க.ஆறுமுகநாதன், இல.10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (25827)

**Wanted Accountancy Visiting Lecturer**

Wanted a Professional Tutor For an Intermediate Chartered & CIMA Student. Subjects are Financial Accounting & Management Accounting. Indicate visiting hours Fee. Packs will be Provided.

C/o Uthayan.

(25777) (26-11-25-24)

## வட கிழக்குத் தொழில்நுட்பம்

34, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 021-222 3786

எம்மிடம் PI, PII, PIII, PIV வகையான கணனிகள் 18,500/= இலிருந்து 46,000/= வரையிலான விலைகளில் விற்பனைக்கு உண்டு. சொற்ப எண்ணிக்கையான கணனிகளே கையிருப்பில் உள்ளதால் இவ்வாய்ப்பைத் தவறவிடாதீர்கள்.

எம்மிடம் MOBILE PHONES களும் குறைந்த விலைகளில் விற்பனைக்கு உண்டு.

☞ கணனிகள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளின் திருத்த வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

## எம் நெஞ்சை விட்டகலாத அன்புத் தெய்வத்தின் ஈராண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| ௨ 10 ௨ 06 ௨ 1940 | ௨ 06 ௨ 12 ௨ 2001 |

அமரர் நயினை **சின்னையா கனகசபை** (ஜப்பான்)

(பிரபல வர்த்தகர்)

திதி: 15-12-2003

அன்பாய், பண்பாய் எமை வளர்த்த தந்தையே!
மாறவில்லை உம் திருவதனம்
குடும்பத்தில் குலவிளக்காய்
குவலயம் போற்ற வாழ்ந்த
எம் அன்புத் தந்தையே!
பாசப் பிணைப்புடன் எம்மை வழிநடத்தி
வாழ்வித்த உங்கள் நினைவுகள்
காலங்கள் சென்றாலும் மறந்திடல் இல்லை!
என்றும் பசுமையாய் எம் நெஞ்சமதில்
சுமந்து நிற்கும் நினைவுகளாகும்!

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

5 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.
0712 - 384484. (25845) (26-11-16-25)

- குடும்பத்தினர்

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 534 |
| திகதி | 12.12.2003 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு
செல்லுபடியாகும் தொடர் இல. 5373678-5388263

வெற்றி இலக்கங்கள் **11 16 32 55**

லக்கினம்: கும்பம்



ஜக்பொட் பரிசு ரூபா. 1,000,000/- வெல்லப்பட்டது.

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **1,000,000/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 323,723 | 10 | 3,237,230 |
| 2 இலக்கங்கள் | 29,786 | 20 | 595,720 |
| 1 இல + லக்கினம் | 29,576 | 30 | 887,280 |
| 2 இல + லக்கினம் | 2,669 | 100 | 266,900 |
| 3 இலக்கங்கள் | 800 | 500 | 400,000 |
| 3 இல + லக்கினம் | 75 | 5,000 | 375,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | 01 | 1,000,000 | 1,000,000 |
| மொத்தம் | 386,634 | - | 7,162,130 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா.7,162,130/-

தொடர் இல. 4398015க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2003 டிசம்பர் 16ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர், 34, கந்தப்பசேகரம் வீதி, (பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

5380835-0-51
5382673-6-70
5384981-6-39
5374733-8-01
5379092-7-40

# சனிக்கிழமை அதிர்ஷ்டம்



உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 3190310 இருந்து 3207232 வரை
சீட்டிழுப்பு இல. 1461
திகதி 13.12.2003



வெற்றி எண்கள் **01 14 23 27 49** போனஸ் எண் **41**

ஜக்பொட் பரிசு ரூபா.4,758,500/- வெல்லப்படவில்லை.

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 4,758,500/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 03 | 100,000/- | 300,000/- |
| 4 | 87 | 10,000/- | 870,000/- |
| 3 | 5,313 | 500/- | 2,656,500/- |
| 2 | 88,814 | 20/- | 1,776,280/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 01ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 108,202 | 10/- | 1,082,020/- |

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட் ரூபா.5,599,350/-

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.6,331,190/-

தொடர் இல. 2237803க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2003 டிசம்பர் 17ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர், 34, கந்தப்பசேகரம் வீதி, (பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3192563-2-55
3203988-1-95
3198586-9-87
3196005-8-80
3200071-7-82

PHOENIX O&M

# தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையால் 2004.01.01ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டவுள்ள தீர்வை மாற்றங்கள்வருமாறு

தீர்வை நீக்கம்

| வகை | நடைமுறையிலுள்ள தீர்வை | 01.01. 2004 இல் தீர்வை |
|---|---|---|
| 01) புத்தகங்கள், நாவல்கள், கதைப் புத்தகங்கள், சஞ்சிகைகள் | 20.0% | இல்லை |
| 02) வேளாண் உள்ளீடுகள் | 5.0% | இல்லை |
| 03) மீன்பிடிப் படகொட்டும் பசை | 10.0% | இல்லை |
| 04) மரங்கள் | 5.0% | இல்லை |
| 05) கால்நடை உணவு (கிலோ ஒன்றுக்கு) | ரூபா1/= | இல்லை |
| 06) படகுகள் | 5.0% | இல்லை |
| 07) வெளியிணைப்புப் பொறிகள் | 5.0% | இல்லை |
| 08) வேளாண் தொழில்சார் பொறிகள் | 5.0% | இல்லை |
| 09) கடற்றொழில் வலைகள், பிணைகள், மிதப்பிகள் | 5.0% | இல்லை |
| 10) கடற்றொழிற் கருவிகள் | 10.0% | இல்லை |
| 11) மெழுகுதிரி | 25.0% | இல்லை |
| 12) கற்பூரம் | 25.0% | இல்லை |

தீர்வை குறைப்பு

| வகை | நடைமுறையிலுள்ள தீர்வை | 01.01.2004இல் தீர்வை |
|---|---|---|
| 01) சுவையூட்டப்பட்ட பால்வகைகள் | 10.0% | 5.0% |
| 02) தேயிலை, கோப்பி | 7.0% | 5.0% |
| 03) சுவையூட்டப்பட்ட தேயிலை, கோப்பி | 10.0% | 5.0% |
| 04) கருவாடு | 15.0% | 7.0% |
| 05) திரைச் சேலைகள், மேசை விரிப்புகள் | 20.0% | 10.0% |
| 06) அலுமினியப் பொருள்கள் | 20.0% | 15.0% |
| 07) வெள்ளிப் பொருள்கள் | 20.0% | 15.0% |
| 08) கல்வனைசு வாளிகள் | 20.0% | 15.0% |
| 09) ஏனைய வீட்டுப் பயன்பாட்டுப் பொருள்கள் | 20.0% | 15.0% |

## 2003.12.15ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் தீர்வை மாற்றங்கள் வருமாறு

தீர்வை கூடுதல்

| வகை | நடைமுறையிலுள்ள தீர்வை | 15.12. 2003 இல் தீர்வை |
|---|---|---|
| 01) கோழி இறைச்சியும் இறைச்சிக் கோழியும் | 10.0% | 15.0% |
| 02) கோழி முட்டை (ஒன்றிற்கு) | ரூபா1/= | ரூபா2/= |

தீர்வைக் கணிப்பு முறை மாற்றம்

| | | |
|---|---|---|
| 01) இறக்குமதி அரிசி | நடைமுறையிலுள்ள தீர்வை (கிலோ ஒன்றிற்கு) ரூபா 1 /= | 15.12.2003இல் தீர்வை (பெறுமதிக்கு) 7.0% |
| 02) உராய்வு நீக்கிகள் | நடைமுறையிலுள்ள தீர்வை (லீற்றர் ஒன்றிற்கு) ரூபா 5/= | 15.12.2003 இல் தீர்வை (பெறுமதிக்கு) 7.5% |






மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தினால் நேற்றுமுன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடத்தப்பட்ட உலக மனித உரிமைகள் தின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா, சட்டத்தரணி எம்.றெமீடியஸ் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட ஜப்பான் நாட்டுப் பிரதிநிதி மாங்கள விளக்கேற்றுவதையும் படங்களில் காணலாம். அருகில் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பாளர் ஆர்.பி.சந்திரசேகராவும் காணப்படுகிறார்.

## ஆங்கில மொழிப் பயிற்சி குறித்து அறிவிப்பு

குருநகர்,டிசெ.15

வடக்கு - கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களத்தால் அரச ஊழியர்களுக்காக நடத்தப்பட்டு வரும் ஆங்கில மொழிப் பயிற்சி வகுப்புக்கள் ஆசிரியர்களுக்கல்ல என்றும் -

அரச அலுவலகங்களில் கடமை புரியும் இணைந்த சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் அதனுடன் சார்ந்த சேவையாளர்களுக்கானது என்றும் -

வடக்கு - கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ். மாவட்ட அரச அலுவலகங்களில் சேவைபுரியும் ஊழியர்களுக்கான ஆங்கிலப் பயிற்சி வகுப்புக்கள் தற்போது யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. இப்பயிற்சி நெறியில் பங்குகொள்ள உள்ள அரச ஊழியர்களின் பெயர் விவரங்கள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களினால் வடக்கு - கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களத்துக்கு ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே. (எ-51)

## ஆனைக்கோட்டைப் பகுதியில் வடிசாலை நிறுவ ஏற்பாடு

ஆனைக்கோட்டைப் பகுதியில் போத்தலில் சாராயம் அடைக்கும் வடிசாலையொன்று விரைவில் நிறுவப் படவுள்ளது.

வலிகாமம் பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்களின கொத்தணி இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

கொத்தணியால் நிறுவப்படவுள்ள வடிசாலை மற்றும் சாராயம், கள் அடைக்கும் நிலையத்துக்கான உபகரணங்கள் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படவுள்ளன என கொத்தணியின் தலைவர் ஆ.மெய்யழகன் தெரிவித்துள்ளார்.

மேற்படி நிறுவனத்தை பதினைந்து கோடி ரூபா செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் -

இதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் - அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-152)

## மருதனார்மடத்தில் விவசாயப் பயிற்சி

### விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

வலிகாமம்தெற்கு,டிசெ.15

விவசாயத்தை சுயதொழிலாக மேற்கொள்ள விரும்பும் அல்லது தொழில்வாய்ப்பைத் தேடிக்கொள்ள விரும்பும் படித்த வாலிபர், யுவதிகளுக்கு மருதனார்மடம் யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம் இலவசமாக விவசாய டிப்ளோமா பயிற்சிகளை வழங்கவுள்ளது.

இதற்காக ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் சித்தியடைந்த 17 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவர்களிடமிருந்து நிறுவனம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

ஒருவருட காலம் வழங்கப்படும் இப்பயிற்சி நெறியில் பங்குபற்றுபவர்களுக்கு பயிற்சிநெறிக் காலத்தில் நிறுவனத்தினால் உதவுதொகையும் பயிற்சியின் முடிவில் சான்றிதழும் வழங்கப்படும்.

இப்பயிற்சிநெறியில் விவசாய மூலதத்துவம், பூங்கனியியல், பயிரியல், பண்ணை முகாமைத்துவம், கமப்பொறியியல் (ஆண்களுக்கு மட்டும்), பிருகபரிபாலனம், மனைப் பொருளியல் (பெண்களுக்கு மட்டும்), மற்றும் ஆங்கிலம் போன்ற பாடங்களில் பயிற்சிகள் வழங்கப்படும்.

இப் பயிற்சி நெறிகளில் கலந்து பயில விரும்புவோரை இம்மாதம் 22 ஆம் திகதி மேற்படி நிறுவனத்தில் நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்கு நேரில் வருகைதருமாறும் -

நேர்முகப் பரீட்சைக்கு வரும் போது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்வித்தகைமைப்பத்திரங்கள், கிராம சேவையாளரின் சான்றிதழ், இரண்டு நற்சான்றுப் பத்திரங்கள் என்பவற்றை தம்முடன் எடுத்து வருமாறும் விவசாய நிறுவனத்தின் அதிபர் அறிவித்துள்ளார். (எ-152)

## முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினால் அதற்குத் தமிழ்க் கூட்டமைப்பும் பொறுப்பு

### முன்னாள் முஸ்லிம் எம்.பிக்கள் - ஸ்ரீல.மு.கா. சந்திப்பில் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.15

தமது சமூகத்தின் தற்பாதுகாப்புக் கருதி முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதங்களை ஏந்த நேர்ந்தால் அதற்கு ஜனாதிபதியும், அரசும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புமே பொறுப்பு.

- இவ்வாறு வடக்கு-கிழக்கு முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய முன்னாள் எம்பிக்களுக்கும் முஸ்லிம் காங்கிரஸினருக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த வியாழக்கிழமை இரவு கொழும்பு ஹைதாரி ஹோட்டலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கும், வடக்கு - கிழக்கு முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய முன்னாள் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையே நடைபெற்ற விசேட கலந்துரையாடல் ஒன்றின் போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்திய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.அப்துல் மஜீத், எம்.ஸீ.அஹமத், எம்.அப்துல் மஜீத் (முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்) எம்.ஐ.உதுமா லெப்பை, ஏ.ஆர்.மன்சூர் ஆகியோர் இதில் பங்குபற்றினர்.

வடக்கு - கிழக்கு முஸ்லிம்களின் பாதுகாப்பு, இருப்பு, அரசியல் அபிலாஷைகளை அடைதல் ஆகியவை தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவத்தோடு முழுமையாக ஒத்துழைப்பதாக வடக்கு - கிழக்கு முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய முன்னாள் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இங்கு தீர்மானித்துள்ளனர்.

பல்வேறு மட்டங்களிலும் மக்கள் பிரதிநிதிகளாகப் பதவி வகித்தோரும், வகிப்போரும் முஸ்லிம்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஒன்றிணைந்து செயல்படுவதன் அவசியம் பற்றி இக்கலந்துரையாடலின் போது வலியுறுத்தப்பட்டது.

ஜனாதிபதியும் அரசும் பெற்றுள்ள மக்கள் ஆணையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வாக்குப் பலமும் உள்ளடங்கி உள்ளதாக அமைச்சர் ஹக்கீம் அங்கு கூறினார். முஸ்லிம்களின் பாதுகாப்புக்குப் பாரிய அளவில் அச்சுறுத்தல் ஏற்படுத்தப்பட்டிருக்கும் இந்த இக்கட்டான கால கட்டத்தில், முஸ்லிம்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்கும் பொறுப்பை ஜனாதிபதியும் பிரதமரும் தட்டிக் கழித்துவிட முடியாதென்றும், தற்பொழுது முஸ்லிம்களின் பாதுகாப்பில் அவர்கள் காட்டும் கரிசனை போதாதென்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. முஸ்லிம்களின் பாதுகாப்புச் சரிவர உறுதிப்படுத்தப்படாவிட்டால் இதுவரை காலமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அவர்களை ஜனநாயக ரீதியாக நெறிப்படுத்தி வந்ததில் இருந்து முஸ்லிம் இளைஞர்கள் விடுபட்டு தங்களது சமூகத்தின் தற்பாதுகாப்புக்காக வேறுவழிவகைகளைக் கையாள நேரலாம். அவர்களை அந்த நிலைமைக்கு இட்டுச் சென்றதற்கு ஜனாதிபதியும், அரசும் முற்றிலும் பொறுப்புணர்ச்சியற்ற விதத்தில் நடந்து கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பொறுப்பேற்க வேண்டும் என்றும் அங்கு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

முஸ்லிம்கள் தொடர்பாக தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகம் போன்றோரின் கொள்கை, கோட்பாடுகள் என்பன கைவிடப்பட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முஸ்லிம்கள் விடயத்தில் இப்பொழுது மிகவும் வெறுக்கத்தக்க போக்கைக் கடைப்பிடித்து வருகிறது.

தமிழரசுக் கட்சியின் தோற்றம் தொட்டு தமிழர் விடுதலைக் கூட்டணி தனித்து இயங்கிய காலம்வரை கையாளப்பட்ட முஸ்லிம்கள் தொடர்பான அணுகுமுறை இப்பொழுது முற்றிலும் மாறி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்ட பின்னர் அதிலும் குறிப்பாக அண்மைக் காலமாக முஸ்லிம்கள் பற்றி அவ்வமைப்பைச் சேர்ந்த சிலர் வெளியிட்டு வரும் விஷமத்தனமான விமர்சனங்கள் வன்மையாகக் கண்டிக்கத்தக்கவை என இக்கலந்துரையாடலின் போது தெரிவிக்கப்பட்டது.

முஸ்லிம்கள் மத்தியில் நிலைமையை எடுத்து விளக்கி, இதனை மக்கள் மயப்படுத்தும் பணியில் தொடர்ந்து ஈடுபடுவதாகவும் தீர்மானிக்கப்பட்டது. அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொறுப்பை முன்னாள் கல்முனைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஸீ. அஹமத் மேற்கொள்வார். (ஓ)

## M.A. (காமராஜர் பல்கலைக்கழகம்)
## பரீட்சை தொடர்பான முக்கிய அறிவித்தல்

16 ஆம் திகதி நடைபெறவிருந்த M.Com., M.A. முதலாம் ஆண்டுப் பரீட்சை எதிர்வரும் (26.03.2004) வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது என்பதனை அறியத்தருகின்றோம்.

யாழ். இணைப்பாளர் (காமராஜர் பல்கலைக்கழகம்),
புதிய உயர்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(12-17) (25855)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை மாணவன்
**இராசையா கிரிசாந் (தரம்2)**

அவர்கள் 13.12.2003 இல் அகாலமரணமடைந்ததையிட்டுத் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்,
(25857)(12-17) யா/கல்வயல் ஸ்ரீசண்முகானந்த வித்தியாலயம், சாவகச்சேரி.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி குமாரசாமி வள்ளியம்மை (சீமா)

வட்டு. கிழக்கு, சித்தன்கேணியைச் சேர்ந்த திருமதி குமாரசாமி வள்ளியம்மை 13.12.2003 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிற்றம்பலம் குமாரசாமியின் (சட்டத்தரணி) அன்பு மனைவியும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை (கிராமசேவையாளர்) இரத்தினேஸ்வரியம்மாவின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.12.2003) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*வட்டு.கிழக்கு,*
*சித்தன்கேணி.* (25866)(36-12-17) **வே. மகிழ்ராஜன்** (பேறாமகன்).

## சுப்பையா பரராஜசிங்கம் (அருமை)
### (உரிமையாளர் - அருமை போசனசாலை, யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இந்தியா திருச்சியில் வசித்தவருமான சுப்பையா பரராஜசிங்கம் ( உரிமையாளர், அருமை போசனசாலை, இல.8,10, ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கை, யாழ்ப்பாணம்) அவர்கள் நேற்று (14.12.2003) ஞாயிற்றுக்கிழமை திருச்சியில் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*க.சிவஞானம்,*
*இல.32,பிரப்பங்குளம் வீதி,*
*கே.கே.எஸ்.வீதி,*
*யாழ்ப்பாணம்.* (25871)(36-12-17)
**கு.சந்திரன்** (கிராமஅலுவலர்)
**T.P.-0431 2782376** (திருச்சி)

## வைரவன் நல்லையா

தொல்புரம் மேற்கு, சுழிபுரத்தைச் சேர்ந்த வைரவன் நல்லையா நேற்று (14.12.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2003) திங்கட்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா.செல்வமலர் (மகள்)
*தொல்புரம் மேற்கு,*
*சுழிபுரம்.*
(25874)(36-12-17)
**கந்தன் நாகமணி** (மருமகன்)
(இலங்கை வங்கி, மானிப்பாய்)

## சுப்பையா பரராஜசிங்கம் (அருமை)
### (அருமை போசனசாலை உரிமையாளர்)

புங்குடுதீவைச் சேர்ந்தவரும் தற்போது இந்தியாவில் வசித்தவருமாகிய சுப்பையா பரராஜசிங்கம்(அருமை) அவர்கள் நேற்று (14.12.2003) இந்தியா-திருச்சியில் காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*இல.32,பிரப்பங்குள லேன்,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.* (25872)(36-12-17)
**க.சிவஞானம்** (மைத்துனர்)
**ச.ஜெகதாஸ்** (மருமகன்)
(மாருதி சைவ உணவகம்)

## நவரத்தினம் கருணாகரன் (MASTER)
### (வடபிராந்திய போக்குவரத்துச் சபை சிரேஷ்ட சாலைப் பரிசோதகர்)

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் கருணாகரன் 13.12.2003 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நவரத்தினம் - பாக்கியம் தம்பதிகளின் அன்புப் புதல்வனும், யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், சுமதி (பிரான்ஸ்), சுதா (பிரான்ஸ்), குமரன், சுகுணா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரவீந்திரா (பிரான்ஸ்), சுந்தரகுமாரன் (பிரான்ஸ்), கலா ஆகியோரின் அன்பு மாமனாரும், மனோகரன், உமாபதிசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.12.2003) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சியாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*குறுக்குறோட்,*
*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.* (25890)(36-12-17)
**க.குமரன்** (மகன்)

## தம்பு ஐங்கரன்

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பு ஐங்கரன் அவர்கள் நேற்று (14.12.2003) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சுபீனாவின் அன்புக் கணவரும் சுபாசினி, பிரியதர்சினி, லிலோசினி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற தம்பு(ஆசிரியர்)-அன்னலட்சுமி தம்பதிகளின் புதல்வரும் நாமகள், திலீப்குமார் (டென்மார்க்), கோமகள், ஸ்ரீகரன் (யாழ்.பல்கலைக்கழகம், வர்த்தகம் 4ஆம் வருடம்), ஜெயமகள் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*ஏழாலை மேற்கு, ஏழாலை.* (25873)(12-17) **த.ஸ்ரீகரன்** (சகோதரன்).

## அதிபர் கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.15

நல்லூர்க் கல்விக் கோட்ட அதிபர்களுக்கென நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த கூட்டம் ஒத்திவைக்கப்பட்டு, நாளைமறுதினம் புதன் கிழமை காலை 9.30 மணிக்கு, முன்னர் அறிவித்த இடத்தில் நடைபெறும் என கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச. காங்கேசன் அறிவித்துள்ளார். (எ)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

**அமரர் வன்னியசிங்கம் சிறிதரன் (குரும்பசிட்டி)**

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசனமும் நாளை (16.12.2003) செவ்வாய்க்கிழமை ஏழாலை வசந்த நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் இடம்பெறும் என்பதனை அறியத்தருகின்றோம். மிகுதி விவரம் நாளைய உதயனில்.

- மாமா குடும்பத்தினர்.

(25876)(12)


## உடன் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள
1. Toshiba - Labtop - P II 366,6.4 G.b.
With Multi Media - 42,000/=
64 MB , is each display - 42,000/=
2. Honda cb 125 T- மோட்டார் சைக்கிள்
தொடர்பு:
**A.செல்வா**
**222 6316**
**077 6068517**
(C-32011)(12)

## ஜூபிலி அக்கடமி
சண்டிலிப்பாய்

SPOKEN ENGLISH
WITH GRAMMAR
BY: V.விஜயபாஸ்கர்
ஆரம்பம்:இன்று (15.12.2003)
நேரஅட்டவணை 3.30 (ப.நே.)
திங்கள், புதன் 3.30 - 4.30 (ப.நே.)
V.N. பத்மநாதன் (நிர்வாகி).
(25873)(12)

## நத்தார் மலிவு விற்பனை

4 C.D COVER 44/=
2 C.D COVER 22/=
T.D.K - D கசெற் 44/=
மற்றும் பழைய - புதிய திரைப்படப் பாடல்கள் C.D
(வியாபாரிகளுக்கு விசேட கழிவு)
தொடர்பு:
**விடியோ எக்கனமி**
297, பலாலி வீதி, திருநெல்வேலி.
T.P. - 077 6072210
(25869)(12)

## லஷ்சுமி சினிமா
இணுவில்

விஜய், ஜோதிகா மற்றும் விவேக் நடித்த
**குஷி** (பிலிம்)
காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30. (ப.நே.)
(C-31813)(32)

## நாகம்ஸ் சுன்னாகம்

இன்று முதல்
விக்ரம், ஜோதிகா, மற்றும் ரீமாசென் நடித்த
**தூள்** (பிலிம்)
தினசரி காட்சி : 11.00, 3.00, 7.00. (ப.நே.)

## லிபேட்டி
அச்சுவேலி

இன்று முதல்
மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி மணிவண்ணன் நடித்த
**பிரியமான தோழி** (பிலிம்)
காட்சிநேரம்: , 3.00, 7.00. (தினசரி)
சனி, ஞாயிறு- 11.00, 3.00, 7.00 (ப.நே.)

## நிறைஞ்சனாஸ்
சங்கானை

விஜயகாந், கிரண் நடித்த
**தென்னவன்** (பிலிம்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (ப.நே.)
வெள்ளி முதல் JACKIE CHAN நடித்த
WHO AM IT (கராட்டிப்படம்)
இரவு 8.45 இந்து (ப.நே.)
(C-31919)(12)

## ராஜா யாழ்ப்பாணம்

தருண், த்ரிஷா, விவேக், மணிவண்ணன் நடித்த
**எனக்கு 20 உனக்கு 18** (பிலிம்)
காட்சிகள்:
10.30,2.30,6.30,9.30 (ப.நே.)
ஆசனங்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளலாம்.






## கண்ணீர் அஞ்சலியும் துயர்பகிர்வும்

திருமதி
**சாந்தினி ஆனந்தராசா** B.A.Dip. in Ed.

எமது பாடசாலையின் புகழ்பூத்த முன்னாள் மாணவியும் இந்நாள் ஆசிரியையுமான

திருமதி சாந்தினி ஆனந்தராசா அவர்களின் மறைவையிட்டு அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்! அவரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்கிறோம். அவரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம்வல்ல நடராசப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

இளவாலை வடக்கு,
இளவாலை.
(25861) (18-12-17)
பாடசாலைச் சமூகம்,
யா/இளவாலை
மெய்கண்டான் ம.வி.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சாந்தினி ஆனந்தராசா
### (ஆசிரியை, இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்)

இளவாலையைச் சேர்ந்த திருமதி சாந்தினி ஆனந்தராசா அவர்கள் 14.12.2003 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தசாமி தெய்வேந்திரம் தம்பதிகளின் அன்பு மகளும் ஆனந்தராசா அவர்களின் அருமை மனைவியும் துரையர் - ராசாத்தி தம்பதிகளின் அன்பு மருமகளும் நவராஜ், நவராஜி, துவாரகன், சௌதாயினி ஆகியோரின் அன்புத் தாயாரும் மோகனதாஸ், வசந்தி, நந்தினி, வசந் ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஜெயாயினி, சௌந்தரன், தவபாலசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.12.2003) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இளவாலையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*இளவாலை வடக்கு,*
*இளவாலை.* (25862)(34-12-17)
**து.ஆனந்தராசா** (கணவர்).

## அல்பேட் நோயல் மணிமாறன்
### (ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி)

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையைப் வசிப்பிடமாகவும் கொண்ட அல்பேட் நோயல் மணிமாறன் நேற்று (14.12.2003) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் கே.ஏ.சின்னத்தம்பி (இளைப்பாறிய ஆசிரியர்) - திருமதி மனோன்மணி சின்னத்தம்பி (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் அன்பு மகனும் கலைவாணியின் அன்புக் கணவரும் அஞ்சலோ, அன்றூ (மாணவர்கள்-யாழ்ப்பாணக் கல்லூரி), அஞ்சலி ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் யோ.மணிவண்ணன் (சுவிஸ்), நோபின் சுரேந்திரன் (விரிவுரையாளர்,விலங்கியல்துறை, யாழ்.பல்கலைக்கழகம், நிகால் சுரேன் குமார் (பிரதேச சபை, சுழிபுரம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சண்முகராஜா, திருமதி மங்களேஸ்வரி சண்முகராஜா (U.K.) ஆகியோரின் அன்பு மருமகனும் கணேசராஜா (U.K.), ஞானலிங்கம் (U.K.), ஐங்கரன் (U.K.) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை கல்லூரி வீதி, வட்டுக்கோட்டையில் உள்ள வீட்டில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கம் பண்டத்தரிப்பில் உள்ள தென்னிந்தியத் திருச்சபை சேமக்காலையில் நாளை (16.12.2003) செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*கல்லூரி வீதி,*
*வட்டுக்கோட்டை.* (C-32035)(12-17) **ம.கலைவாணி** (மனைவி)

## திருமதி ராமப்பிள்ளை தங்கம்மா

இணுவில் தெற்கைப்பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ராமப்பிள்ளை தங்கம்மா 14.12.2003 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் ராமப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இளையாம்பி தெய்வானைப்பிள்ளையின் அன்பு மகளும் காலஞ்சென்ற ரத்தினம்மா மற்றும் செல்லம்மாவின் அன்புச் சகோதரியும் பற்குணன் (ஆஸ்திரேலியா-பொறியியலாளர்), யோகராணி ரத்தினேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற துரைராசா மற்றும் பாலகிருஸ்ணன் புஸ்பா தேவி ஆகியோரின் அருமை மாமியும் நந்தினி (சுவிஸ்), நந்தகுமார் (லண்டன்), ராசகுமார் (ஆஸ்திரேலியா), ஜெயக்குமார் (யாழ். பல்கலைக் கழக கலைப்பீடம்), பாலகுமார் (யாழ்.இந்துக் கல்லூரி), சசிகரன் (ஆஸ்திரேலியா-பொறியியலாளர்), சர்மிளி (ஆஸ்திரேலியா), நிருபன் (பிரான்ஸ்) ஜெயரூபன்(பொறியியல்துறை மாணவன், மொறட்டுவைப் பல்கலைக் கழகம்), சோபனா (யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2003) திங்கட்கிழமை பி.ப.2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*இணுவில் தெற்கு ,*
*இணுவில்* (25865) (36-12-17) **வே.ராமப்பிள்ளை** (கணவர்)

## சீனிவாசகம் தர்மலிங்கம்

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, தெகிவளையைப் வசிப்பிடமாகவும் கொண்ட சீனிவாசகம் தர்மலிங்கம் 13.12.2003 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சீனிவாசகம் - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகனும் பரமேஸ்வரியின் (யமுனா) அன்புக் கணவரும் குமார் (லண்டன்), விஜயா (கனடா), உஷா (டென்மார்க்), அனுஷா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நவரட்ணம், செல்லத்துரை, பத்மநாதன் (கனடா), சோதிமணி, சோதிமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கந்தசாமி, நற்குணம், அமிர்தாம்பாள் (அமுதர்), லீலாவதி, கருணாநிதி, பத்மநாதன், ஜெகதீஸ்வரன், இராசமணி, கமலாதேவி, புஸ்பம், ஞானப்பிரகாசம், சிவஞானம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிவாஜினி (லண்டன்), ஜெயநேசன் (கனடா), மகேந்திரன் (டென்மார்க்), ஸ்ரீதரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பூபதி, லீலாவதி , கதிரவேலு, ரஞ்சிதமலர், அருந்ததி, உஷா ஆகியோரின் சகலனும் நவீன், கௌசிகா, கனிசிகா, ஜெனாத், சிவறாஜன், விதுஜன், வருண் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல், அஞ்சலிக்காக 17.12.2003 புதன்கிழமை காலை 9 மணியளவில் வதிவிட இல்லத்திலிருந்து கல்கிசை சந்தியில் அமைந்துள்ள மகிந்த மலர்ச்சாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு, அங்கு மதக்கிரியைகள் செய்யப்பட்டு, தகனக் கிரியைக்காக கல்கிசை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுத் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*34, ஞானஜெயகம ,*
*வைத்தியா றோட்,தெகிவளை.*
*T.P.- 4 208495* (C-32011)(12-17)
**த.குமார்** (மகன்)
**மா.கருணாநிதி** (மைத்துனர்)




நேற்று கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற எல்லைப்படை மாவீரர் ஞாபகார்த்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் வெற்றிபெற்ற இளவாலை யங்ஹென்றஸ் அணி வீரர்கள், பிரதம விருந்தினர் என். எதிர்வீரசிங்கத்திடமிருந்து வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம். (படம் :- வசந்தன்)

## பஸ் - ஓட்டோ மோதி விபத்து!

யாழ். பலாலி வீதியில் அம்மன் வீதிச் சந்திக்குச் சமீபமாக நேற்றிரவு பஸ் ஒன்றும் ஓட்டோவும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் ஓட்டோ சாரதி உட்பட இருவர் படுகாயமடைந்தனர்.

விபத்துக்குள்ளான ஓட்டோ படுமோசமாகச் சேதமடைந்தது.

ஊர்காவற்றுறை, கரம்பன் இறக்கைச் சேர்ந்த முருகேசு சாந்தகுமார் (வயது 34), நயினாதீவு 9ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பேரம்பலம் நந்தகோபால் (வயது 50) ஆகிய இருவருமே படுகாயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து தொடர்பான பூர்வாங்க விசாரணைகளை சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ். பொலீஸ் நிலையப் போக்குவரத்துப் பொறுப்பதிகாரி சேனாதீர தலைமையிலான குழுவினர் மேற்கொண்டனர். (ஐ-9)



கைதானபோது சதாமின் தோற்றம்.

# புலிகளின் வரி விதிப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) யில் தன்னிறைவடைவதை ஊக்குவிப்பதையும் முக்கிய நோக்கங்களாகக் கொண்டு இத்தொழில்களுக்கான முக்கிய உள்ளீடுகள், பொறிகள், கருவிகள் மீதான தீர்வைகள் நீக்கப்படுகின்றன. அதே நோக்கங்களுக்காகச் சில பொருள்களின் தீர்வைகள் உயர்த்தப்பட்டுள்ளன.

மேலும் மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்காக வழிபாட்டுப் பொருள்கள் சிலவற்றின் தீர்வைகள் நீக்கப்பட்டுள்ளன. வீட்டுப்பயன்பாட்டுப் பொருள்களின் தீர்வைகள் குறைக்கப்பட்டுள்ளன.

மக்களின் அறிவு வளர்ச்சியை ஊக்குவித்து மேம்படுத்துவதற்காக புத்தகங்கள், சஞ்சிகைகள் மீதான தீர்வை முற்றாக நீக்கப்படுகின்றது.

எமது மக்களின் நலன்கருதி இத்தீர்வை மாற்றங்களுக்கேற்ப பொருள்களின் விலைகளிற் பொருத்தமான மாற்றங்களைச் செய்து ஒத்துழைக்குமாறு தொடர்புடைய வணிகர் அனைவரையும் வேண்டுகிறோம்.

- இவ்வாறு செ.தமிழேந்தி தெரிவித்தார்.

தீர்வை நீக்கம் மற்றும் தீர்வைக் குறைப்பு ஆகியன அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருகின்றன. ஆனால், தீர்வை அதிகரிப்பு உடனடியாக - இன்று டிசெம்பர் 15ஆம் திகதி தொடக்கம் - நடைமுறைக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### தீர்வை நீக்கம்

பின்வரும் பொருள்களுக்கான தீர்வைகள் நீக்கப்படுகின்றன: (அடைப்புக் குறிக்குள் இதுவரை இப்பொருள்களுக்கு விதிக்கப்பட்டு வந்த தீர்வையின் அளவு குறிப்பிடப்பட்டுள்ளது.):-

புத்தகங்கள், நாவல்கள், கதைப் புத்தகங்கள், சஞ்சிகைகள் (20வீதம்), வேளாண் உள்ளீடுகள் (5வீதம்), மீன்பிடிப்படகு ஒட்டும் பசை (10வீதம்), மரங்கள் (5வீதம்), கால்நடை உணவு (கிலோவுக்கு ஒரு ரூபா), படகுகள் (5 வீதம்), வெளியிணைப்புப் பொறிகள் (5வீதம்), வேளாண் தொழில்சார் பொறிகள் (5வீதம்), கடற்றொழில் வலைகள் பிணைகள், மிதப்பிகள் (5 வீதம்), கடற்றொழில் கருவிகள் (10 வீதம்), மெழுகுதிரி (25வீதம்), கற்பூரம் (25வீதம்) இனிமேல் இப்பொருள்கள் அனைத்துக்கும் தீர்வை இல்லை.

### தீர்வைக் குறைப்பு

சில பொருள்கள் மீதான தீர்வைகள் குறைக்கப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு:

அடைப்புக்குள் முறையே தற்போதைய தீர்வையும், புதிய தீர்வையும் :-

சுவையூட்டப்பட்ட பால்வகைகள் (10வீதம் - 5வீதம்), தேயிலை, கோப்பி (7வீதம் - 5வீதம்), சுவையூட்டப்பட்ட தேயிலை, கோப்பி (10வீதம் - 5வீதம்), கருவாடு (15வீதம் - 7வீதம்), திரைச்சேலைகள், மேசை விரிப்புகள் (20 வீதம் - 10வீதம்), அலுமினியப் பொருள்கள், வெள்ளிப் பொருள்கள், கல்வனைஸ் வாளிகள், ஏனைய வீட்டுப் பயன்பாட்டுப் பொருள்கள் (20வீதம் - 15வீதம்).

### தீர்வை கூடுதல்

கோழி இறைச்சி மற்றும் இறைச்சிக் கோழி ஆகியவற்றுக்கான தீர்வை 10 வீதத்திலிருந்து 15 வீதமாக இன்று முதல் உயர்கின்றது.

அதேபோன்று கோழி முட்டைக்கான தீர்வை ஒரு ரூபாவிலிருந்து 2 ரூபாவாக அதிகரிக்கின்றது.

### தீர்வைக் கணிப்பு மாற்றம்

இதுவரை காலமும் இறக்குமதி அரிசிக்கு கிலோ ஒன்றுக்கு ஒரு ரூபா எனத் தீர்வை அறவிடப்பட்டது. இனிமேல் - அதாவது இன்று முதல் - அந்த அரிசியின் பெறுமதிக்கு 7 வீதத் தீர்வை அறவிடப்படும்.

இதேபோன்று உராய்வு நீக்கிகளுக்கு இதுவரை கிலோ ஒன்றுக்கு 5 ரூபா என அறவிடப்பட்ட தீர்வை இனிமேல் அதன் பெறுமதிக்கு 7.5 வீதமாக அறவிடப்படும்.

இந்த மாற்றங்களுக்கு ஏற்ப நடைமுறையாகும் புதிய தீர்வை மாற்றங்கள் தொடர்பான பட்டியல் 16 ஆம் பக்கத்தில் உள்ளது.

## குண்டு வெடிப்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கொண்டிருந்த சமயமே இச்சம்பவம் இடம்பெற்றது என்று பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி முஷாரப்பின் வாகன அணி ராவல் பிண்டி நகரில் உள்ள பாலம் ஒன்றைக் கடந்த சில விநாடிகளில் அங்கு மறைத்துவைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்தது.

இச்சம்பவத்தில் உயிரிழப்பு ஏற்படவில்லையாயினும், அந்தப் பாலம் கடுமையாகச் சேதமடைந்தது.

பொலீஸாரும் படையினரும் குண்டு வெடித்த இடத்துக்கு விரைந்தனர். அங்கு தேடுதல்கள் நடந்தன. குண்டு வெடித்த பகுதி, மக்கள் போக்குவரத்துக்குத் தடைசெய்யப்பட்டிருந்தது.

## சதாம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கின்றார் என்றும் ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படைகளின் தளபதி ஜெனரல் ரிக்கார்டோ தெரிவித்துள்ளார்.

சதாம் கைதுசெய்யப்பட்டமை தொடர்பாக அமெரிக்க வெள்ளை மாளிகை கருத்து வெளியிடுகையில் - ஈராக் மக்களுக்குக் கிடைத்த மிக நல்ல செய்தி இது. கொடூரமான அந்த சர்வாதிகாரி இனி மீண்டும் வரமாட்டார் என்பதை ஈராக் மக்கள் அவர்களாகவே புரிந்து கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளது.

சதாம் பிடிபட்ட உடனேயே தாடி அகற்றப்பட்ட பின்னரும் எடுக்கப்பட்ட ஒளிநாடாவை அமெரிக்கப் படைகள் நேற்று வெளியிட்டன. அவற்றை உலகெங்கும் உள்ள பல்வேறு தொலைக்காட்சி ஊடகங்கள் ஒளிபரப்பின. (ஐ-9)

# சதாம் கைதானது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வளைக்கப்பட்டது.

அங்கு ஒருவர் மட்டும் நுழைந்து செல்லக் கூடிய-உள்ளே குண்டு துளைக்காத பல அடுக்குக்களைக் கொண்ட-ஆறு மீற்றர் ஆழமுடைய பாதாள அறையைக் கண்டுபிடித்து அதற்குள் அமெரிக்கப் படையினர் பாய்ந்தனர்.

படையினரைக் கண்டவுடன் அங்கிருந்த சதாம், பாதாள அறையினுள் உள்ள இன்னொரு குழிக்குள் இறங்கித் தன்னை மண்ணால் மூடிக் கொண்டார்.

அவரைச் சுற்றிவளைத்த படையினர் மண்வெட்டியால் மண்ணை விலக்கி, சதாமை வெளியே மீட்டனர்.

எதுவித எதிர்ப்புமின்றி அவர் கைது செய்யப்பட்டார். அமெரிக்கப் படையை எதிர்த்துப் போரிடக்கூடிய படையணி ஒன்று சதாமுடன் அங்கு இருக்கவில்லை. இந்த முற்றுகையின் போது ஒரே ஒரு வெடிச்சத்தம் கேட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால், எவருக்கும் எந்தக் காயமும் ஏற்படவில்லை.

சதாமிடமிருந்து ஏ.கே.47 இயந்திரத் துப்பாக்கிகள் இரண்டும், ஏழு லட்சத்து ஐம்பதினாயிரம் அமெரிக்க டொலர் பணமும் மீட்கப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

தன்னிடம் ஆயுதங்கள் இருந்த போதும் தன்னை வளைத்துப் பிடித்த அமெரிக்கப் படையினரை எதிர்த்துப் போரிடும் திராணி சதாமுக்கு இருக்கவில்லை என்று செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன. (ஐ-9)

O/L எடுத்தவர்களுக்கான புதிய பிரிவுகள்
ஆரம்பம்: 21.12.2003
OXFORD ENGLISH ACADEMY
தெளிவாகப் பேசக் கூடியதாக இலகுவான முறையில
(EN ENGLISH
ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
By.Mr.B.Jothy
பருத்தித்துறையில்- நேரம்-பி.ப.2.00 மணி
P.K.Lane, நெல்லியடியில்- நேரம்-பி.ப.3.15 மணி
அனுமதியை MATHS CENTER இல் பெறவும். (25801)(36)

O/L ENGLISH - 2003
வினாத்தாள் விடைகளுடன்
தொகுப்பு:க.தனேந்திரன்
B.Com(Hons), M.M.spl, H.N.Dip. in Acc.
பகுதிநேர விரிவுரையாளர் (English)
தொழில்நுட்பக் கல்லூரி
(25875)(36)

CHEMISTRY CENTRE
Temple Road, நல்லூர்
A/L 2004
★ Paper Cless
Teu.4 - 5 & Fri.5.30 - 6.30
★ அயலன் சமனிலை
Mon., Tue. 5.30 - 6.30p.m.
BY: அன்பழகன்

CHEMISTRY CENTRE
Temple Road, நல்லூர்.
A/L 2006
ஆரம்பம்: 16.12.2003
Tue. 1.00 p.m.
★ வழமையான யாழ். நகரின் முன்னணி ஆசிரியர் குரு.
(சி-32014)

IIS
புலமைப்பரிசில் திட்டம்-2004
விண்ணப்பித்துவிட்டீர்களா?
இன்றே இறுதிச் சந்தர்ப்பம்.
தவறவிடாதீர்கள்!
வருந்த நேரிடும்.

IIS
கல்வியாண்டு 2004/2005
புதிய பிரிவுகள் ஆரம்பம்
மேற்படி கல்வியாண்டுக்குரிய புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.

ஈ.சன் கல்வி நிலையம்
ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்பு.
திரு.தவசேகர் (B.Sc.)
TUE., FRI. 4.30 - 6.30
ஆரம்பம் :- 16-12-2003. TUE.
(28814)(36)

W SCIENCE COLLEGE
PHYSICS
2004 சடப்பொருளும் கதிர்ப்பும்(Radiation)
பிரிவு:-1 செவ்., வியா.- 5-6 (p.m.)
பிரிவு:-2 திங்கள், புதன்-6.15-7.15 (a.m.)
2005 ஒளியியல்
சனி, ஞாயிறு-11-12
அலகு ரீதியான மீட்டல் செவ்., வியா. -6-7 (p.m.)
BY.R. குகன் ( B.Sc.)
(25843)(36-12-11-17-18-31)

கணனியில் எழுத்துக்கள் வியாபார சின்னங்கள் வடிவமைத்து றபர் ஸ்ராம்ப் செய்து கொள்ள நாட வேண்டிய இடம்.
ONE HOUR NYLON STAMPS
Pillayar press, nallur
பிள்ளையார் அச்சகம், நல்லூர். T.P. 222 6722

அன்றும், இன்றும் இனி என்றென்றும்
இவர் தானா?
ஆம் ----> 03.01.2004 இல்
(25548)(31)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நடராசா (விக்கினராசா) மகாலட்சுமி அம்மா

தாவடி வடக்கைச் சேர்ந்த திருமதி நடராசா (விக்கினராசா) மகாலட்சுமி அம்மா அவர்கள் நேற்று (14.12.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை (தம்பாப்பிள்ளை அம்மான்) - கனகம்மா தம்பதிகளின் மூத்த மகளும் சண்முகநாதன் (கொலண்டாவில்), கமலேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற வேலும்மயிலும் (இணுவில்) ஆகியோரின் சகோதரியும் கமலாதேவி (ஜேர்மனி), சுசீலாதேவி, சிவராசா (ஜேர்மனி), வசந்தகுமாரி (ஜேர்மனி) ஆகியோரின் தாயாரும் பேரம்பலமூர்த்தி (ஜேர்மனி), செல்வராசா, அகிலா (ஜேர்மனி), ஞானேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும் அபிஷையா, கிஷ்ணை, அபிசாலினி, விஷாலுயன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (15.12.2003) திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகத் தாவடி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாரிதோட்டம், தாவடி வடக்கு.

தகவல்: நடராசா (விக்கினராசா-கணவர்).

(25879)(18-14-12-31)

## செல்வன் முத்துக்குமாரசுவாமி யோககுமாரன்

கைதடியைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட செல்வன் முத்துக்குமாரசுவாமி யோககுமாரன் அவர்கள் நேற்று (14.12.2003) அகாலமரணமானார்.

அன்னார் செல்லப்பா முத்துக்குமாரசுவாமி (இளைப்பாறிய பிரதி அதிபர், யாழ். இந்துக்கல்லூரி), முத்துக்குமாரசுவாமி தெய்வநாயகி (இளைப்பாறிய ஆசிரியை, யா/இந்துமகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் புதல்வரும், அனுஷ்யா, ஜெனி (அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர், கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், வைத்தியநிபுணர் சுரவிராஜ் (யாழ்போதனா வைத்தியசாலை), வேரமணா (Computer Land, Kollupitiya) ஆகியோரின் அருமை மைத்துனரும், குகப்பிரியன், பிரதாகினி, விஷ்ணுப்பிரியன், அஷ்வினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், திருமதி வி.பாலசுப்பிரமணியம், திருமதி யோகேஸ்வரநாயகம், திரு. திருமதி சண்முகசுந்தரலிங்கம் ஆகியோரின் பெறாமகனும் திரு. திருமதி சிவயோகசுந்தரம், டாக்டர் (திரு.திருமதி) யோகவிநாயகம் ஆகியோரின் மருமகனும், பா.சிவகுமாரன், பா.பாலகுமாரன், பா.சிவயோகநாதன், புனிதவதி, நீலவேணி, கிருபாகரன், சிவகெங்கா, தயாரூபி, கௌசல்யா, யோகராஜ், சாயிசன், யோகினி ஆகியோரின் முன்றச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் மரணக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இல.291, Fussels Lane, Colombo-06. T.P.2360860,0777-324184

தகவல்: செல்லப்பா முத்துக்குமாரசுவாமி (தந்தை). (சி-32041)(36)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.12.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.